# கண்ணும் கண்ணும் கலந்து



ரமணிசந்திரன்

# கண்ணும் கண்ணும் கலந்து

ரமணிசந்திரன்

# அத்தியாயம் -1

நல்ல விசாலமான பெரிய திருமண மண்டபம்தான்.

ஆனால், அதற்குச் சரியான கூட்டமும் இருந்துவிடவே, ஏசி மண்டபமாக இருந்தும், சுகந்தனுக்கு லேசாக வியர்க்கத் தொடங்கியிருந்தது!

சீக்கிரமே அங்கிருந்து கிளம்ப முடிந்தால் நன்றாக இருக்கும்! ஆனால், அப்போதுதான் தாலி கட்டி முடிந்திருந்தது. இன்னும், மாலை மாற்றுதல், மணவறையைச் சுற்றுவது, அம்மி மிதித்து, மெட்டி போடுவது . . எல்லாம் பாக்கி இருந்தன!

அந்தச் சடங்குகள் எல்லாம் முடிந்தபிறகுதான் பரிசு கொடுக்க முடியும்! பரிசைக் கொடுத்துவிட்டு, அதன் பிறகுதான் கிளம்பவும் முடியும்!

அப்போதும்கூடச் சாப்பிடாமல் விட மாட்டார்கள்! ஓசைப்படாமல் வந்து, இங்கே ஓரமாக உட்கார்ந்த மாதிரி, ஓசைப்படாமல் நழுவிச் செல்ல முடியாது!

சரி, இன்று அரைநாள் வேலை அவ்வளவுதான் என்று சற்று இலகுவாகச் சாய்ந்தவாறு உட்கார்ந்து, சுற்றிலும் நடப்பனவற்றைப் பொழுதுபோக்காகக் கவனிக்கத் தொடங்கினான் அவன்.

முதல் வரிசையில் உட்கார்ந்திருந்த ஒரு கோடீசுவரரைச் சுற்றிலும், பலாப்பழத்தை ஈ மொய்த்த மாதிரியில், நாற்காலிகளைக் கண்டபடி இழுத்துப் போட்டு, முடிந்தவரை அவரை ஒட்டிக்கொண்டு அமர்ந்திருந்தவர்களைப் பார்க்கையில், அவனுக்குச் சிரிப்பு வந்தது!

ஆளுக்கு ஒரு பக்கம், அவரோடு பேச முயற்சித்தால், பாவம், அவர் யார் பேச்சைக் கவனித்து, யாருக்குப் பதில் சொல்ல முடியும்?

ஒருமுறை, அவனது தொழிலைத் தொடங்கி வைக்கும்படி அழைக்கப் போனபோது, அவரே அந்தக் கோடீசுவரரே அவனிடம் சொன்னார். "இளைஞர்கள் தொழில் செய்து முன்னுக்கு வருவதைப் பார்க்க, எனக்கு மிகவும் பிடிக்கும், சுகந்தன்! ஆனால், நான் அங்கே வந்தேன் என்று வை., உன் தொழிலின் தொடக்க விழா என்பதையே மறந்து, எல்லோரும் என்னைச் சுற்றிக்கொள்வார்கள்! அசட்டு பிசட்டு என்று, கிறுக்குத்தனமான பேச்சு வேறு! வெறுத்துப் போகும்! அதைவிட, நான் இங்கிருந்தே, உன்னை வாழ்த்துகிறேன்! அங்கே விளக்கேற்றுகிற நேரத்தைச் சொல்லு! குறித்து வைத்துக்கொண்டு, சரியாக அந்த நேரத்தில், உன் தொழில் சிறப்பாக நடக்க வேண்டும் என்று, கடவுளிடம்

மனமார வேண்டிக் கொள்கிறேன்! அங்கே வந்தால், ஒரே நினைவாக அதைச் செய்ய வழியிராது! என்ன சொல்லுகிறாய்? “என்று கேட்டு, “பரவாயில்லை, சார்! நீங்கள் இங்கிருந்தே என்னை வாழ்த்துங்கள்!” என்று அவன் வாயாலேயே சொல்ல வைத்தார்!

அழைப்பைக் கொடுத்துவிட்டுத் திரும்பிச் செல்லும் வழியெல்லாம், தொடக்க விழாவுக்கு வருவதைத் தவிர்ப்பதற்காகத்தான் அப்படிப் பேசினாரோ, என்று அவன் மனதில் உறுத்திக்கொண்டே இருந்தது!

ஆனால், விழாவன்று அதிகாலையில், டெலிஃபோனில் அவனை அழைத்து, அவர் வாழ்த்துச் சொன்னபோது, அந்த உறுத்தல் மறைந்து போயிற்று!

அதன் பிறகும், அவனது வளர்ச்சியைக் கவனித்து, அவ்வப்போது அவர் பாராட்டும் போது, சுகந்தனுக்குச் சந்தோஷமாக இருக்கும்!

இளைஞர்களின் வளர்ச்சி குறித்து அவர் சொன்னது வெறும் வாய் வார்த்தையல்ல என்பதோடு, அவரே பாராட்டும் விதமாகச் செயல்படுகிறோம் என்ற மகிழ்ச்சி!

ஆனால், அவர் சொன்ன மற்றதும் நினைவில் இருந்தபடியால், பொது இடங்களில், அவரிடம் போய் நிற்க மாட்டான். ஏதோ ஒரு கணம் சந்தித்துப் பிரியும் பார்வையே அவனுக்குப் போதுமான ஊக்கம் தருவதாக இருந்தது!

இப்போதும், அவருக்குப் பின்புறம் இருந்து, அவரது காதில் ஏதோ ஓதியவரைப் பார்க்கும்பொருட்டு திரும்பிய பெரியவரின் பின்னிருந்தவரைத் தாண்டி, சுகந்தனை அடைந்தது. “ நடப்பதைப் பார்த்தாயா? “ என்பதுபோல லேசான கண்சிமிட்டலுடன் அவரது பார்வை திரும்பிவிட, சுகந்தனும் முகத்தில், முறுவலோடு திரும்பினான் !

திரும்புகையில் அப்படியே, மேடையில் சடங்குகள் முடிந்தனவா என்று ஒரு கண்ணோட்டம் விட, அப்போதுதான், அவன், அவளைப் பார்த்தான்!

மணமக்கள் சுற்றி முடித்துக் கொண்டிருந்தனர். அங்கிருந்த கூட்டத்திலிருந்து பிரிந்து வந்துகொண்டிருந்த ஒரு பெண், அவனைப் பார்த்துப் புன்னகை செய்தாள்!

அழகிதான். அதிலும், அன்றைய விழாவுக்காகத் தனி அலங்காரம் செய்ததாலோ என்னவோ, அங்கிருந்த எல்லாப் பெண்களுமே அழகாகவேதான் தோற்றம் அளித்தனர். இவள், இன்னும் கொஞ்சம் அழகாக இருந்தாள்.

அந்தி வானத்து நீலமும், சிவப்புமான வண்ணக் கலப்பில், ஆழ்ந்த நீலத்தில் கெட்டி ஜரிகையோடு கூடிய கரையுடன் சேலையும், பொருத்தமாக நகைகளும் அவளது அழகை இன்னமும் கூட்டிக் காட்டின.

ஆனால், எப்பேர்ப்பட்ட அழகியே ஆனாலும், அறிமுகமே அற்ற அவனைப் பார்த்துச் சிரிப்பானேன்?

அழகான புன்னகை என்று எண்ணும்போதே, ஏளனமாகவும் சுகந்தன் உணர்ந்தான்!

ஆண்களுக்கு அலைகிறார்கள் இந்தக் காலப் பெண்கள்! நட்சத்திர ஹோட்டல் சாப்பாட்டுக்காகவும், நல்ல துணிமணிக்காகவும், எவன் கிடைப்பான் என்று அலசுவது!

அந்தத் துணிச்சல்காரி, அவனைப் பார்த்துச் சிரித்ததோடு நில்லாமல், அவனை நோக்கி வரத் தொடங்கவும், அவனுக்கு, உள்ளூர ஒரு வருத்தம் பரவலாயிற்று!

சே! இவள் நல்லவளாக இல்லையே என்ற வருத்தம்!

வரட்டும்! அருகில் வந்து பேச்சுக் கொடுக்கும்போது, மனதில் தைக்கும்படி, ஏதாவது சொல்லி விரட்ட வேண்டும்! இந்த சுகந்தனை என்ன நினைத்துக் கொண்டாள், இவள்?! முகம் இறுகத் தயாராக உட்கார்ந்திருந்தான் அவன்.

ஆனால் . .

அவனை நோக்கி வந்தவள், அவன் முன் நில்லாமல், இன்னமும் ஓர் எட்டு எடுத்து வைத்து, அவனுக்குப் பின் வரிசையில் இருந்த யாரிடமோ, பேசத் தொடங்கினாள்.

தலையைத் திருப்பாமல், பார்வை வட்டத்தில் விழுந்த அளவில் கவனித்ததில், சுகந்தனுக்கு நேரே பின் வரிசையில் அமர்ந்திருந்தவளைப் பார்த்து, அவள் பேசியது தெரிந்தது!

“ஏய் நளின், என்னப்பா, இங்கே வந்து உட்கார்ந்து கொண்டிருக்கிறாய்? “ என்று வினவினாள் இவள்.

குரலும் இனிமைதான்!

பாவம்! அவனுக்கு நேரே பின்னே அமர்ந்திருந்தவளைப் பார்த்துச் சிரித்திருக்கிறாள்! அவளைப் போய், என்னவெல்லாம் நினைத்துவிட்டான்!

பின்புறம் உரையாடல் தொடர்ந்தது!

“விடுதியிலிருந்து கிளம்பிவதற்குக் கொஞ்சம் தாமதம் ஆகிவிட்டது! குளியலறை “ க்யூ “! இங்கே வந்து பார்த்தால், எல்லாம் தொடங்கி, மேடையில் கூட்டமும் அதிகம் ஆகிவிட்டது! நீயாவது உறவுக்காரி! நான் சினேகிதி மட்டும்தானே? ஓசைப் படாமல், இங்கேயே உட்கார்ந்துவிட்டேன்! “ என்றாள் அந்த நளின்!

“சரிதாண்டி, அளக்காதே! நட்பும், ஒரு வகை உறவுதான்! பெரிய உறவு! அதனால்தான், கல்லுப்பு உன்னை அங்கே கூட்டிவரச் சொன்னாள்! . . .அச்சோ! நான் பாட்டில், இன்னமும் அவளைக் கல்லுப்பு என்கிறேன்! யாராவது, மாப்பிள்ளை

வீட்டுக்காரர்கள் காதில் விழுந்து விடப் போகிறது! நீ எழுந்து வாப்பா! கல்பனாவிடம் போகலாம்!” என்று அழைத்தாள் முன்னவள்.

“எங்கே? கழுத்தில் தாலி ஏறிவிட்டதே! இனி, அருகில் போனால், அங்கே இடைஞ்சல்தானே? ஏய், பாரேன் இரண்டு பேரையும்! நைசாக உரசிக்கொண்டு . .” என்று அடுத்தவள் சொல்ல, இருவரும் கிண்கிணியாக நகைத்தனர்!

“ஆனாலும் வா! அவள்தான் உன்னை இங்கே பார்த்துவிட்டுக் கூட்டி வரச் சொன்னாள்! மாலை வரவேற்புக்கு, நாம் எல்லோரும் ஒரே நிறத்தில் அணிய வேண்டுமாம்! . . .பள்ளிக்கூடத்தோடு, சீருடை முடிந்தது என்று பார்த்தால், இவள் விட மாட்டேன் என்கிறாளே! . . .”

இருவரும் பேசிக்கொண்டே போவதைக் கேட்க, சுகந்தனுக்கு ஏனோ பிடித்தது!

சின்னக் குறை! அவள் “ நளினி “ என்று அழைத்த மாதிரி, அந்த நளினியும், மற்றவளைப் பேர் சொல்லி அழைத்திருக்கலாம் அல்லவா? பொதுவாகப் பேசியபடியே போய்விட்டாளே!

மணமக்களுக்குப் பரிசைக் கொடுத்துவிட்டு, அங்கங்கே அறிந்தவர் தெரிந்தவர்களிடம் பேசியவாறே நகர்ந்து, சாப்பாட்டு ஹால் பக்கம் சென்று பார்த்தால்,

முதல் பந்தி நிரம்பிக் கதவைச் சாத்தியிருந்தனர்!

காத்திருக்கும் கூடத்திலும், நிறைய நாற்காலிகள் போடப்பட்டு இருந்தன. எனவே

கால் கடுக்க நிற்கும் கஷ்டம் இல்லை! அவசரப்பட்டுச் செல்ல வேண்டிய அவசியமும் இல்லாததால், சுகந்தன் இலகுவாக அமர்ந்து காத்திருந்தான்.

திடுமெனப் பழக்கப்பட்ட குரல் ஒன்று காதில் விழுந்தது! “ சே! கொஞ்சம் முன்னால் வந்திருந்தால், சாப்பிட்டுவிட்டுக் கம்ப்யூட்டர் வகுப்புக்குக் கிளம்பியிருக்கலாம்! இனிமேல், சாப்பிட்டுவிட்டு, வகுப்புக்குப் போக முடியுமோ, என்னவோ? மணி என்னடி?” என்றது, அந்தி மேக வர்ணப் பட்டுச் சேலைக்காரியின் குரல்!

“ஏன்? உன் கையில்தான் வாட்ச் இருக்கிறதே, பாரேன்!” என்றாள் நளினி.

“எங்கே பார்ப்பது? அதுதான் ஓடவில்லையேப்பா! காலையில், மற்ற அலங்காரம் எல்லாம் முடித்துவிட்டு, இந்தச் சேலைக்குப் பொருத்தம் என்று, கைக் கடிகாரத்தை எடுத்துக் கட்டிக்கொண்ட வந்தேனா? “ செல் “ தீர்ந்திருக்கும் போல! காரில்தான் பார்த்தேன்! அப்புறம், எங்கே மாற்ற? நம்மிடம் வந்து, யார் மணி கேட்கப் போகிறார்கள் என்கிற தைரியம் வேறு! ம், சொல்லுடி, மணி என்ன?”

“ம்ம்ம் . . மணியா? ஏன்ப்பா, இந்த மாதிரித் தைரியம் எல்லாம், உனக்கு மட்டும்தான் வருமா? அது, பொதும்மா!” என்று நளினி கூற, இருவருமே கிளுகிளுத்துச் சிரிக்கலாயினர்!

சிரிப்பினூடே, “சரிப்பா! வேறு யார் கடிகாரத்திலாவது, மணி தெரிகிறதா என்று, நைசாகப் பார்க்கலாமா? . .” என்று, முன்னவள் சொல்லிக்கொண்டு இருக்கும்போதே, அடுத்த பந்திக்குக் கதவைத் திறந்தார்கள்.

எழுந்தவாறே, “மணி பதினொன்று முப்பது!” என்றான் சுகந்தன்.

சாப்பிடப் போவதற்காக எழுந்து கொண்டிருந்த இரு பெண்களும் திகைப்புடன் நோக்க, “ கைக் கடிகாரப் புராணம் காதில் விழுந்தது!” என்று முறுவலித்துவிட்டுத்

தன் வழியே போனான் அவன்!

நல்ல சாப்பாடு! தோழியான மணப் பெண்ணுடன் இருக்க நேர்ந்ததில், ஒருத்திக்கும், தாமதமாக வந்ததில் அடுத்தவளுக்கும் காலை உணவு இல்லாது போகவே,

பசியில் இருவருமே, ஒரு வெட்டு வெட்டிவிட்டனர்.

கலகலப்பாய், அந்த வயதுக்கே உரிய சளசளப்பு வேறு!

திருப்தியோடு உண்டு முடித்துவிட்டு வந்தால், வாயிலில் நின்று, ஐஸ்கிரீமைக் கொடுத்தார்கள்! கசாட்டா!

“ஐயோடா!” என்று தலையில் தட்டிக் கொண்டாள் அந்தி மேக

வர்ணக்காரி!

“கல்லுப்பு தனக்கு ஓர் ஐஸ்கிரீம் வாங்கி வரச் சொன்னாளே! இப்போது கேட்டால், எனக்கே இரண்டு கேட்பதாக அசிங்கமாகத் தோன்றாதா? நான் மட்டும் தின்றுவிட்டுப் போக . . ஊகூம், எனக்கே மனம் வராது! இப்போது, என்னப்பா செய்வது?” என்று மெல்லிதாகப் புலம்பினாள் அவள்.

யாரோ, அவளிடம் இரண்டு ஐஸ்கிரீம் பேப்பரி தட்டுகளை நீட்டினார்கள்!

நிமிர்ந்து பார்த்தால், “ மணி “ சொன்னவன்! “மீண்டும் புலம்பல் காதில் விழுந்தது!” என்று முறுவலித்தான் அவன்.

லேசான வெட்கச் சிவப்பு முகத்தில் படர்ந்த போதும், மகிழ்ச்சியுடனே, நன்றியுரைத்துவிட்டுப் போனாள், அவள்!

விஷயம் அத்துடன் முடியவில்லை!

சில முக்கியமான உறவினரிடம் சொல்லிக் கொண்டுவிட்டு, சுகந்தன் மணமகனிடம் விடைபெறச் சென்றால், மணப்பெண்ணின் அருகே அமர்ந்து அரட்டை அடித்தபடி, அந்த ஐஸ்கிரீமை ருசித்து விழுங்கிக் கொண்டிருந்தவள், அவளேதான்!

சுகந்தனைப் பார்த்ததும், அசடு வழிய, “எனக்கு முன்னேயே, கல்லு . .கல்பனாவுக்கு வேறு யாரோ, கொண்டு வந்து கொடுத்துவிட்டார்கள்! . .” என்று இழுத்தாள்!

சிரித்துவிட்டுக் கிளம்பினான், சுகந்தன்!

# அத்தியாயம் -2

தொடர்ந்த சில நாட்களில், அந்த அந்திமாலை வண்ணப் பட்டுக்காரியின் தோற்றம், அவ்வப்போது, சுகந்தன் மனதில் தோன்றும்!

அவள் அசடு வழிந்ததை நினைத்துத் தன்னையறியாமல் சிரிப்பு வரும்!

அவளது பெயர் என்னவாக இருக்கக் கூடும் என்று யோசிக்கும்போதே, அடுத்த வேலை வர, முன்னது மறந்து போகும்!

இந்நிலையில், "தியாகு வீட்டில், சம்பந்தம் கலக்கும் விருந்துக்குக் கூப்பிட்டு இருக்கிறார்கள், தம்பி!" என்று சரசா மகனிடம் வந்து நின்றாள்.

"அது வேறா? எனக்கு வேலை இருக்கிறதம்மா! நீங்களும் அப்பாவும் போய்வாருங்கள்!" என்றான் சுகந்தன் அசட்டையாக.

"ச்சு! என்னடா, தம்பி, நீ? என்றைக்கு விருந்து என்றுகூடக் கேளாமல், வேலை என்கிறாயே! எல்லோரும் வர வேண்டும் என்பதற்காகவே, அவர்கள் ஞாயிறன்று, அந்த விருந்தை ஏற்பாடு செய்திருக்கிறார்கள்! இப்படிப் பேசலாமா? சும்மா வாம்மா! அன்றைக்குக் கல்யாணத்துக்கு வேறு, நீ மட்டும்தான் போகும்படி நேர்ந்தது! இப்போது, குடும்பத்தோடு, எல்லோரும் வர வேண்டும் என்று, தியாகு அம்மா திரும்பத் திரும்ப, வற்புறுத்திச் சொன்னாள்! " என்றாள் தாயார்.

படித்துக்கொண்டிருந்த எழுத்தில், சுகந்தனின் கண்கள் ஒரு கணம் நிலைத்து நின்றன! அவன் மட்டும் சென்ற திருமணம்!

"இந்த விருந்துக்கும் எல்லோரையும் கூப்பிடுவார்களா, அம்மா?"

"இவ்வளவு பெரிய ஆண்பிள்ளை! கூட்டத்துக்குப் பயப்படுகிறாயா? "

"அய்யோ! இதில், எப்படி முறை என்ன ஏது என்று தெரிந்துகொள்ளக் கேட்டால், என்னென்னவோ சொல்லுகிறீர்களே, அம்மா! நம்மவர்கள் பழக்கத்தைக் கேட்டேன்!"

"வந்து பார்த்தாலும்தான் தெரிந்து போகுமே!" என்றாள் தாயார் விடாமல்! ஆனாலும், மகன் கேட்ட விவரத்தையும் தெரிவித்தாள். "முன்னெல்லாம், இரு புறமும் உள்ள பங்காளி முறைக்காரர்களை மட்டும்தான் அழைப்பார்கள்! இப்போது, நெருங்கிய உறவு, நட்பு

எல்லோரையும் கூப்பிடுகிறார்கள்!”

ம்ம்ம் . . அப்படியானால், அவள் . . அந்த அந்தி வண்ணச் சேலைக்காரியும் வரக் கூடுமோ? அவள் பெயரைக்கூட, அறிய நேர்ந்தாலும், நேரலாம்!

“என்றைக்கு, அம்மா? முடிந்தால் வரப் பார்க்கிறேன்! “ என்றான் சுகந்தன், சற்று அசட்டையாகக் காட்டி .

“வரும் ஞாயிறன்று. ஞாயிற்றுக் கிழமை, எப்படித் தம்பி, முடியாமல் போகும்?”

“அன்றைக்குத்தானே, அடுத்த வாரத்துக்குத் திட்டமிட முடிகிறது? நிதானமாக, நல்லது கெட்டது ஆராய்ந்து, அடுத்துச் செய்ய வேண்டியது பற்றித் திட்டம் போட்டு செயல்பட்டால்தானே, ஜெயிக்க முடியிம்? இதுபோல விருந்து, விழா என்று போய்க் கொண்டிருந்தால், அது எப்படிம்மா முடியும்? அதனால்தான் தயங்கினேன்!” என்றான் மகன்.

தயங்கினேன் என்று, சுகந்தன் இறந்த காலத்தில் பேசியதைத் தவறாது கவனித்து, முகம் மலர்ந்து, “அப்படியானால், வருகிறாய்தானே? சந்தோஷம்! ஆனால், ஒன்று மனதில் வை! என்னதான் வேலையில் மும்முரமாக இருந்தாலும், வாரத்துக்கு ஒரு நாள் விடுமுறை எடுத்துக் கொள்ள வேண்டும், சுகிம்மா. நாளைக்குக் குடும்பம் பெருகும்போது,

அவர்களுக்கு என்று அந்த ஒரு நாளையேனும் ஒதுக்கியே ஆக வேண்டும்! குடும்ப ஒற்றுமைக்கு அது அவசியம். நினைவிருக்கட்டும்! “ என்று எச்சரித்த சரசா, அதற்கு மேல் நில்லாது, அங்கிருந்து அகன்றுவிட்டாள்.

நின்றால், இப்போதைக்குத் திருமணம் என்கிற பேச்சே கிடையாது என்று மகன் வழக்கம்போல ஏதாவது சொல்ல, மனதுக்கு வருத்தமாக இருக்கும்! எதற்கு, வீண் வம்பு?

மறுத்துப் பேசிப் பிடிவாதத்தை அதிகரிப்பதைவிட, இப்படியே அவன் வயதுப் பிள்ளைகளின் திருமணம், அது தொடர்பான விழாக்களில் கலந்து கொள்ளச் செய்வது, அவன் மனதை மாற்றிவிடும் என்று எண்ணினாள் அந்தத் தாய்!

பத்துத் தடவை மறுத்துப் பேசித் தகராறு பண்ணாமல், விருந்துக்கு வர, சுகந்தன் ஒத்துக் கொண்டதே, அவளுக்குப் பெரிய வெற்றியாகத் தோன்றிற்று!

சுகந்தன் எதிர்பார்த்தது போலவே, அந்தி வண்ணப் பட்டுக்காரியும், விருந்துக்கு வந்திருந்தாள்! இளம் பச்சையில், கருநீல

வண்ணத்தில் சம்கி வேலைப்பாடு செய்த சுரிதார் செட்! பளீர் என்றிருந்தாள்!

அவன் அறிந்த விதமாகவே, கலகலப்பான பேச்சுடன், கல்பனா வீட்டாருக்குச் சின்னச் சின்ன உதவிகளை இயல்பாகச் செய்தபடி, வளைய வந்தாள்!

சுகந்தனைப் பார்த்தபோது, முன்னர் அறிமுகம் ஆனவன் என்பதைக் காட்டும்

சன்னப் புன்னகை புரிந்தபோதும், நில்லாமல் சென்றுவிட்டாள்.

சாப்பாடு முடிந்து, பீடாத் தட்டுகளைக் கொணர்ந்து, அவளும் அவளுடைய தோழிகளுமாக எல்லோருக்கும் தந்தனர்.

சுகந்தன் பக்கமாக அவள் வர, அவளது கைக் கடிகாரத்தை ஒரு தரம் குறிப்பாகப் பார்த்துவிட்டு, “மணி சொல்லத் தேவைப் படுமா?” என்று புன்னகையோடு கேட்டான் அவன்.

முத்துப் பல்வரிசை தெரிய, லேசாக நகைத்தவாறு, மணிக்கட்டைத் திருப்பிக் காட்டினாள் அவள். “ஓடுகிறது!”

அவனும் சிரித்து, “அன்று வரவேற்பில், நீங்கள் எல்லோரும் ஒரே வண்ணத்தில் உடை அணிந்தீர்கள் போல! தேவைப் படுமோ என்று மணி சொல்ல வந்தால், யாரோ ஒருத்தி, திரும்பிப் பார்த்து முறைக்கிறாள்! நின்றால், ஓங்கி ஒன்று வைத்துவிடுவாளோ என்று பயந்து, திரும்பிவிட்டேன்!” என்றான் இலகுவாக.

“சம்மன் இல்லாமல் ஆஜரானால், அப்படித்தான்!” என்று, புருவம் தூக்கிப் பேசிவிட்டு, உடனே சிரித்தாள் அவள்!

அவனும் கூடச் சேர்ந்து சிரித்தபோது திரும்பிப் பார்த்தவர்களில், சரசாவும் ஒருத்தி!

அவளது பெயரைக் கேட்கலாமா என்று சுகந்தன் யோசித்தபோது, “ஏய் தந்தி, உன்னைக் கல்ப்பூ கூப்பிடுகிறாள், பார்! எல்லோரும் சாயங்காலம் பீச்சுக்குப் போகலாமா என்கிறாள்! இவள் இப்படி நம்மோடு சுற்றினால், மிஸ்டர் தியாகுவுக்கு நம்மேல் வெறுப்பு வந்துவிடாதா? நீ வந்து அவளிடம் சொல்லு, வா!” என்று அழைத்துப் போனாள் ஒருத்தி.

“ தந்தி “யா? இப்படிக்கூட, ஒரு பெயரா? அல்லது, அவர்கள் ஒருவரைச் சுருக்கி அழைப்பதில், இவள் பெயர் இப்படி ஆயிற்றா? ஆனாலும், எந்தப் பெயர் “ தந்தி “யாகச் சுருங்கக் கூடும்?

சற்று நேரம் யோசித்துவிட்டு, அவள் தனித்து வந்த நேரம் பார்த்து, அவளிடமே கேட்டான், சுகந்தன். "என்னங்க, " தந்தி " என்று எந்தப் பெயரைச் சுருக்க முடியும்? யோசித்து, யோசித்து எனக்கு மூளையே குழம்புகிறது!" என்றான்.

சட்டென அவளது கண்கள் பளிச்சிடவும், முந்திக்கொண்டு, "குழம்புவதற்கு மூளை இருக்கிறதா என்று சந்தேகப்பட்டுவிட வேண்டாம்! படிப்பில், தொழிலில், கெட்டிக்காரன் என்று பெயர் வாங்கியவன் நான்!" என்று உரைத்தவனுக்குத் உள்ளூர வியப்பு உண்டாயிற்று!

பொதுவாகத் தன்னைப் பற்றி . . அதுவும், தற்புகழ்ச்சி பேசுகிறவன் அல்ல, அவன்! ஆனால், இப்போது ஏன்?

அவள் அதற்கும் நகைத்தாள்! "பொதுவாகத் தன்னைப் பற்றி உயர்வாகப் பேசுகிறவர்களை, நாங்கள், " செல்ஃப் டப்பா " என்போம்!" என்றாள் கிண்டல் குரலில்!

தனக்கே தோன்றிய வியப்பை அதற்குள் சமாளித்து விட்டவன், "உயர்வாகப் பேசுகிறவர்களைத்தானே? உண்மையைச் சொல்லுகிறவர்களை அல்லவே?!" என்று, அவன் கெத்தாகக் கேட்க, கணமும் தயங்காமல், "உண்மை என்று, மற்றவர்கள் அல்லவா, சொல்ல வேண்டும்? தானே சொன்னால் எப்படி? " அவளும் அதே குரலில் கேட்க, இருவருக்குமே சிரிப்பு வந்தது!

சிரித்தவாறே, "கடவுளே, இதை உண்மை என்று சொல்லு என்று, நான் யாரைப் போய்க் கேட்க முடியும்?" என்று கையை விரித்தான்!

"நீங்கள் ஒன்றும் யாரிடமும் கேட்க வேண்டாம்! சும்மாவே, உங்களைப் பற்றி, அப்படித்தான் பேசிக் கொண்டிருந்தார்கள்! பீடா கொடுத்தபோது, என் காதிலேயும் விழுந்தது!" என்று, அவள் அலுப்புக் காட்டிக் கூற, "அப்பாடி!" என்றான் சுகந்தன்!

"இனியாவது, பெயரைச் சொல்லலாம் அல்லவா?"

"தமயந்தி!" என்றாள் அவள்!

"தமயந்தி, தந்தி ஆயிற்றா?"

"ஆமாம்! இரண்டாவது, மூன்றாவது எழுத்துகளை எடுத்து விட்டார்கள்!"

" நல்ல வேளை! முதல் எழுத்தையும், மூன்றாவது எழுத்தையும் எடுக்காமல், இப்படி எடுத்தார்களே!" என்று, அவன் சொல்ல,

“ஐயையோ! “ என்று பதறினாள் அவள்.

“என் தோழிகள் யார் காதிலாவது விழுந்து தொலைத்தால், அப்புறம், என் பெயர் மந்தியாகவே ஆகிவிடும்!” என்று அவள் கூற, அவன் சிரிக்க, கூடவே அவளுக்கும் சிரிப்பு வந்தது!

“பரவாயில்லை! நன்றாகத்தான் பெயர் வைக்கிறீர்கள்! தியாகு மனைவி பெயர், கல்லுப்பு! இங்கே, தந்தி! அப்புறம்?” என்று பேச்சை வளர்த்தான் சுகந்தன்.

தமயந்தியும், அதைப் பற்றி உனக்கென்ன என்று சென்றுவிடாமல், “நளினிக்கு, நல்லி சில்க்ஸ், ஷோபனாவுக்கு சோப்பு, ரம்யாவுக்கு ரம்மி, சௌதாமினிக்கு, மினி மீல்ஸ்! நாங்கள் ஆறு பேரும்தான் செட் !” என்று விளக்கிச் சொன்னாள்.

“நாங்கள் எல்லாம் எங்கள் ஆசிரியர்களுக்குத்தான் பெயர் வைப்போம்! ஆனால், அதைக் கேட்க, உங்களுக்கெல்லாம் கொஞ்சம் ஒரு மாதிரி இருக்கும்!” என்று அவன் கூற, அவள் கண்ணை உருட்டி, “அப்படியானால், நீங்கள் பொல்லாத பையன்கள் செட் போல!” என்றாள்.

சற்றுப் பொறுத்து, தமயந்தியை, அவளுடைய தாயார் அழைத்து, சரசாவுக்கு அறிமுகம் செய்து வைத்தாள்.

“இந்த ஆன்ட்டியுடைய தங்கையும் நானும், ஒன்றாகப் படித்தவர்கள், தமயந்தி! இவள்தான் என் மூத்த பெண். அடுத்து, ஒரு பையனும் பெண்ணும்! இரண்டையும் கண்ணிலேயே காணோம்! மாடியில், எல்லோருமாகச் சேர்ந்து சீட்டு விளையாடுவதாகச் சொன்னார்கள்! போய்ப் பார்த்து, இரண்டுபேரையும் கிளப்பிக்கொண்டு வா, பாப்பா! நேரமாகிறது! . .” என்றவளைக் குறுக்கிட்டு, “என்ன அவசரம்? இன்று விடுமுறை நாள்தானே? நிதானமாக, எல்லோரிடமும் பேசியிருந்துவிட்டு, மெல்லப் போவது! “ என்றாள் சரசா!

“எனக்கும் ஆசைதான், அக்கா! கல்லூரியில்கூட, இப்போதெல்லாம் நிறைய

வீட்டுப் பாடம் தருகிறார்களே! வீட்டுக்குப் போய், என்னவெல்லாம் பாடம் மீதி வைத்திருக்கிறார்களோ என்று பார்க்க வேண்டும்! விட்டால், ரெக்கார்டு நோட் வேலையெல்லாம் நம்மையே செய்து தரச் சொல்லுவார்கள்! படிப்பது, பூபாலா, நீயா என்று, வீட்டுக்காரர் திட்டுவார்! அதற்காகத்தான் சீக்கரமே கிளம்புகிறேன்!” என்று சரளாவிடம் காரணம் சொல்லிவிட்டு, “ போம்மா! போய்க் கூட்டிவா!”

என்று மகளை அனுப்பினாள் தாமரை!

சரசாவைப் பார்த்து, இனிமையாக முறுவலித்துத் தலையசைத்து விடை பெற்றுக்கொண்டு, தம்பி தங்கையைத் தேடிப் போனாள் தமயந்தி.

“உன் பெண் வெகு லட்சணமாக இருக்கிறாள், தாமரை! குணவதியாகவும் வளர்த்திருக்கிறாய்! மறுத்து, ஒரு வார்த்தை பேச வில்லையே! யாருக்குக் கொடுத்து வைத்திருக்கிறதோ!” என்று பாராட்டுதலாக சரசா கூற, தாமரையின் முகம் மலர்ந்து விகசித்தது!

பத்தாண்டு மூத்த உறவு என்பதோடு, உறவுக்குள்ளும், சற்று உயர்மட்டப் பெண்மணியின் பாராட்டல்லவா? மகளின் கல்யாண காலத்தில், அதற்குத் தனி மதிப்பு உண்டே!

கிளம்புகையில், சரசாவைப் பின்பற்றி, சுகந்தனும் எல்லோரிடமும் விடைபெற்றுக் கிளம்பினான். தாமரையிடமும்!

சில தினங்கள் கழித்து, தன்னைக் கோயிலுக்கு அழைத்துச் செல்லுமாறு, சரசா மகனிடம் கேட்டாள்! கொஞ்சம் பிடிவாதமாக!

வேறு வழியின்றிக் கூடச் சென்றால், திரும்பி வரும்போது, “இந்தப் பக்கம் நம் சொந்தக்காரர் வீடு இருக்கிறது.” என்று காரை நிறுத்தச் சொல்லி, இறங்கிப் போனாள்.

“என்னம்மா, நீங்கள்? இதற்கெல்லாம் என்னைப் போட்டு, இழுத்தடிக்கிறீர்களே!” என்று முகம் சுளித்த மகன், அழைப்பு மணி கேட்டுக் கதவைத் திறந்தவளைக் கண்டதும் திகைத்துப் போனான்!

“நீயா?! “ என்றான் ஆச்சரியத்துடன்!

# அத்தியாயம் -3

சுகந்தனும், இவனுடைய தாயும் தங்கள் வீடு நோக்கி வருவதை, ஜன்னல் வழியே, ஏற்கனவே பார்த்திருந்தாளோ, என்னவோ, தமயந்தியின் முகத்தில், வியப்பை விட, ஆர்வம் கலந்த புன்னகையே விரிந்திருந்தது!

வராதவர்கள் வந்தது குறித்துத் தாமரைக்கு, ஆச்சரியம்தான். ஆனால், ஒரு விருந்தில் கண்டுவிட்டு, தொடர்பை விடாமல் வீடு தேடி வந்தார்களே என்ற சந்தோஷமும் மிகுதியாக இருந்தது! எனவே, அவர்களை மிக்க மகிழ்ச்சியோடு வரவேற்று உபசரித்தாள்!

தமயந்தியுடைய தந்தை வேலைக்கும், தம்பி தங்கை கல்லூரிக்கும் சென்றிருந்தார்கள்.

கம்ப்யூட்டர் வகுப்பு முடிந்து திரும்பிருந்த தமயந்தியும், தாமரையும் சேர்ந்து, வந்தவர்களுக்கு, இனிப்பு, காரம் கொடுத்து விருந்துபசாரம் செய்தனர்.

பேச்சினூடே, விருந்தினரை அழைத்துப் போய், தமயந்தி செய்திருந்த தஞ்சாவூர் ஓவியங்களைத் தாமரை காட்ட, உரிய விதமாகத் தாயும் மகனும் வியந்து ரசித்தார்கள்!

தோழிகளோடு சேர்ந்து, கண்காட்சி மாதிரி வைத்து, நாலு படங்களை விற்றது பற்றித் தாமரை பெருமையோடு கூறினாள்

"இந்தக் கலை என் அம்மாவுக்குத் தெரிந்திருந்தால், " செல்ஃப் டப்பா " என்ற பட்டப்பெயர் எனக்கு வந்திராது!" என்று, பழச்சாறு கொடுத்துக் கொண்டிருந்த தமயந்தி காதில் மட்டும் விழுமாறு, சுகந்தன் முணுமுணுத்தான்.

வந்த சிரிப்பைத் தொண்டைக்குள்ளேயே கிளுக்கி அடக்கிக்கொண்டு நகர்ந்தாள் தமயந்தி.

அடுத்த முறை, தாமரை, தமயந்தியை அழைத்துக்கொண்டே கோயிலுக்குப் போனார்கள்! சரசா, தாமரையோடு பழங்கதை பேச, கோயில் சிற்பங்களை ரசித்தபடி, சின்னவர்கள் வேறு புறம் சென்றார்கள்!

சுமார் ஒரு மாத காலம் இப்படிக் கழிந்தபின், சரசா திருமணப் பேச்சை எடுத்தாள். பெண்ணின் பெயரைக் கேட்டபின், வழக்கமான தள்ளிப் போடல்கள்

எதுவுமின்றி, சுகந்தன் தலையாட்டினான்!

பொதுவாகச் சுகந்தனுக்கு, இன்றையப் பெண்கள் மீது நல்ல அபிப்பிராயம் கிடையாது! ஆனால், தமயந்தி வித்தியாசமாகத் தோன்றினாள். பார்வைக்கும் அழகியாக இருந்தாள்! பார்க்கப் பார்க்க, அவளது அழகு கூடுவது போல வேறு இருந்தது!

அத்தோடு, அவனுடைய தாயாருக்கும் அவளைப் பிடித்திருந்தது!

என்றோ ஒரு நாள் திருமணம் செய்தே ஆக வேண்டும்! செய்யாமல் தாயார் விடப் போவது இல்லை! பெற்றோரின் நச்சரிப்புக்காக, யாரோ ஒருத்தியைக் கடனே என்று மணப்பதைக் காட்டிலும், பல வகையிலும் அவனுக்கு ஏற்றவளாகத் தோன்றும் தமயந்தியை இப்போதே மணப்பது நல்லதல்லவா?

இப்போது, தமயந்தியை விட்டுவிட்டால், அப்புறம் மணக்க நினைக்கிறபோது, என்ன மாதிரி முசுடு வந்து வாய்ப்பாளோ?

தமயந்தியைப் பற்றி என்னென்ன குறைகள் கூற முடியுமோ, அவனுக்குத் தெரியாது. ஆனால், அவளை முசுடு என்று மட்டும் யாராலும் சொல்லவே முடியாது!

கேலியும் கிண்டலுமான அவளது பேச்சும், இம் எனுமுன் ஸ்விட்ச் போட்டாற்போல, அவளது கண்களைப் பளிச்சிட வைக்கும் சிரிப்பும், அவனே, நேரடியாக அறிந்தவை ஆயிற்றே!

துணிச்சல்காரி! அவனையே, செல்ஃப் டப்பா என்றுவிட்டாளே!

அன்றைய நினைவில், சுகந்தனுக்குச் சிரிப்பு வந்தது! தனிமையில், எண்ணி எண்ணிச் சிரித்தான்!

மணந்தால், இப்படிச் சிரிக்க வைக்கிற பெண்ணைத்தான், மணக்க வேண்டும்!

இந்த மன நிலையில் சுகந்தன் இருக்கிறபோது, சரசாவே தமயந்தியின் பேச்சை எடுக்கவே, உடனேயே ஒத்துக்கொண்டுவிட்டான்!

“ஆனால், தமயந்தியிடமும், ஒரு வார்த்தை கேட்டு விடுங்கள், அம்மா!” என்று மட்டும் கூறினான்!

தான் பல சிறப்புகள் வாய்ந்த இளைஞன் என்பது, அவனுக்கும் நன்றாகவே தெரியும்! ஆனால், இந்தக்காலப் பெண்களைப் பற்றி, உறுதியாக ஒன்றும் கூற முடியாதே!

தன் வருங்காலக் கணவனைப் பற்றி, அவள் என்ன சித்தரித்து

வைத்திருக்கிறாளோ?

ஜப்பானில் காலை உணவும், கிரீசில் மதிய உணவும், இங்கிலாந்தில் மாலைத் தேனீரும், அமெரிக்காவில் இரவு உணவும் தருகிற கணவனுக்காகக்கூட, அவள் காத்துக் கொண்டிருக்கலாம்!

ஆனால், தமயந்தி, அந்த அளவுக்குக் கற்பனை உலகில் வாழ்கிறவளாகத் தோன்றாததால், தன்னையே, ஒரு வரமாகக் கருதுவாள் என்றுதான் சுகந்தன் எதிர்பார்த்தான்! ஆனாலும், அதை அவள் வாய் மூலமாகவே அறிந்துவிடுவது நல்லதல்லவா?

எதிர்பார்த்தது போலவே, இந்தத் திருமணத்துக்கு, தமயந்தி வீட்டிலும் மறுப்பு இருக்கவில்லை! மிகுந்த மகிழ்ச்சியும் கூட !

தமயந்தி வீட்டிலும் வசதிக்குக் குறைவில்லைதான் என்றாலும், சுகந்தன் தானாகவே, முன்னேறிக் கொண்டிருந்தான்! அவனுக்கு ஒரு தொழில் வைத்துக் கொடுக்கும் அளவுக்கு, அவனுடைய தந்தையும் பொருளாதார வலிமை பெற்றிருந்தார்!

சுகந்தனைப் பொருத்தவரை, கெட்ட பழக்கங்களும் கிடையாது என்பதால், அவளுடைய சுற்று வட்டாரத்தில், தமயந்தி அதிருஷ்டக்காரியாகக் கருதப்பட்டாள்!

தமயந்திக்கே மிகவும் மகிழ்ச்சிதான்!

சுகந்தனின் பேச்சும் சிரிப்பும், அவளை ஏற்கனவே ஈர்க்கத் தொடங்கியிருந்தன. ஆனால், பெரிய இடத்துப் பையனான அவன் உள்ளத்தில் இருப்பது தெரியாமல், மனதை விட்டுவிடக் கூடாது என்று, முயன்று கட்டுப் படுத்திக் கொண்டிருந்தாள்!

இப்போதோ, எல்லையற்ற ஆனந்தம்!

இவர்கள்தான் ஜோடி என்று ஆகிவிட, ஒருவரோடொருவர் பேசியே இருவருமாக, டெலிஃபோன் பில்லை ஏற்றினார்கள்!

நிச்சயதார்த்தத்துக்கு நாள் குறிப்பிட்டார்கள்!

நிச்சயச் சேலை வாங்க, தாயாரோடு வந்து,தமயந்தியை அழைத்துப் போனான் சுகந்தன்.

அவனுக்குப் பிடித்தமான கிளிப் பச்சையில், வைர ஊசிப் பட்டை, தமயந்தி தேர்ந்தெடுத்தபோது, அவனுக்கு ஒரே சந்தோஷம்!

முந்திய நாளே, வருங்கால மாமியாரிடம், சுகந்தனுக்குப் பிடித்த வண்ணங்களைப் பற்றித் தமயந்தி கேட்டு அறிந்திருந்தாள் என்று தெரிந்தபோதும், அவனது மகிழ்ச்சி கொஞ்சமும் குறையவில்லை!

அந்த அளவுக்கு, அவனது விருப்பங்களை மதிக்கிறாள்., அவன் விரும்பும் விதமாக நடக்க எண்ணுகிறாள் என்பது, அவனுக்குப் பெருமையாக இருந்தது!

அதேபோல, அவ்வப்போது, தமயந்தியின் வீட்டுக்கு அவன் செல்லும்போதெல்லாம், அவனுக்குப் பிடித்தமான உணவுப் பதார்த்தங்களே பரிமாறப் பட்டன!

“உங்கள் அம்மாவிடம் கேட்டுத் பாப்பாவே தயாரித்தாள்!” என்று, வருங்கால மருமகனிடம் தாமரை பெருமிதமாகச் சொன்னதும், அவன் மனம் பூரித்து விம்மியது!

இப்படி, அவனுக்காகவே வாழ்கிற மனைவி அமைகிறபோது, இல்லறம் எவ்வளவு ஆனந்தமாக இருக்கும்!

தன் மகிழ்ச்சியைக் காட்ட, மரகதம் பதித்த பிரேஸ்லெட் வாங்கி, தமயந்திக்குப் பரிசளித்தான் சுகந்தன்!

அவளும், உயர்ந்த வகைப் பார்க்கர் பேனாவை வாங்கி, அவனுக்குப் பரிசளித்தாள்!

நிச்சயதார்த்தமும், வெகு சிறப்பாக நடைபெற்றது!

“என் கல்யாணத்துக்கு வந்து, உனக்குப் பெண் பார்த்தாயா?” என்றான் தியாகு!

அதையே, “என் திருமணத்தில், உனக்கு ஜோடி பிடித்தாயா?” என்று கல்பனாவும் கேலியாகக் கேட்க, இரு வகை நண்பர்களும் நகைத்தனர்!

“பெரிய பிரச்சினையாகிப் போயிற்றே! இதில் யார், யாரைப் பிடித்தது என்று தெரியாமல், எங்களுக்கு எப்படித் தூக்கம் வரும்?” என்றான் ஒரு நண்பன்!

“சந்தேகமே கிடையாதாக்கும்! எங்கள் சாது தமயந்தியை, மிஸ்டர் சுகந்தன்தான், பின்னோடு வந்து, கேளாமலே மணி சொல்லி, அப்படியே சுற்றி வளைத்துப் போட்டு விட்டார்!” என்று, விஷயத்தைப் போட்டு உடைத்தாள் நளினி!

“அது என்ன கதை? என்ன கதை?” என்று எல்லோரும் ஆர்வம் காட்ட, முதல்நாள்க் கதை, விலாவாரியாக விளக்கப் பட்டது!

“ஆகா! எங்கள் சுகந்தன் காது கேட்க, ஓடாத வாட்ச் கதையைச் சொல்லி, இலகுவாக அவனை வீழ்த்திவிட்டீர்களே, தமயந்தி! என்னோடு சேர்ந்து, சாமியாராகப் போக வேண்டிய பாவி, இப்படி

சம்சாரக் கடலில், தொபுக்கென்று விழுந்துவிட்டானே! "

என்று புலம்பினான் ஒரு நண்பன்!

"ஆமாம்பா! கல்யாணமாகி, மூன்றே ஆண்டுகளில் கையில் இரண்டும், மேடம் வயிற்றில் ஒன்றும் என்று ஜனத்தொகையைப் பெருக்குகிறவன், சர்வ நிச்சயமாகச் சாமியாராகப் போக வேண்டியவனேதான்! இல்லாவிட்டால், இந்தியா தாங்காது!" என்று யாரோ, முன்னவனின் காலை வார, இளைஞர்கள் நடுவில், ஒரே சிரிப்பும் கூச்சலுமாக இருந்தது!

மோதிரம் போடுகிற சாக்கில், சுகந்தன், தமயந்தி கையை வருடியதும், கண் கொத்தியாய் அதைக் கவனித்துவிட்டுச் சிலர் கேலி சேய்ததும், "அடச் சரிதான்ப்பா! மோதிரமே போட்டுவிட்டேன்! இனி என்ன ஒளிவு மறைவு? உரிமையோடு தொடுகிறேன்! பார்த்துக் கொள்ளுங்கள்!" என்று, அவளைத் தோளோடு அணைத்தாற்போல, சுகந்தன் நின்று போஸ் கொடுக்க, எல்லோரும் " ஓகோ! " என்று கைதட்ட, கூச்சத்தை மறைத்துக் கொண்டு, தமயந்தி புன்னகையோடு நெளிந்தாள்!

அவளது நிலையை உணர்ந்தவன் போல, அவளது தோளை லேசாக அழுத்திவிட்டு, அவளை விடுவித்தான் அவன்!

அந்த அழுத்தத்தில் ஆயிரம் அர்த்தங்களைக் கண்டு, உள்ளம் மகிழ்ந்தான் தமயந்தி!

விரைவிலேயே கணவனாகப் போகிறவன்! என்னிடம் என்ன வெட்கம், என்ற செல்லக் கண்டிப்பாம்!

எல்லாம், இந்த நட்புக் கூட்டத்துக்காகத்தான்! பயப்படாதே என்று தைரியம் சொல்வதாம்!

என் ஆசையை எவ்வளவு அடக்கிக்கொண்டு இருக்கிறேன், தெரிகிறதா என்று கோடி காட்டுகிறானாம்!

இப்படித் தமயந்தியும், அவளைத் தொட்டு மோதிரம் அணிவித்ததிலிருந்து, பல்வேறு கற்பனைகளில் சுகந்தனுமாகத் திருமணத்தை, மிக ஆவலுடன் எதிர்நோக்கி இருந்தனர்!

இந்தச் சமயத்தில், சுகந்தனுடன் வியாபாரத் தொடர்பு வைத்துக்கொள்ள விரும்பி, அவனுக்கு ஒருவன் டெலிஃபோன் செய்தான்.

சுகந்தனது தொழில் பல்வேறு வகை வால்வுகளைத் தயார்

செய்வது. அளவு துல்லியமாக, உறுதியானவையாக இருந்ததோடு, ஒப்புக்கொண்ட நேரத்தில், பட்டுவாடாவும் செய்யப் பட்டதால், அவனது பொருட்களுக்கு நல்ல மார்க்கெட்டும் இருந்தது!

இந்த நிலையில், புதிய ஒருவனிடம் ஏஜன்சி கொடுக்க, சுகந்தனுக்கு விருப்பமில்லை!

ஆனால், அந்தப் புதியவன், சுகந்தனை விடுவதாக இல்லை!

ஒருதரம், நேரில் பார்த்துப் பேசிவிட்டு, அதன் பிறகும் சுகந்தன் மறுத்தால், தலைவிதி என்று ஏற்றுக் கொள்வதாகக் கெஞ்சினான்!

ஒருவாறு இளகி, சுகந்தன், அவனைச் சந்திக்க நேரம் ஒதுக்கிக் கொடுத்தான்!

நிமிஷம் தவறாமல், குறிப்பிட்ட நேரத்தில் வந்து, சுகந்தனைச் சந்தித்தான், அந்த இளைஞன், ரத்தினவேலு!

இருக்கையில் அமர்ந்து, ஆஃபீஸ் பையன் வெளியே சென்று கதவைச் சாத்தியதுமே, அவசரமாக அவன் சொன்னான்! “சார், தமயந்தி என் காதலி! தயவு பண்ணி, அவளை, எனக்கு விட்டுக் கொடுத்து விடுங்கள்! “ என்றான் அவன்!

அவனைக் கூர்ந்து நோக்கினான், சுகந்தன்!

# அத்தியாயம் -4

சுகந்தனைச் சந்திக்க வந்த புதியவன் முகத்திலும் ஆராயும் நோக்குதான் இருந்தது! தன் சேதியின் பிரதிபலிப்பு என்ன என்கிற ஆராய்ச்சி.

ஆனால், இமைகள் லேசாக இடுங்கியிருந்தது தவிர, முன்னவன் முகத்தில் ஒரு மாறுதலும் இல்லை! மனதில் இருந்த எதையும், அவன் முகம் வெளியிடவும் இல்லை!

முதல் தலைமுறைப் படிப்பைக் காட்டும் சிறு திமிர், முகத்தில் லேசாகப் பளபளத்த பவுடர், வெறுப்பையும் பிடிவாதத்தையும் காட்டும் உதட்டு வளைவு, சட்டையை ஊடுருவித் தெரிந்த வலை பனியன், இவற்றின் கூட்டு மதிப்பாக அவன் கணித்தது எதையும்  சுகந்தன் காட்டிக் கொள்ளவே இல்லை!

ஆனால், “தொழில் விஷயம் பேச வேண்டும் என்று சந்திக்க அனுமதி கேட்டீர்கள்! அது பற்றிப் பேச ஒன்றும் இல்லையானால், நீங்கள் வெளியே போகலாம்!” என்றான் அவன், சற்றும் பிசிரற்ற குரலில்.

“சார் . . .”

சுகந்தன் வாயிலைப் பார்க்கவும், புதியவன் அவசரமாக, “நீங்கள் நம்பவில்லை என்று தெரிகிறது! நான் சொல்லுவது மெய் சார்! நானும் அவளும் காதலர்கள்! இணை பிரியாக் காதலர்கள்! கல்லூரியில் அவள் சேர்ந்த நாளில் இருந்தே, மனதால் இணைந்து விட்டோம்! என்னை, அவளுடைய நளன் என்றுதான், தேவபுரிக் கல்லூரியில் குறிப்பிடுவார்கள்!  “  என்று பரபரத்தான் அவன்!

“அதை, அவள் சொல்லட்டும், பார்ப்போம்!” என்றான் சுகந்தன் குரலில் சலனமே இல்லாமல்!

“எப்படிச் சொல்லுவாள்?” என்றான் வந்தவன் ஆத்திரத்துடன். “ உங்கள் பணத்தைப் பார்த்துப் பிரமிப்பு, என் தமயந்திக்கு! அவளுடைய பெற்றோரின் வற்புறுத்தல் வேறு! ஆனால், என் குரல் கேட்டால், ஓடி வந்து விடுவாள், சார்! ரத்தினவேல் என்று அவளிடம் சொல்லிப் பாருங்கள்! அப்புறம், உங்களைத் திரும்பிக் கூடப் பார்க்க மாட்டாள்!  . . .”

“இந்தக் கட்டிடத்திலிருந்து வெளியேற, உங்களுக்கு அவகாசம், இருபது வினாடிகள்!”

“சொல்லுகிறேனே, சார்! தேவபுரிக் கல்லூரிக்குப் போய் விசாரித்துப் பாருங்கள்! அவளுக்கு, என் ஆள் என்றுதான் பெயரே! . . .”

சுகந்தனின் விரல் இன்டர்காமில் பதியவும், ரத்தினவேல் சட்டென எழுந்தான்.

எழுந்து நடந்தபடியே, “பணத்தால், ஒரு பெண்ணின் உடம்பைத்தான் விலைக்கு வாங்க முடியும்! ஆனால், அது கேவலம் என்று . . .” என்று சொல்லிக்கொண்டே போனவன், வெளிப் புறமிருந்து கதவு திறக்கவும், பேச்சை நிறுத்தி, அவசரமாக அங்கிருந்து வெளியேறினான்.

“என்ன சார்?” என்று ஆஃபீஸ் பையன் கேட்க, ஒரு கணம் யோசித்துவிட்டு, “இனி இந்த ஆள் வந்தால், என்ன சொன்னாலும் உள்ளே விடாதே! சரியான அறுவை பார்ட்டி! மறை வேறு கழன்றிருப்பதாகத் தெரிகிறது!” என்றான் சுகந்தன்!

“கவனமாக இருக்கிறேங்கய்யா!” என்றான் பணியாள்.

அன்று மாலை, தமயந்தியை ஐஸ்கிரீம் பார்லருக்கு, சுகந்தன் அழைத்துப் போவதாகத் திட்டம்!

இரவு எட்டு மணிக்குள், பெண்ணை வீட்டில் கொண்டுவந்து விட்டுவிட வேண்டும் என்பது, எழுதாத சட்டமாக இருந்தது!

“விருப்பம் இருந்தால் சேர்ந்து வாழ்வது, இல்லாவிட்டால் பிரிந்து விடுவது என்று இருப்பது எனக்குப் பிடித்தம் கிடையாதுதான்! ஆனால், நிச்சயமாகி விட்டாலே சேர்ந்து வாழ்வதை, மேலை நாடுகளில் யாருமே, தப்பாக எண்ணுவது கிடையாது! இங்கே மட்டும், எதற்காக இந்தக் கட்டுப் பெட்டித்தனம் என்று, எரிச்சலாக இருக்கிறது!” என்றான் சுகந்தன் ஒரு நாள்!

ஓரக்கண்ணால் பார்த்துவிட்டு, “கவலைப்படாதீர்கள்! இந்தப் பிரச்சினையில் இருந்து தப்பிக்க, நமக்கும் ஒரு வழி இருக்கிறது!” என்றாள் தமயந்தி சாதுபோல.

இவளா இப்படிப் பேசுகிறாள் என்ற வியப்பும், ஆர்வமுமாக அவன் நோக்க, “பேசாமல், அடுத்த பிறவியில் அந்த நாடுகளில் ஒன்றில் பிறந்து விடுவோம்! அப்புறம் பிரச்சினையே இராதல்லவா?” என்று அதே அப்பாவிக் குரலில் கூறிவிட்டு, அவள் எச்சரிக்கையோடு பின்னே நகர்ந்துகொண்டாள்.

கண்ணில் ரசனையும் ஒளியுமாக அவளை நோக்கி ஓர் எட்டு எடுத்து வைத்தவன், தன்னைக் கட்டுப் படுத்திக்கொண்டு, வாய்விட்டுச் சிரித்தான்!

சிரித்தவாறே, “கிண்டலா? பொது இடம் என்பதால், தப்பித்தாய்! ஆனால், எல்லாம் கணக்கு வைத்து, அப்ப் . .புறமாய் இதற்கெல்லாம், வட்டி போட்டு வாங்கி விடுகிறேன், பார்!” என்று அவன் போலியாக மிரட்ட, அவள் வெட்கிச் சிவந்தாள்.

தன்னை அடக்கிக்கொள்ள, இப்போதுதான் அவன் மிகவும் சிரமப்பட்டுப் போனான்!

அதன்பிறகு, தனிமையான இடங்களுக்கு, சுகந்தன் தமயந்தியை அழைத்துச் சென்றதே கிடையாது!

இந்த நாட்டுப் பெண்! பாதுகாப்பான வளர்ப்பு! அவளை மிரள வைத்துவிடக் கூடாதே!

ஐஸ்கிரீம் பார்லர், பூங்காவில் விளக்கொளியும் சந்தடியும் மிகுந்த இடம், கடற்கரையில் முடிந்த அளவு சாலைப் பக்கம்!

வெறும் பேச்சுதான்! ஆனால், திடுமென மணியைப் பார்த்தால், எட்டை நெருங்கிக் கொண்டிருக்கும்!

“என்னவோ, தெரியவில்லை! இப்போதெல்லாம், நம் இருவர் கடிகாரங்களுமே, ரொம்பவும் வே . . கமாக ஓடுகின்றன!” என்று குறைப் பட்டபடி எழுவான் அவன்! “மெய்தான்!” என்று அவளும் ஒத்துக் கொள்ளுவாள்!

அன்று ஐஸ்கிரீம் பார்லருக்குப் போய் ஆளுக்கு ஒரு பழ சாலடை வாங்கிக் கொண்டு உட்கார்ந்தால், “ஹைய்யோ, நாங்கள் நிறையப் பேர் வந்து சேர்ந்துவிட்டோமே, இனிமேல், தனிமையில் இனிமை எப்படிக் காண்பீர்களாம்?” என்றவாறு, மூன்று தோழியரோடு, நளினி வந்து நின்றாள்!

“என்னவோ வந்து விட்டால், பூஜை செய்ய முடியாதாமே! அது போலவா? ஆமாம், அது என்னது தமயந்தி? இந்தப் பூஜை வேளையில் வந்து நிற்கும் என்பார்களே, அது! “

என்று தமயந்தியிடம் விவரம் கேட்டான் சுகந்தன்.

“யம்மாடி! எங்களைக் கரடி என்கிறார், நீயும் கேட்டுக்கொண்டு சும்மா நிற்கிறாயே! நீ சுத்த மோசம்பா, தந்தி!”என்றாள் ஒரு சினேகிதி!

“பரவாயில்லை! ஓரொருத்தருக்குப் புரியக்கூடச் செய்கிறது, தமயந்தி! “ என்று சுகந்தன் சிலாகிக்க, எல்லோரும் சிரித்தவாறே, அவனிடம் பாய்ந்தனர்!

“கரடி, முட்டாள் . . என்னவெல்லாம் சொல்லுகிறீர்கள்! இதற்குத்

தண்டனையாக எங்கள் எல்லோருக்கும், ஆளுக்கு ஒரு கார்னெட்டோ கோன் வாங்கிக் கொடுத்தாக வேண்டும்! இல்லையானால், இங்கேயே உட்கார்ந்து சத்தியாகிரகம் செய்வோம்! “ என்றாள் நளினி!

“ஐஸ்கிரீமைக் கையில் வாங்கியதும், இடத்தைக் காலி பண்ணுவதாக நீங்கள் உத்திரவாதம் கொடுத்தால், இப்போதே ஐஸ்கிரீம் கொண்டு வரச் சொல்லுகிறேன்! தமா, எதற்கும், திரும்பிப் போகப் பெட்ரோல் போட, உன்னிடம் பணம் இருக்கிறதா என்று பார்த்துக்கொள். இந்தப் பட்டாளத்துக்கு வாங்கிக் கொடுத்த பிறகு, என் கையில் ஏதேனும் மிஞ்சுமோ, என்னவோ!” என்று சோகமாகச் சொல்லியவாறு, சுகந்தன் பேரரைக் கைகாட்டி அழைத்தான்!

“பொறுங்கள்! பஸ்சுக்காவது, சில்லறை தேறுமா என்று பார்த்துக் கொள்ளுகிறேன்!” என்று தமயந்தியும் தீனக் குரலில் கூற, அங்கே அவுட்டுச் சிரிப்பு வெடித்தது!

நாற்காலிகளை இழுத்துப் போட்டு அமர்ந்தவாறு, “ஏய், நாம் கல்லூரியில், இருக்கிற சில்லறையை எல்லாம் கொட்டிச் சேர்த்து, கல்லூரிக் காண்டீனில் எதையாவது வாங்கித் தின்போமே, நினைவிருக்கிறதா?” என்று ஷோபனா கேட்க, தோழிகள் மலரும் நினைவுகளில் ஆழ்ந்தனர்!

காண்டீன் தயிர் வடையையும், ரவை இட்லியையும் எல்லோரும் ஆசையோடு நினைவுகூர்கையில், “ஏய், என்னங்கடீ, நாம் போன ஆண்டுதானே, படிப்பை முடித்தோம்! ஏதோ, பத்துப் பதினைந்து ஆண்டுகள் ஆகிவிட்ட மாதிரி கதை பேசுகிறீர்களே! போதும்! ஐஸ்கிரீம் உருகுகிறது! அதை, முதலில் சாப்பிட்டு முடியுங்கள்!” அப்புறமாக நினைவலைகளில், மூழ்கலாம்!” என்று, சற்று அதட்டலாகக் கூறினாள் தமயந்தி!

“ஏய், நம் கல்லுப்பு, ஐஸ்கிரீமை உருக வைத்து ரோஸ் மில்க் மாதிரிக் குடிப்பாளே, நினைவிருக்கிறதா?” என்றாள் ஒருத்தி!

“ம்ம். ரோஸ் மில்க்காக வாங்கு என்றாலும் மாட்டாள்! ஐஸ்கிரீம் உருகினால்தான் ருசி என்பாள்! பிடுங்கி வாயில் போட்டுக்கொள்ளலாம் போல, எனக்குத் துறுதுறு என்று வரும்!” என்றாள் நளினி!

“என்னவோ, ஹாஸ்டலில் அந்த ஒரே சாம்பார் சாப்பாட்டுக்கு, கல்லூரி காண்டீன் எவ்வளவோ ருசி போலத்தான் தோன்றியது!”

“மெய்யாகவே, ருசிதான்! இல்லையென்றால், பையன்கள் பிய்த்து எறிந்துவிட மாட்டார்களா? அதனாலேயே, நம் விடுதியில் எப்படியோ

சமைத்தாலும், கல்லூரிக் கான்டீனில் நன்றாகத்தான் செய்தார்கள்! பையன்கள் விடுதியில்கூட, சாப்பாடு  நன்றாய்த்தான் இருக்குமாம்! என் அண்ணன் சொல்லியிருக்கிறான். அவன் அங்கேதானே படித்தான் !" என்றாள் முதலில் பேசியவள்.

"நீங்கள் எல்லோரும் ஹாஸ்டலில் தங்கியா படித்தீர்கள்?" என்று விசாரித்தான் சுகந்தன்.

"க்கும்! தேவபுரி கல்லூரியில். அதன் உரிமையாளர், நட்பு, உறவு என்று ஏதோ ஒரு வகையில், எங்கள் குடும்பங்களுக்கு அறிமுகம் ஆனவர்! அங்கே சேர்த்தால், பிரச்சினையின்றிக் கேட்ட பாடம் கிடைக்கும்., தெரிந்தவர் என்பதால் பாதுகாப்பு . .  என்று, எங்கள் எல்லோரையும் எங்கள் பெரியவர்கள், அங்கே கொண்டுபோய்த் தள்ளி விட்டார்கள்! உப்புச் சப்பில்லாத சாப்பாட்டில், நொந்து போனோம்!" என்றாள் நளினி.

"சண்டைகூடப் போட முடியாமல், உரிமையாளர் தெரிந்தவராகிப் போனாராக்கும்! பாவம்தான்!" என்று தமயந்தியைப் பார்த்தான் சுகந்தன்!

அவள் இந்தப் பேச்சில் கலந்து கொள்ளாமல், "ஏய் ஷோபி, கல்பனாவைச் சொல்லிவிட்டு, நீ ஐஸ்கிரீமை உருக விட்டுக்கொண்டு இருக்கிறாயே! சீக்கிரமாகச் சாப்பிட்டுவிட்டுக் கிளம்புங்கள்! நளின், நீ நேரத்துக்குப் போகவில்லையானால், உன் விடுதி நிர்வாகி, உன்னை உள்ளேயே விட மாட்டார்கள்! கிளம்புங்கள்!" என்று அவர்களை விரட்டுவதில் முனைந்தாள்.

"இங்கேயும் விடுதியா? பாவம்தான்!" என்று முறுவலித்தான் சுகந்தன்!

"ஆமாம்! விடுதியில் தங்கித்தான் எம்சிஏ படிக்கிறாள்! ஆனால், விடுதி ஆன்ட்டி, எங்கள் கல்லூரி வார்டனைவிடக் கண்டிப்பு! விடுதி வேறு, அதனால்தான் அவளை விரட்டிக்கொண்டு இருக்கிறேன்! " என்று தமயந்தி விளக்கினாள்!

"பையன்கள் எப்படி நடந்து கொள்வார்கள்? இந்த சினிமாவில் வருகிற மாதிரி, பெண்களைச் சீண்டுவார்களா? காதல் . .ஓடிப் போய்க் கல்யாணம் . . .அல்லது, அதெல்லாம் வெறும் கதைதானா? "

"நல்லது, கெட்டது எல்லாரிடமும்தான் இருக்கிறது! நாம் இருக்கிற விதத்தில் மனதை அலைய விடாமல் இருந்தால், எதையும் சமாளித்துக் கொள்ளலாம்! " என்றாள் தமயந்தி!

“அப்புறம், இப்படி ஒரு நள மகாராஜாவும் கிடைப்பார்!” என்று நளினி முத்தாய்ப்பு வைத்து எழ, மற்றவர்களும் நகைத்தவாறே அவளைப் பின்பற்றினர்!

“சாரிசார்! சாரி, தந்தி! உங்களுக்கே அரியதாய்க் கிடைக்கும் தனிமையில், நீங்கள் சொன்ன கரடி மாதிரிக் குறுக்கிட்டுவிட்டோம்! ஆனால், உங்கள் இருவரையும் பார்த்துவிட்டு, பேசாமல் போக மனம் வரவில்லை. ஆனால், இனியும் சோதிக்க மாட்டோம்! கிளம்புகிறோம்! இனித் திருமணத்தில் சந்திப்போம்! பை!” என்நு நளினி சொல்ல, மற்றவர்களும் அதை ஆமோதித்தவாறே, அவளோடு கூடச் சென்றனர்!

“அப்ப்பா! இப்போதாவது கிளம்பினார்களே!” என்று, கடிகாரத்தைப் பார்த்தான் அவன் .

“நான் குறிப்புக் கொடுத்ததை, நல்லி புரிந்துகொண்டாள்!” என்று தமயந்தி முறுவலித்தாள்.

“நீயும்தான், என் மனம் புரிந்து குறிப்புக் கொடுத்திருக்கிறாய்! “ என்று மெச்சி மகிழ்ந்தான் சுகந்தன்.

“நமக்குக் கிடைப்பதே, ரொம்பவும் கொஞ்ச நேரம்! இன்று, அதுவும் போயிற்று!” என்று பெருமூச்சு விட்டாள் தமயந்தி.

அவனது பார்வை, அவளது முகத்தில் பிரியமாய் நிலைத்தது!

திருமணத்துக்கு ஒரு வாரம் இருக்கும்போது, சுகந்தனுக்குக் கூரியரில் ஒரு ஃபோட்டோ வந்தது! அதில், தமயந்தியின் கன்னத்தோடு கன்னம் ஒட்டி இழைந்தவாறு ரத்தினவேல் நின்றுகொண்டிருந்தான்!

# அத்தியாயம் -5

கூரியரில் வந்த கவர், சுகந்தனின் அலுவலக முகவரிக்குத்தான் அனுப்பப் பட்டிருந்தது!

சொந்த விஷயம் என்று, உறையின் மேல் குறிக்கப் பட்டிருந்ததால், நல்ல வேளையாக, அந்த உறையை வேறு யாரும் பிரித்திருக்கவில்லை!

உறையின் மீது இருந்த அனுப்புனரின் பெயரைப் பார்த்ததுமே ஓரளவு எரிச்சலூட்டும் விஷயத்தை, சுகந்தன் எதிர் பார்த்தன்தான்!

ஆனால், அப்போதும்கூட, அவன் முகம் கடுத்துவிட்டது!

முட்டாள்! இப்படி அனுப்பி வைத்திருக்கிறானே!

சொந்தக் கடிதங்களைக் கூட, உறை பிரித்து அடுக்கி வைக்கும் செயலாளர்களை உடைய அலுவலகங்கள் இருக்கின்றனவே! இங்கேயும் அப்படி இருந்திருந்தால், என்ன ஆகும்? இந்தப் படத்தை, அந்தச் செயலாளர் பார்த்திருந்தால் . . .?

ஒரு வேளை. . . .பார்க்க வேண்டும் என்றுதான் இப்படி அனுப்பி வைத்தானோ?

அவனது வெறும் பேச்சுக்குச் சுகந்தன் மதிப்புக் கொடுக்கவில்லை என்று, இப்படி உந்திப் பார்க்கிறானா?

புகைப்படத்தைக் கூர்ந்து பார்த்துவிட்டு, உறையோடு கைப்பெட்டியுள் வைத்தான் சுகந்தன்.

வீடு செல்லும் வழியில் எத்தனையோ ஃபோட்டோ ஸ்டூடியோக்கள்!

சற்றும் அறிமுகமற்ற ஒன்றில் நுழைந்து, ரத்தினவேல் அனுப்பிய படத்தை எடுத்துக் காட்டினான்.

“அதில் உள்ள முகங்களை மாற்றி, வேறு முகங்களை வைக்க முடியுமா?” என்று விசாரித்தான்.

“இந்த மாதிரி வேலையெல்லாம், நாங்கள் செய்வது இல்லை! முதலில் இடத்தைக் காலி பண்ணுங்கள்! சரியான கிரிமினல் கிராக்கி!” என்று கடுப்புடன் எரிந்து விழுந்தார், ஸ்டூடியோ உரிமையாளர்!

அசையாமல் அமர்ந்திருந்து, “அப்படிச் செய்து கொடுங்கள் என்று, உங்களை நான் கேட்டேனா?” என்று பதில் கேள்வி கேட்டான் சுகந்தன்.

“வேறே எதற்காக, உங்களுக்கு அந்த விவரம் தேவைப்படுகிறதாம்?” என்று, கடுப்பு முழுமையாக மறையாத குரலிலேயே வினவினார் மற்றவர்.

“இந்த ஃபோட்டோ, அப்படித் தயார் செய்யப் பட்டதா என்று அறியும் ஆர்வம் எனக்கு. அதற்காகவே கேட்டேன்!” என்று புகைப்படத்தை அவர் முன் நகர்த்தினான் சுகந்தன்.

இப்போது அமைதியடைந்து, “ விஞ்ஞானம் முன்னேற, முன்னேற நல்லதைச் செய்வோம் என்று யாரும் எண்ணக் காணோம்! அததை வைத்து, என்ன திருட்டுத்தனம் பண்ணலாம் என்பதில்தான் நம் மக்களின் மூளை, முழுமூச்சுடன் வேலை செய்கிறது!” என்றவாறு, படத்தை எடுத்துக் கூர்ந்து பார்த்தார், அந்த இடத்து உரிமையாளர்!

“நிச்சயமாகச் சொல்ல முடியாவிட்டாலும், பெருமளவு, இந்தப்படம் அப்படித் தயார் செய்யப்பட்டது என்றுதான் எனக்குத் தோன்றுகிறது, சார்! தடகள ஆய்வு செய்து பழக்கப் பட்டவர்கள் என்றால், நிச்சயமாக இப்படித்தான் என்று சொல்லிவிடுவார்கள்! எனக்கு அவ்வளவு திறமை கிடையாது! ஒத்துக் கொள்ளத்தான் வேண்டும்! “என்றார் தொடர்ந்து.

“ஆனால், இந்த மாதிரி ஆளை மாற்ற முடியும் என்கிறீர்கள்!”

“நிச்சயமாக! “ என்று சொல்லி, ஒரு படத்தை எடுத்து சுகந்தனிடம் காட்டினார் அவர்.

இரு குழந்தைகள்! ஒன்றை ஒன்று தோளோடு அணைத்துக்கொண்டு நின்றன. இரட்டைப் பிள்ளைகள் போலத் தோற்றின. ஆனால், மெய்யாகவே இரட்டைப் பிள்ளைகள் என்றால், இவர் அதைப் பெரிதாக எடுத்துக் காட்ட வேண்டியது இல்லையே! அதுவும், சற்றுப் பெருமையாக!

அதையே அவன் சென்னபோது, அவர் ஒப்புதலாய்த் தலையாட்டினார். “நீங்கள் நினைத்தது சரியேதான், சார்! இருவரும் அம்மாவும் பெண்ணும்! மூன்று வயதில் அம்மாக்காரியை எடுத்த படத்தைக் கொணர்ந்து, குழந்தை படத்தோடு, இப்படிச் சேர்த்துத் தரச் சொன்னார்கள்! ஒரு தப்புத் தண்டா கிடையாது! தாயும் தகப்பனும் சேர்ந்து வந்து இணைத்துத் தரச் சொன்னார்கள்! படத்தைப் பார்த்துக் குழந்தை, இன்னொரு செல்லக் குட்டி எனவும் ஒரே சிரிப்பு! எனக்கு, மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது, சார்! கம்ப்யூட்டரில் “ அடோப் ஃபோட்டோ ஷாப் சாஃப்ட் வேர் “ பயன்படுத்தி, ஃபோட்டோக்களில் செய்ய முடியாததே கிடையாது எனலாம்! ஆனால், செய்தால், இது போல ஏதானும் செய்ய வேண்டும்! அதைவிட்டு, மனச் சாட்சியை அடகு

வைத்துவிட்டு,  கண்டவனோடு, கண்டவளைச் சேர்த்து எடுத்து, குடும்பத்தில் குழப்பத்தை உண்டு பண்ணி . .சே! நாய்ப் பிழைப்பு, சார்! வைக்கோல்போர் நாய்! “ என்றார் ஸ்டூடியோக்காரர் கோபமாக.

“ஆனால், எல்லா இடங்களிலும், அந்த வேலை பலிப்பதில்லையே!” என்று முறுவலித்துவிட்டு, சுகந்தன் எழுந்தான். “எனக்காக இவ்வளவு நேரத்தைச் செலவு செய்ததற்கு, நான் என்ன தரட்டும்?” என்று பைக்குள் கையை விட்டான்!

“உங்களுக்கு நான் ஒன்றுமே செய்யவில்லையே! வெறும் பேச்சுக்கெல்லாம் பணம் வாங்குகிற அளவு, நான் பெரிய மனிதன் அல்ல,சார்!”

“ஆனால், என்னோடு பேசிய நேரத்தில், நீங்கள், உங்களுக்காக எவ்வளவோ செய்செய்திருக்கலாமே! டார்க் ரூமில், படம் கழுவியிருக்கலாம்!, பிரின்ட் போட்டிருக்கலாம்! , வெறும் கணக்கு வழக்கைப் பார்த்தால் கூட, இந்த நேரம், ஏதோ ஒரு வகையில், உங்களுக்குப் பயன்பட்டிருக்கும்! என்னால் கெட்டதே ! அதனால் . .” என்று பையிலிருந்து ஒரு நூறு ரூபாள்த் தாளை எடுத்து மேஜை மேல் வைத்துவிட்டு, அங்கிருந்து வெளியேறினான், அவன்!

கையில் இருநற்த புகைப்படத்தைச் சுக்கல் சுக்கலாகக் கிழித்து, அருகில் இருந்த குப்பைத் தொட்டியில் வீசிவிட்டுக் காரைத் திறந்து ஏறினான்!

இன்னும் ஐந்து நாட்கள் இனிமையாகக் கடந்து செல்ல, மறுநாள் திருமணம் என்கிற நிலை வந்தது!

அன்றைக்குக் காரை வழி மறித்து நிறுத்தச் செய்தான் ரத்தினவேல்!

அவன் மேல் ஏற்றாமல், காரை மேலே ஓட்ட முடியாது!

“என்னப்பா, உனக்கு மூளையே கிடையாதா?” என்று எரிச்சலுடன் இறங்கினான் சுகந்தன்.

அவன் இறங்கி வரும்வரை, ரத்தினவேல், வழியை விட்டு நகரவே இல்லை!

“பின்னே, நீங்கள் சும்மாவே இருக்கிறீர்களே, சார்?”  என்றான் அவன் அழாக் குறையாக.

சுகந்தன் பேசாமல் நிற்கவும், “இதற்கு மேலும் தாமதிக்காதீர்கள், சார்! இன்றே, திருமணத்தை நிறுத்தி விடுங்கள்! “ என்றான் அவசரமாக.

“இதோ பார்! தமயந்திதான் பணத்துக்காக, உன்னை

விட்டுவிட்டதாகச் சொல்லுகிறாயே! அப்புறம், திருமணத்தை நிறுத்துவதால், உனக்கென்ன லாபம்?”

“சார், நீங்கள் அவளை விட்டுவிட்டால், அப்புறம் அவளுக்குப் பணமாயை விலகி விடும்! தானாக என்னிடம் வந்து விடுவாள், சார்!”

“வராவிட்டால்?”

“எல்லாம் வருவாள்!”

“வராவிட்டால்? எனக்குப் பதிலாக, இன்னொரு பணக்காரனையே, அவள் பிடிக்கலாமே!” என்றான் சுகந்தன் மீண்டும்.

“முதலில், நீங்கள் வழியை விட்டு விலகுங்கள், சார்! பிறகு, அவள் என்னிடம் வருவதை, நான் பார்த்துக் கொள்ளுகிறேன்! “ என்றான் ரத்தினவேல் சிறு திமிரோடு!

“எப்படிப் பார்ப்பாய்?”

சுருக்கமாகவே, மீண்டும் கேள்வி கேட்டான் சுகந்தன்.

“மிக எளிது, சார்! இவ்வளவு தூரம் வந்துவிட்டுச் சும்மாவா திருமணத்தை நிறுத்துவார்கள் என்று பரப்பி விட்டால், அப்புறம் தேடி வந்து என் காலடியில் விழுந்துதானே, ஆக வேண்டும்?”

“ஓஹோ!” என்றதோடு, சுகந்தன் காரில் ஏறப் போனான்!

“என்னசார், எச்சில் இலையில்கூடச் சாப்பிடுவீ ர்கள் போல? இவ்வளவு சொல்கிறேன், புரியவில்லையா? நாங்கள் இருவரும் காதலர்களாக இருந்திருக்கிறோம் என்கிறேன்! அதனால்தான், அவளை விட்டு விலகிப் போங்கள் என்கிறேன்!” என்று அவன் அருகே ஓடி வந்து கத்தினான் ரத்தினவேல்.

நின்று திரும்பி, அவனைக் கூர்ந்து பார்த்தான் சுகந்தன்! “விதவைத் திருமணங்கள், விவாகரத்துத் திருமணங்கள் சாதாரணமாகிவிட்ட இந்தக் காலத்தில், எச்சில் இலை, அது இது என்று, என்ன அசிங்கமான பேச்சு?! “ என்று அருவருப்புடன் உரைத்தவன், சட்டெனக் காரில் ஏறி அமர்ந்தான்.

“சா . .ர்! நிறுத்தி விடுங்கள்! இல்லாவிட்டால், ஒரு கொலை செய்த பாவம் உங்களைச் சும்மா விடாது!” என்றான் மற்றவன் மிரட்டுவது போல! “அவள் இல்லை என்றால், நான் நிச்சயமாக, என் உயிரையே விட்டு விடுவேன், தெரியுமா?

என்ன பைத்தியக்காரத்தனமான பேச்சு, இது? இந்த ரத்தினவேல், அவனுக்கு, உறவா, நட்பா? இந்தச் சென்னையில் உள்ள பல லட்சக்

கணக்கான மனிதர்களில், இவனும் ஒருவன்!  இவன் இருந்தாலும், அன்றி, செத்தாலும், அது அவனை எப்படிப் பாதிக்க முடியும்? அதைச் சொல்லி மிரட்டுகிறானே!

முட்டாள் என்று எண்ணினான் சுகந்தன்!

வெளிப்படையாக, “மெய்யாகச் சாக நினைக்கிறவன், அதைச் சொல்லிக்கொண்டு இருக்க மாட்டான்! நீயும், அப்படி ஒன்றும் உயிரை விட்டுவிட மாட்டாய்!” என்று அலட்சியமாகக் கூறியவன், சட்டெனக் காரைக் கிளப்பிக்கொண்டு போய்விட்டான்!

கோபம் கொப்பளிக்க, கார் சென்ற திசையையே பார்த்தபடி, தரையை உதைத்தான் ரத்தினவேல்!

“நானா, உயிரை விடமாட்டேன்? என்னையாடா அலட்சியப் படுத்திவிட்டுப் போகிறாய்? கசமாலப் பயலே! இரு! இதற்கெல்லாம், வட்டியும் முதலுமாகச் சேர்த்து, உன்னை அழ வைக்கிறேன்! “ என்று உக்கிரத்துடன் சூளுரைத்தான், அவன்!

# அத்தியாயம் -6

கண் பார்வையை விட்டு ரத்தினவேல் மறைந்ததுமே, சுகந்தன் அவனை மறந்து போனான்!

சிங்கப்பூரில் இருந்து திருமணத்துக்காக வந்திருந்த சித்தி வீட்டார் தமயந்தியைப் பார்க்க வேண்டும் என்று கேட்டார்கள் என்று, முந்திய தினம், அவர்களை அவள் வீட்டுக்கு அழைத்துச் சென்றிருந்தான். தாமரைப் பூ வண்ணத்தில் பட்டுச் சேலை உடுத்தி, தேவதை போல அவள் நின்ற தோற்றமே அவன் மனதில் நிறைத்திருந்தது.

மற்றதெல்லாம் ஓடு நீரில் விழுந்த துரும்பைப் போலக் கணத்தில் காணாமல், கண் மறைந்து போயின!

ரத்தினவேலால், பெரிய துன்பம் எதையும் சுகந்தன் எதிர்பார்க்கவும் இல்லை!

தமயந்தியோடு கூடப் படித்தவன்! அவளது அழகில், ஈர்ப்புற்றிருக்கக் கூடும்! அதில் ஆச்சரியப் படவோ, ஆத்திரப் படவோ ஏதும் இருப்பதாக, சுகந்தன் எண்ணவில்லை! ஏனெனில், தமயந்தியின் அழகு அப்படிப் பட்டது! பார்க்கப் பார்க்கப் பல மடங்காகப் பெருகுகிற அழகு!

பெருமளவு உலகம் அறிந்தவன் என்று கருதப்படும், அவனாலேயே, அவளை ஒரு கணமும் மறக்க முடியவில்லையே!

வேலையில் ஈடுபட்டால், வீடு, மற்ற விஷயங்களை அடியோடு மறந்து விடுகிறாயே என்று, தாயார் அவனைக் குறை கூறுவதுண்டு! ஆனால் இப்போது? உள்ளூர அவள் முகத்தை ரசித்தபடியேதானே, அவன் வேலை செய்வதே! நல்ல வேளையாக, தமயந்தியின் அழகு, அவன் மனதைக் குளிர்விப்பது தவிர, அவனது வேலையைக் கெடுப்பது இல்லை!

இப்படிப்பட்ட அழகு, எல்லோரையும் பாதிக்கத்தான் செய்யும்! அழகை ரசிக்க, எல்லோருக்கும் உரிமை உண்டுதானே?

ஆனால், அதற்குமேல் ரத்தினவேலின் ரசிக வெறி பற்றித் தமயந்திக்கு எதுவும் தெரியுமா என்பதே, அவனுக்குச் சந்தேகம்தான்! ஓரளவு தெரிந்திருந்தாலும், அவனது உணர்ச்சிகளை, அவள் பிரதிபலித்திருக்க மாட்டாள் என்பது, அவனுக்கு நிச்சயம்!

ஓரிரு பார்வைகள் கூட, சாத்தியமே! ஆண்பெண் கலந்து படிக்கும் கல்லூரிகளில், அது பெரிய விஷயமே அல்ல!

மற்றபடி, தமயந்தி, அவனுக்காகவே காத்திருக்கும் புதுப்பூ!

நெட்டி முறித்துவிட்டுப் படுக்கையில் விழுந்த சுகந்தன், தமயந்தியைப் பற்றிய கனவுகளில் ஆழ்ந்து, அப்படியே உறங்கிப் போனான்!

பெரிய திருமண மண்டபம்!

உயர் மட்டத்து மனிதர்கள் வருவார்கள் என்பதால், பாதுகாப்பு ஏற்பாடுகளும், சிறப்பாகவே செய்யப் பட்டிருந்தன!

இல்லாவிட்டாலும், ரத்தினவேல் தடாலடியாக எதையும் துணிந்து செய்யக் கூடியவன் அல்ல என்பதுதான் சுகந்தனின் அபிப்பிராயம்!

வழலைப் பாம்பு மாதிரிக் காலைச் சுற்றிக்கொண்டு நெளிந்து அருவருப்பை ஏற்படுத்தலாம்! ஆனால், கொத்துகிற அளவு . . . மணப்பெண்ணைக் கடத்துவது, கத்தி, துப்பாக்கியைக் காட்டி, மிரட்டிக் காரியம் நடத்துகிற தைரியம் அவனுக்கு இராது என்று, சுகந்தன் நிச்சயமாக நினைத்தான்!

தனித்து வரும்  பெண்ணிடம் ஒரு வேளை, அவன் வீரம் காட்டக் கூடும்! ஆனால், அவனுடைய தமயந்தி, அப்படி யாரிடமும் போய் யாரிடமும் மாட்டிக் கொள்ளக் கூடிய அளவு முட்டாள் அல்ல! அவள் கெட்டிக்காரி!

எனவே, ரத்தினவேலைப் பற்றிய எந்தவித உறுத்தலும் இன்றி, திருமண நிகழ்ச்சிகளில், சுகந்தன் மகிழ்ச்சியோடு ஈடுபட்டான்!

உறவு, நட்பு  எல்லோரது கேலி கிண்டல்களையும் ரசித்து இன்புற்றான்!

இந்த இனிய சூழ்நிலையில், திருமணமும் இனிதே நிறைவேறியது!

திருமண விருந்து முடிந்ததுமே, மேல் நாட்டினர் மாதிரி , மனைவியோடு தேனிலவுக்குப் பறந்துவிட மாட்டோமா என்றிருந்தது அவனுக்கு!

ஆனால், இங்கேதான் விருந்து, மறு விருந்து, மறு வீடு, சம்பந்தம் கலப்பது என்று ஏகப்பட்டது உண்டே!

அத்தோடு, தேனிலவு முடிந்து திரும்பி வந்ததும், முழு மூச்சுடன் வேலையில் ஈடுபட வேண்டும் என்று சுகந்தன் முடிவு செய்திருந்ததால், நெருங்கிய உறவினர் வீட்டு விருந்துகளைக் கூட, அவன் அப்போதே முடித்துவிட விரும்பினான்.

இந்த விருந்து வகையறா எல்லாம் முடிந்து, சுகந்தனும், தமயந்தியும், ஒருவாறு தேனிலவுக்குக் கிளம்பிச் செல்லக் கிட்டத் தட்ட இரண்டு வாரங்கள் ஆகிப் போயின!

இந்த இரண்டு வாரங்களும், இங்குமங்குமாக அலைந்த அலைச்சலில்,

கணவன் மனைவி இருவருமே, இந்தத் தனிமையை வெகு ஆவலாக எதிர்பார்க்கத் தொடங்கியிருந்தனர்!

எதிர்பார்ப்பு வீணாகவுமில்லை!

திருமணமானபின் கணவனையும் மனைவியையும் தேனிலவுக்கு அனுப்பி வைப்பது, காதல் செய்வதற்காக மட்டுமே அல்ல! அத்தோடு சேர்த்து, எந்தவிதக் குறுக்கீடும் இன்றி ஒருவரை ஒருவர் நன்கு அறிந்துகொள்ளவும்தான்.

அந்த வகையில், இருவருமே அவரவரைப் பற்றிச் சொல்லிக் கொண்டனர்.

பேச்சு வாக்கில், சின்ன வயது மயக்கம் பற்றி, சுகந்தன் சொன்னான்.

"நான் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த சமயம், தமா. மூன்றாம் ஆண்டு மெக்கானிக்கல்! ஒரு பெண் வந்து வந்து பேசுவாள். பாடம் சந்தேகம் கேட்கிற மாதிரி

வந்து, முகத்தையே பார்த்துக்கொண்டு நிற்பாள்! நண்பர்கள் எல்லோரும் சேர்ந்து, அவளுக்கு என்மேல் காதல் என்றார்கள்! " அப்படியா? " என்று கேட்டால், " ஆமாம். " என்றாளா, எனக்கு உச்சி குளிர்ந்துவிட்டது! அவள் ஆசைப்பட்ட இடங்களுக்கெல்லாம் கூட்டிக்கொண்டு அலைந்தேன்! பிறகு பார்த்தால், அவள் சும்மா சினேகிதிகளிடம் பந்தா காட்டுவதற்காக, என்னோடு சுற்றியிருக்கிறாள்! என் கையில் எப்போதும் கொஞ்சம் பணம் இருக்குமா? பெரிய ஸ்டார் ஹோட்டல் தீனி ஆசை! விஷயம் தெரிந்ததும், உடனே விட்டுவிட்டேன்!" என்று, சுகந்தன் விவரம் சொன்னான்!

"ஐயா, சரியான கஞ்சப் பிசுநாரி போல!" என்று, கலகலத்துச் சிரித்தாள் அவனுடைய மனைவி.

சில வினாடி அந்தச் சிரிப்பைப் பார்த்துக்கொண்டிருந்துவிட்டு, "அப்புறமாக, இந்த வலை எதிலும், நான் சிக்கினதில்லை! லேசாக ரசனைபோலத் தோன்றினாலும், முன் அனுபவம் எச்சரிக்கை மணி அடித்துவிடும்!" என்று தெரிவித்தவனின் பார்வை லேசாக மாறியது.

"உனக்கு?" என்று மெதுவாகக் கேட்டான்.

"எனக்கு என்ன?" என்று, புரியாத பார்வையாய் விழி விரித்துக் கேட்டாள் தமயந்தி.

"அதுதான், முன் காதல் அனுபவம்! இந்தத் தமயந்திக்கு, எத்தனை தேவர்கள் நளனாக வந்து காட்சி தந்து காத்துக் கிடந்தார்களோ?" என்று,

வேடிக்கையாகவே வினவினான் சுகந்தன்.

“இந்த நளன் மாதிரியா?” என்று அவன் மூக்கைப் பிடித்து ஆட்டிக் கேட்டாள் அவள் .

அவளது கையைப் பற்றித் தடுத்து, “சொல்லும்மா? நளதமயந்தி கதையில் நாலு தேவர்களா? உன் வாழ்வில், நாலு . .மூன்று . .இரண்டு? அல்லது ஒன்றே ஒன்று? பழைய கசமுசா, உனக்கு எத்தனைடா, தமா?” என்று, அது ஒன்றும் பெரிய விஷயம் இல்லை போல, இலகுவாகவே மீண்டும் துருவினான், கணவன்.

“ம்ம்ம் . . .” என்று புருவம் சுருக்கி யோசித்தாள் தமயந்தி.

பிறகு, உதட்டைப் பிதுக்கி, இல்லையென்று தலையசைத்தாள்!

சொல்லலாமா, வேண்டாமா என்று யோசித்தாளோ என்று, அவனுக்குச் சிறு சந்தேகம்!

ஆனால், மொட்டாகப் பிதுங்கியிருந்த கீழுதட்டைப் பார்க்கையில், மற்றது எல்லாமே சுகந்தனுக்கு மறந்தே போயிற்று!

சுகந்தன் ஒன்றும், முழுக்க முழுக்கக் கொஞ்சலும் குழைவுமே உருவானவன் அல்ல என்று தமயந்திக்குக் காட்டுவது போல, அங்கிருந்து கிளம்புவதற்கு முந்திய நாள் ஒன்று நடந்தது!

காலை வேளைகளில் உலாவிவிட்டு அறைக்குத் திரும்பும்போது, சின்ன பெட்டிக்கடை ஒன்றில் டீ குடிப்பார்கள்.

டீ கொண்டு வந்து தரும் சிறுவன், “டீ மட்டும் போதுமா? வடாவும் தரட்டுமா?” என்று சிறு ராகத்துடன் கேட்கும் அழகை ரசிப்பதற்காகவே, அதே கடையிலேயே டீ குடிப்பார்கள்.

கணவன் மனைவி இருவருக்குமே, அவனை அவ்வளவு பிடித்துப் போயிருந்தது! எனவே, தாராளமாக டிப்சும் கொடுப்பார்கள்! மறுநாள் கிளம்பிவிடப் போவதால், அன்று கொஞ்சம் நிறையவே பணம் கொடுக்க வேண்டும் என்று திட்டமிட்டிருந்தார்கள்!

அன்று குடித்த டீக்குப் பணம் கொடுத்துவிட்டு, மீதியை வாங்கி வருமாறு, பையனிடமே நூறு ரூபாயைக் கொடுத்து அனுப்பிவிட்டு, இருவரும் பேசிக் கொண்டிருந்தனர்!

பையன் கொண்டு சில்லறையை வாங்கிக்கொண்டு, அவனுக்குக் கொடுக்க, முப்பது ரூபாயை எடுத்தபோது, கையில் இருந்த சில்லறைக் காசுகளின் மீது, சுகந்தனின் பார்வை விழுந்தது.

இரண்டு ரூபாய் குறைவாக இருந்தது!

“என்னடா இது?” என்று அவன் அதட்டும்போதே, சிறுவனின் மெல்லிய சட்டைப் பையில், இரண்டு ரூபாய் நாணயத்தின் வரிவடிவம் நன்றாகவே வெளியே தெரிந்தது!

“திருட்டுப் பயலே, இந்த வயதிலேயே திருட்டாடா?” என்று திட்டத் தொடங்கி விட்டான் சுகந்தன்.

தான் திருடவில்லை., இரண்டு பேருக்குச் சில்லறை வாங்கி வந்ததில், முதலில் கொடுத்தவருக்கு இரண்டு ரூபாயைக் கூடக் கொடுத்திருக்க வேண்டும்., அல்லது, வழியில் விழுந்திருக்க வேண்டும்., இந்த இரண்டு ரூபாய் தன் சொந்தப் பணம் என்று, பையன் எவ்வளவோ வாதாடியும் பயன் இருக்கவில்லை!

“போகிறான் , விடுங்கள்! இரண்டு ரூபாய்தானே?” என்று தமயந்தி இடையிட்டது, எரிகிற தீயில் எண்ணையை ஊற்றியது போல ஆயிற்று!

“இரண்டு ரூபாயோ, இரண்டு லட்சமோ? தொகை எவ்வளவாக இருந்தால் என்ன? அவன் செய்தது திருட்டு! சொன்னது பொய்! இதை மன்னிக்க முடியாது! இதை, இவனுடைய முதலாளியிடமே சொல்லி, இவனை வேலையை விட்டு விரட்ட வேண்டும்! “ என்று சுகந்தன் எழவும் பையன் அரண்டு விட்டான்!

“அய்யய்யோ, அண்ணா வேண்டாம்! அப்புறம் முதலாளி வேலையை விட்டுத் துரத்தி விடுவார்! வீட்டிலே அடி விழும் . . அக்கா, சொல்லுங்க அக்கா! மெய்யாலும், இது என் பிறந்த நாளுக்கு என்று, மிட்டாய் வாங்க, எங்க அம்மா  கொடுத்த காசுதான்க்கா! இதை வேணுமானாலும் தந்திடறேன்க்கா! . . “ என்று பையன் பதறியது அவளுக்கு இரக்கத்தைத் தூண்டியபோதும், சுகந்தன் இளகவில்லை!

“ஆமாம், அவனது இந்தப் பிச்சைக் காசுக்காகத்தான் நான் ஏங்கி வீங்கிப் போயிருக்கிறேனாக்கும்! இப்போதும், பொய்யை விடுகிறானா, பார்! இவனைச் சும்மா விடவே கூடாது!” என்றுதான் கிளம்பினான்!

பையனின் தவிப்பைக் காண, தமயந்திக்குத் தாளவில்லை! பிறந்த நாள் என்று வேறு சொல்லுகிறானே!

ஒருவேளை, அவன் சொல்வதே மெய்யாக இருந்தால்? இல்லாவிட்டாலும்தான் என்ன? சின்னப் பையன்! பெரியவர்களுக்கே ஆசையை அடக்க முடிவதில்லையே!

சுகந்தனின் கையைப் பற்றி நிறுத்தி, “பாருங்கள், சின்னப் பையன்! வீட்டிலும் கஷ்டம் போல! இத்தனை நாள் சந்தோஷமாக இருந்துவிட்டுக் கிளம்புகிறபோது, ஒரு பையனின் வயிற்றில் அடித்த

பிரச்சினையோடு போவானேன்? விட்டுவிடுங்களேன்!” என்றாள் கெஞ்சுதலாக.

“இவன் செய்த தப்புக்கு . . .”

“தப்புதான் என்று என்ன நிச்சயம், சொல்லுங்கள்? ஒருவேளை, உண்மை, இவன் சொன்னதாகவும் இருக்கலாமே! பத்துக் குற்றவாளிகள் தப்பினாலும் பரவாயில்லை., ஒரு நிரபராதி தண்டிக்கப் பட்டுவிடக் கூடாது என்றுதானே, நம் சட்டமே சொல்லுகிறது? நாமும், சந்தேகத்தின் பலனை இந்தச் சிறுவனுக்குக் கொடுத்து மன்னித்து விடலாம் அல்லவா?” என்று நயமாகப் பேசினாள் தமயந்தி.

“நானாக இருந்தால், பத்து நிரபராதிகள் தண்டிக்கப் பட்டாலும் பரவாயில்லை., ஒரு குற்றவாளி தப்பிவிடக் கூடாது என்று சட்டத்தை மாற்றி எழுதியிருப்பேன்! “ என்றான் அவளுடைய கணவன் கடுப்புடன்.

“ப்ளீஸ்யா, எனக்காக விட்டுவிடுங்கள்! இங்கிருந்து, ஓர் உறுத்தலுடன் கிளம்ப எனக்கு மனமில்லை! அதனால் . .எனக்காக . . .” என்று அவள் கெஞ்சுதலாக நோக்கவும்,

புருவத்தில் சுளிப்புடன் சுகந்தன் சற்று நேரம் பேசாமல் நின்றான்.

“போய்த்தொலை!” என்று பையனை விரட்டியவனின் முகம் வெகுநேரம் சரியாகவே இல்லை!

சற்றுப் பொறுத்துவிட்டு, அறையின் தனிமையில், “இன்னும் கோபமா?” என்று, அவன் தோளைப் பற்றிக் குழைவாகக் கேட்டாள் தமயந்தி.

“பின்னே? அந்தப் பையனுக்கு வாழ்நாள் பூராவும் மறக்க முடியாத ஒரு பாடம் கற்றுக் கொடுத்திருக்க வேண்டியது! கெடுத்துவிட்டாயே! அங்கே வைத்துக்கொண்டு, அவன் முன்னிலையில், “ உனக்காக “ என்கிறாயே! எனக்கு எப்படி இருக்கும்? மறுத்தாலும், அக்கம் பக்கத்தோர் பார்க்க, உன்னை அங்கே வைத்து அவமானப் படுத்துவது போல ஆகும்! அதுவும் அசிங்கம்! எனக்கோ, ஒரு தப்பைப் போனால் போகிறது என்று விடுவது, ரொம்பவும் பிடிக்காத காரியம்! உன்னால், இன்று அதைச் செய்யும்படி ஆயிற்று! தயவு பண்ணி, இதை மனதில் வை! எந்தத் தப்பையும் மன்னிக்கும்படி மட்டும், இனி ஒருபோதும் என்னிடம் கேட்காதே!” என்று ஆத்திரத்தை உள்ளடக்கிய குரலில் சுகந்தன் கூறியதோடு, தோளைப் பற்றியிருந்த அவளது கையையும் விலக்கிவிட்டுப் போய், ஓர் ஒற்றை சோஃபாவில் உட்கார்ந்து, பத்திரிகையைப் புரட்டலானான்.

தமயந்தி திகைத்துப் போனாள்!

இருந்திருந்து, ஒரு சின்னப் பையன்! அவன் திருடியதாக சுகந்தன் கருதியதும் பெரிய தொகையில்லை! இரண்டே ரூபாய்! அதை, அவன்தான் திருடினான் என்பதுகூட

நிச்சயம் இல்லை! அவனிடம்போய் இன்னமும் கோபப் பட்டுக்கொண்டு இருக்கிறானே என்று எண்ணினால், அது மட்டுமின்றி, அந்தச் சிறுவனுக்குப் பரிந்து பேசியதற்காக, அவளிடமும் அல்லவா அவன் கோபம்  கொண்டிருக்கிறான்!

ஒரு சின்னப் பையனிடம், அதுவும் குற்றம் நிரூபிக்கப் படாத ஒருவனிடம் பரிதாபப் படுவது கூடத் தப்பா? நன்றாயிருக்கிறதே என்று ஆத்திரம் வந்த போதும், கணவனின் முதல் கோபத்தைத் தமயந்தியால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

எனவே, கணவனிடம் சென்று, “சாரிம்மா! இனிமேல், இப்படிப்பட்ட நிலைமையை ஏற்படுத்தவே மாட்டேன்!” என்று கெஞ்சுதலாகக் கூற, அவனும் ஒருவாறு இறங்கி வர, நிலைமை சரியாகிப் போயிற்று!

ஆனால், அவளால் சரிபண்ண முடியாத நிலைமை ஒன்று, விரைவிலேயே வரக் கூடும் என்று, அவள் கொஞ்சமும் எதிர்பார்க்கவே இல்லை!

ஆனால், வந்தது! அவள் சற்றும் எதிர்பார்க்காத வடிவத்தில்!

# அத்தியாயம் -7

தேனிலவில் இருந்து, திரும்பி வந்த பிறகும், சுகந்தன், தமயந்தியின் வாழ்க்கை இனிமையாகவே தொடர்ந்தது!

இதில் தமயந்தி வீட்டார் எதிர்பாராதது, புது மண மக்களைத் தனிக் குடித்தனம் வைத்தது!

சுகந்தன், தமயந்திகூடத் தனியே போவதில், அவ்வளவாக விருப்பம் காட்டவில்லைதான்!

ஆனாலும் சரசாதான் பிடிவாதமாக இருந்தாள்.

அதற்குக் காரணம் இருந்தது!

சரசாவுடைய தோழி ஒருத்தி, மகனுக்குத் திருமணம் செய்து கூடவே வைத்துக் கொண்டாள். ஆனால், மூன்றே மாதங்களில், ஊர் முழுக்க நாறிவிட்டது!

இப்படிக் கூடக் கூட வந்து நிற்பதானால், எதற்குத் திருமணம் செய்ய வேண்டும்? அம்மா பையனாக, எப்போதும் மடிக்குள்ளேயே வைத்துக் கொள்ள வேண்டியதுதானே, என்றாள் மருமகள்!

தோழியிடம் பெரிய தவறு இருந்ததாக, சரசாவுக்குத் தோன்றவில்லை!

வெளியே கிளம்பும்போது, “ அம்மா, போய்வருகிறேன். “ என்றும் பிள்ளை சொன்னானாம்! மகன் தலைவலி என்றதும், காஃபி போட்டுக் கொடுத்தாளாம் பெற்றவள்!

அம்மாவுக்கு உடம்பு சரியில்லை என்று, அரைநாள் விடுப்பு எடுத்துக்கொண்டு வந்து, டாக்டரிடம் அழைத்துப் போனானாம் அவன்!

ஏன்? அவன் அம்மாவுக்குப் புருஷன் இல்லையா? இவன் எதற்காக வர வேண்டும் என்று ஆடிவிட்டாள் மருகப் பெண்! அப்புறம், அவள் கணவனுக்கல்லவா, பிற்பாடு விடுமுறை நாட்களோ, சம்பளமோ குறையும்?

சற்றுப் பொறுத்துப் பார்த்துவிட்டு, மாமியாரும் பேச, மருமகள் அலற, ரொம்பவும் கேவலம் ஆகிவிட்டது!

ஒரு பிள்ளை பிறந்தபின், மகனும் மனைவி பக்கம் சாய்ந்துவிட்டான்.

இப்போது, சரசாவுடைய தோழி அம்புஜம் ஒடுங்கி ஓய்ந்து போய்விட்டாள்!

இதை ஒரு பாடமாகக் கருதி, மகனுக்குத் திருமணம் ஆனதும் தனிக் குடித்தனம் வைத்துவிடுவதில், சரசா உறுதியாக இருந்தாள்!

அத்தனை ஆண்டுப் பழக்கத்தில், தன்னையறியாமல் கணவன் மனைவிக்கு இடையே குறுக்கிட்டு விடுவோமோ, குடும்பத்தில் உரசலுக்குக் காரணமாகி விடுவோமோ என்ற பயம் அவளுக்கு!

எவ்வளவுதான் நல்ல பெண்ணாக இருந்தாலும், இன்றையப் பெண்களுக்கு உரிமை உணர்ச்சி அதிகம் , சுதந்திர உணர்வும் அதிகம்! முதலிலேயே அதை மதித்து ஒதுங்கி இருந்தால், சுமுகமான உறவு நிலைக்கும் என்று சரசா எண்ணியதால், தேனிலவு முடிந்து, சுகந்தனும் தமயந்தியும் திரும்பி வந்ததுமே, அவர்களைத் தனியே வைக்கும் முயற்சியில் ஈடுபட்டாள்.

பணம் பிரச்சினையாக இல்லாததால், விரைவிலேயே தேவைப்பட்ட பொருட்களுடன், நம்பிக்கையான வேலையாட்களுடன், புது வீட்டில் பால் காய்ச்சி

சந்தோஷமாகக் குடித்தனத்தைத் தொடங்கினாள் தமயந்தி!

வேலையாட்கள், சரசாவின் பார்வைக் கீழ் தயாரானவர்கள் என்பதால், எந்தவிதப் பிரச்சினையும் இன்றி, தேனிலவு தொடர்வது போலவே இருந்தது அவளுக்கு!

பகலில், அலுவலைக் கவனிக்கச் செல்வது தவிர, சுகந்தனுக்கும் அப்படித்தான் இருந்தது!

இரண்டாம் மாதத் திருமணநாள் அதற்குள் வந்துவிட்டதே என்று, இருவருக்குமே ஆச்சரியமாக இருந்தது!

காலையில் பெற்றோரைப் போய்ப் பார்த்துவிட்டு, மாலையில் கோவில், அப்புறம் ஹோட்டல் என்று சென்று, பீடாவைச் சுவைத்தவாறே திரும்பியபோது, இருவருமே உல்லாசத்தின் உச்சியில் இருந்தனர்!

மறுநாள் அலுவலகத்துக்குள் செல்லும்போதுகூட, சுகந்தனுக்குத் தமயந்தியின் நினைவுதான்! வேலை நடுவிலும் அப்படித்தான்!

ஒரு சிறு இடைவெளியில், தன்னையறியாமல் மலர்ந்த புன்னகையோடு இருக்கையில் அவன் பின் புறமாகச் சாய்ந்து அமர்ந்தபோது, அலுவலகப் ப்யூன் வந்து நின்றான்!

“ஒரு பெரியவரு, சார்! உங்களைப் பார்க்கவேணும் என்று வந்திருக்கிறார்! ஆளைப் பார்த்தா, தொழில் பேச வந்த மாதிரி இல்லை,

சார்! ஆனால், பார்த்தால் பாவமாக இருக்குது!” என்றவாறு தலையைச் சொறிந்தான்!

“ம்ம்ம், என்னைப் பார்க்க அனுமதி வாங்கித் தருவதாகச் சொல்லி விட்டாயாக்கும்? ஆனால், அதற்காகத் தலையைச் சொறிந்து, கையை அழுக்காக ஆக்குவானேன்? போய்க் கையை நன்றாகக் கழுவிவிட்டு, அந்த ஆளை அழைத்து வா!” என்று, அவனை அனுப்பிவிட்டு, அவன் சொன்ன பெரியவரின் வருகைக்காகக் காத்திருக்கலானான் சுகந்தன்.

பாவமான பெரியவர் என்றால் . . மகன் கவனிக்காத கேசாக இருக்கும்! ஏதாவது, உதவி கேட்கக் கூடும்! ஆனால், எப்படித்தான் பெற்றுப் பேணி வளர்த்தவர்களைக் கைவிடுகிறார்களோ?!

பியூனுடன் வந்த மனிதனைப் பார்க்கையில், சுகந்தனுக்கு ஏதோ உள்ளே உறுத்தியது!

வாழ்க்கைத் தரத்தை விட, வந்தவனது வயதுக்குத்தான் மரியாதை தர வேண்டும் என்று தோன்றினாலும், அவனை உறுத்தியது அதுவல்ல! வயதுக்கு மரியாதை கொடுப்பது, அவனுக்குப் பழக்கமும்கூட!

ஆனால், அவன் நினைத்ததைக் காட்டிலும், அதிகமான சோகத்தைச் சுமந்துகொண்டிருந்தது அந்த மனிதனின் முகம்!

என்னவாக இருக்கும்?

ஏதேனும் பேரிழப்போ என்று தோன்றும்போதே, சட்டென அவன் மனம் பதறியது!

கதவைச் சாத்திக்கொண்டு பியூன் சென்றதும், “சொல்லுங்கள், பெரியவரே! உங்களுக்கு நான் என்ன உதவி செய்யக் கூடும்?” என்று மெல்ல வினவினான்.

சட்டைக் கையால், ஏற்கனவே கலங்கிச் சிவந்திருந்த கண்களைத் துடைத்துக் கொண்டான், வந்தவன். “இன்னமே, நீ என்னய்யா, உதவி செய்ய முடியும்? அதான், எல்லாமே முடிந்து போச்சே!” என்றான் அழுகுரலில்!

“முமுடிந்து போயிற்று என்றால் . . .” என்று சற்றுத் தடுமாறியவன், உடனே சுதாரித்துக்கொண்டு, “என்ன விஷயம், பெரியவரே! “ என்று விவரம் கேட்டான்.

“அய்யோ! எனக்குத் தெரியாமப் போச்சுதே! அந்தப் பொண்ணு மேலே, அவனுக்கு அம்புட்டு ஆசையின்னு தெரியாமயே போச்சுதே! கடைசி வரைக்கும், பாவி, நான் எதையும் தெரிஞ்சுக்கலையே!” என்று

புலம்பினான் வந்தவன்.

“ எந்தப் பெண் மேல் “ என்று கேட்கும் தைரியமற்று, இறுகிப் போய் அமர்ந்திருந்தான் சுகந்தன்!

கையை விரித்து, “அவன் சொன்னான்யா! என் கிட்டே சொன்னான்! ஆனா, இப்படின்னு தெரியாதப் போச்சுது! இம்புட்டு ஆசையின்னு, முன்னமே தெரிஞ்சிருந்தா,

அந்தப் பொண்ணு கையிலே, காலிலே விழுந்தாச்சும், அவளை, அவனுக்கே கட்டி வைச்சிருப்பேனே! ஒண்ணும் தெரியாத முட்டாளா இருந்திட்டனே! இப்ப என்ன ஆச்சி? இந்த வயசான காலத்திலே, என்னைய அம்போன்னு தனியா விட்டுட்டு, ஒரேயடியாப் போயிட்டானே . . .” என்று முகத்தை மூடிக் கொண்டு கதறினான் வயதில் பெரியவன்!

சுகந்தன் திணறிப் போனான்!

வந்திருப்பவன், ரத்தினவேலுடைய தந்தையாகத்தான் இருக்க வேண்டும் என்று புரிந்தது! அப்படியானால், ரத்தினவேல் இறந்துவிட்டானா?

இவ்வளவு ஆசை என்று தெரியாமல் போச்சே என்று, பிள்ளையைப் பறிகொடுத்தவன் கதறியபோது, அவனும் தவித்துப் போனான்!

ஏனென்றால், இவ்வளவு ஆசை என்று, அந்த ரத்தினவேல், வெட்கத்தை விட்டு, அவனிடம் சொல்லியிருந்தான்! அவளை இழந்தால், செத்துப் போவேன் என்றே சொன்னானே!

ஆனால், அதை அப்போது சுகந்தன் நம்பவில்லை! சும்மா மிரட்டுகிறான்., இவன் அப்படி ஒன்றும் செத்துவிட மாட்டான் என்று எண்ணினான். . .அப்படித்தான் நம்பினான்!

ஆனால், ரத்தினவேல் செத்துவிட்டானே!

அவன் சொன்னது மரண வாக்குமூலம்!

அப்படியானால், அவனுக்கு மனிதர்களை எடைபோடத் தெரியவில்லையா? இன்னார், இப்படி என்று கண்டுபிடிக்கத் தெரிந்ததாலேயே தொழிலில் வெற்றி பெறுகிறோம் என்று பெருமைப் பட்டது எல்லாம் எவ்வளவு முட்டாள்த்தனம்!

தமயந்தி மேல் இருந்த ஆசையில், நிலை தடுமாறிவிட்டானா?

அவனுக்கும் மேலாக எத்தனை மடங்கு ஆசை இருந்தால், ஒருவன்

உயிரையே விடுவான்?

இதற்கு மேல், எவனோ ஒரு ரத்தினவேல் இருந்தாலும், இல்லாவிட்டாலும் எனக்கென்ன என்று எண்ணியது, அந்த மூத்த தலைமுறையின் சோகத்தைப் பார்க்கும்போது, மன்னிக்க முடியாத குற்றமாகத் தோன்றியது!

உள்ளம் குன்றி, “வந்து . . .உங்களுக்கு நான் எப்படி . . . இப்போது என்ன சொல்வது என்றே தெரியவில்லை!” என்றான் சுகந்தன் தடுமாற்றத்துடன்.

“நீ என்னாப்பா, சொல்றது? நான் சொல்றேன் கேட்டுக்கோ! நீ நல்ல் . .லாயிரு! நல்லாயிருப்பா., ரொம்ப நல்லாயிரு! என் பிள்ளை ஆயுசையும் சேர்த்து, நல்லாயிரு!” என்றான் வந்தவன் கொதிப்புடன்.

உதட்டைக் கடித்துச் சற்று நேரம் தலை குனிந்து அமர்ந்திருந்தான் சுகந்தன்.

“ரெண்டு தரம், மூணு தரம் காப்பாத்தினேனே! இன்னமே, நல்லபடியா இருப்பான்னு நினைச்சேனே! கடேசிலே, இந்த மாதிரி பண்ணி, என்னை இந்த நிலைக்குக் கொண்டு வந்திட்டியே, கண்ணு . . “ என்று தலையில் அடித்துக் கொண்டான் ரத்தினவேலுடைய தந்தை.

ஏதோ தோன்ற, “எப்போது? எப்போது நேர்ந்தது? ஏதேனும் போலீஸ் தகராறு என்றால், சொல்லுங்கள். எனக்குத் தெரிந்த அதிகாரியை உதவி செய்யச் சொல்லுகிறேன்!” என்றான் சுகந்தன்.

“அது . .” என்று தொடங்கிய மற்றவனுக்கு ஆத்திரம்தான் வந்தது! “அப்படி என்னப்பா, உதவி பண்ணுவாங்க? இங்கே, அறுத்துத்தானே, கொடுப்பாங்க? அதனாலே,

ஊருக்கே கொண்டுபோய், அல்லாக் காரியமும் பண்ணி . . அய்யோ, என் பிள்ளையே. . .” என்று, மேல் துண்டில் முகம் புதைத்து அவன் குலுங்க, சுகந்தனுக்குத் தவித்துப் போயிற்று!

இந்த சோகத்துக்கு அவன் காரணமாகி விட்டானே!

“காசி, நீ கொடுத்து வச்சவன்ப்பா. , ஒத்தைப் பிள்ளையைப் பெத்தும், அவனை நல்லாப் படிக்க வச்சிட்டியேன்னாங்களே! இப்படியாகிப் போச்சுதே!” புலம்பல் தொடர்ந்தது.

இந்த மனிதரின் பெயர் காசியா? இந்த துக்கத்தில், இவருக்கு , அவன் எந்த விதத்தில் உதவக் கூடும்? ஆனால், உதவியும் வேண்டாம் என்கிறாரே! பின் ஏன் . .?

“நீங்கள் என்ன விஷயமாக, என்ன தேவைக்காக, என்னைப் பார்க்க வந்தீர்கள், பெரியவரே?” என்று சுகந்தன் வினவ, காசி, புருவம் சுளித்து அவனைப் பார்த்தான்.

“தேவையா? பையன் போயிட்டான்னு சொல்லி, உன் கிட்டே, பணம் காசுக்கு வந்தேன்னு நினைச்சியா? போய்யா, உன் பணமும், நீயும்!” என்ற காசி, மேல் துண்டை எடுத்துக் கண்ணைத் துடைத்துக் கொண்டான். “அய்யா, முதலிலே என்ன விசயமான்னு கேட்டே பாரு, அது சரியான கேள்வி! நானு, சும்மா என் மகன் போயிட்டான்னு, உன்னாண்டை அழுது தீர்க்க வரலை! விசயமாத்தான் வந்தேன்! என் மகன் சொல்லி அனுப்பிச்ச விசயம்! அந்தப் பிசாசு, அந்த ராட்சசியை நீ தப்பா நினைக்கப் படாதாம்!

அவ கூட, நல்லபடியாக் குடும்பம் நடத்தணுமாம்! நீ நல்லா இருக்கணுமாம்! அதுக்குக் குறுக்கே, அவன் வரவே மாட்டானாம்! இத்தை, உன்கிட்டே சொல்லியே ஆவணுமின்னு

சத்தியம் வாங்கிகிட்டு, வாங்கிக்கிட்டு . . . ஒஒரேயடியாப் போய்ட்டாம்பா! திரும்பியே, வர முடியாது! அப்பறம், அவன் குறுக்கே எங்க வர? . . “ என்று, மீண்டும் தோள் துண்டில் முகம் புதைத்து அழுதான் .

உடனேயே அழுகையை அடக்கிக்கொண்டு, “பையனோட கடைசி ஆசை! செய்தாச்சு! அவ்வளோதான்!” என்று எழுந்து தள்ளாடி நடந்து வெளியேறினான்!

மகனை இழந்த ஒரு முதியவருக்கு இதமாக ஒன்றுமே செய்ய முடியாத கையாலாகாத்தனம், சுகந்தனை வெகுவாகப் பாதித்தது!

இதில், எத்தனை சதவீதம் அவனது பிழை? எத்தனை சதவீதம், அவனுடைய மனைவியின் குற்றம்?

# அத்தியாயம் -8

அதற்குமேல், சுகந்தனுக்கு வேலை ஓட மறுத்தது!

நல்லவேளையாக, எம்டி என்கிற பெத்த பதவியினால், அவனது அனுமதியின்றி யாரும்  அவனது அறைக்குள் வருவதற்கில்லை!

ஆனால், இடையூறின்றுப் போனதினாலேயே, அவன் மனம் தொடர்ந்து அதே பிரச்சினையில் உழன்றது!

ரத்தினவேலைக் கொஞ்சம் அதிகப் பிரசங்கி என்று எண்ணினானே! கொஞ்சம் அசட்டுத்தனம், திமிர், பிடிவாதம் இவற்றின் மொத்தக் கலவை என்று இவன் கருதினால்,

அவன், இவனது நல்வாழ்வை அல்லவோ கடைசி விருப்பமாய் வைத்திருக்கிறான்!

கடைசி விருப்பம்!

பாவம்! உயிரையே விடுகிற அளவுக்கு அவள் மீது ஆசைப் பட்டிருக்கிறானே, இவளும் சற்று இளக்கம் காட்டாமலா இருந்திருப்பாள்?

கிட்டும் என்கிற அறிகுறியே இல்லாமலா, ஒருவன் இவ்வளவு தூரம் ஆசையை வளர்த்திருப்பான்?

ஆனால், அன்று இல்லை என்றாளே!

தமயந்தி பொய் சொன்னாளா? அதுவும் அவனிடம்!

இருக்காது என்று எண்ணும்போதே, அன்று அவள் யோசித்துப் பதில் சொன்னது நினைவு வந்தது! இல்லை என்றால், அதை உடனே அப்படியே சொல்ல வேண்டியது தானே? அதில் யோசிக்க என்ன இருக்க முடியும்?

விஷயத்தைச் சொல்வதா, வேண்டாமா என்று மட்டும்தானே, யோசித்திருக்க முடியும்?  இதை, எப்படி அறிவது?

இனி அறிந்துதான் என்ன செய்வது?

செய்வதற்கு ஒன்றும் இல்லைதான்! ஆனால், எப்படிப் பட்டவளை மணந்து, மனைவியாக்கிக் கொண்டிருக்கிறோம் என்ற தெளிவேனும் கிடைக்கும் அல்லவா?

“ முட்டாளின் சொர்க்கத் “தில் இத்தனை காலம் வாழ்ந்தது போதும்!

ஏமாற்றமே என்றாலும், அவனுக்கு உண்மை தெரிந்தாக வேண்டும்!

சிறு வயதிலேயே, தொடங்கிய தொழிலைத் திறம்பட நடத்தி, செல்வாக்கும் செல்வமும் பெற்றுவிட்டோம் என்பதில், வெளியே காட்டிக் கொள்ளாவிட்டாலும், சுகந்தனுக்கு உள்ளூர ஒரு கர்வம் உண்டு!

சொந்தத் திறமை பற்றிய கர்வம்!

இப்போது,  அது அடி வாங்கிவிட்டது!

ரத்தினவேலைப் பற்றிய கணிப்பு தவறாகிப் போயிற்று!

தமயந்தியைப் பற்றிய கணிப்பு?

அவளது மயக்கத்தினாலேதான் ரத்தினவேலைத் தவறாக எடையிட்டோமோ என்ற எண்ணம் தோன்றிவிட, அதற்குச் சாதகமாக எல்லாவற்றிலும் தமயந்தியையே குற்றவாளியாக்க முயன்றது!

அவளது முதல் தோற்றம்!

மணமேடையிலிருந்து, தமயந்தி அவனைப் பார்த்துதான் சிரித்தாளோ? பக்கத்தில் வரவர, ரொம்பவும் அதிகப்படியாகத் தோன்றும் என்று, வேறு இலக்குப் போலக் காட்டியிருக்கலாம்! அவனுக்கு நேர் பின் இருக்கையில் அந்த நளினி அமர்ந்திருந்தது, அவளது அதிர்ஷ்டமாக இருக்க வேண்டும்!

அப்புறம், வேண்டும் என்றே அவன் பின்னோடு வந்து, உணவுக்காகக் காத்திருந்த நேரத்தில், ஓடாத கடிகாரம் பற்றிப் பேசியிருக்கலாம்! அப்புறம், அந்த ஐஸ்கிரீம்! அவள்தானே, தின்றுகொண்டிருந்தாள்! கல்யாணப் பெண் கேட்டாள் என்று என்ன நிச்சயம்?

எல்லாம் வலை!

மறு விருந்தின்போதும், பீடாத் தட்டுடன், அவன் இருந்த பக்கம் அவளாகத்தானே, வந்தாள்!

ஒரு பக்கம், அவனுடைய அம்மாவிடம் நைச்சியம்! இந்தப் பக்கம், இவனிடம்!

என்னமாய் ஏமாற்றிவிட்டாள் . .  . என்று எண்ணும்போதே, மனம் உறுத்தியது!

இதுவும், எல்லாமே, இன்னொரு வகையாகத் தீட்டக் கூடிய வண்ணம்தானே?

இதுதான் உண்மை என்று என்ன நிச்சயம்? அவன் முதலில் கருதியது போலத் தமயந்தி நல்லவளாகவும் இருக்கலாம்!

ஆனால், உயிரையே விட்டுவிட்ட, இந்த ரத்தினவேல்?

ஓர் இளைஞனின் உயிர் அல்லவா நஷ்டப்பட்டுவிட்டது! எதிர்காலத்தில், எதையெதையோ சாதித்திருக்கக் கூடிய ஓர் உயிர்!

தமயந்தி ஒன்றும், அவன் கையில் விஷத்தை எடுத்துக் கொடுத்துச் சாகடித்து விடவில்லைதான்! ஆனால், அவள் எப்படிப் பட்டவள் என்று அறியாமல், தனக்கு இனி நிம்மதியில்லை என்று சுகந்தன் தெளிவாய் உணர்ந்தான்!

அவள் தப்பானவள் என்றாலும் வேதனைதான்! ஆனால், இப்படியோ, அப்படியோ என்று அலைபாயும் இந்த ஈரெட்டான நிலையை, அவனால் சகிக்க முடியவில்லை! அதை விடவும், அவன் வெளிப்படையாகக் கேட்டபோது, தமயந்தி அவனிடம் பொய் சொல்லி ஏமாற்றியிருந்தால், கடவுளே, அவனால் அதைப் பொறுத்துக் கொள்ளவே முடியாது!

அன்றிரவு சுகந்தன் வீடு திரும்ப வெகு நேரம் ஆகிவிட்டது!

அவ்வப்போது, இப்படித் தாமதம் ஆவதுண்டு.

முதலாளியாக இருக்க வேண்டுமானால், நேரத்துக்கு வேலையை மூடி வைத்துவிட்டுப் போய்விட முடியாது! அதிகப்படி வேலை இருந்தால், செய்து முடித்துவிட்டு, வீடு திரும்புவது, அவனுக்கு வழக்கம்தான்! அவளுக்குமே, இந்த மாதிரித் தாமதங்கள் இப்போது பழகிவிட்டிருந்தன!

அதற்காகச் சிணுங்குவதோ, எரிச்சல்படுவதோ கிடையாது!

அதை, எவ்வளவு அனுசரித்துப் போகிறாள் என்று எண்ணி, அவன் அக மகிழ்ந்தது உண்டு! இப்போது, கணவன் உழைக்க உழைக்கப் பணம்தானே என்று சும்மா இருந்தாளோ என்று தோன்றியது!

சே! நிச்சயமாகத் தெரியுமுன், ஒரேயடியாக இப்படி வேறுபாடாக நினைக்கக் கூடாது என்று, சுகந்தன் தன்னையே கட்டுப் படுத்திக்கொள்ள வேண்டியிருந்தது!

ஆனால், வீட்டுக்குப் போகவே, அவனுக்குப் பிடிக்கவில்லை!

வீட்டுக்குப் போனால், தமயந்தியைப் பார்க்க வேண்டும், பேச வேண்டும்! இப்போதைய மன நிலையில், அவளிடம் இயல்பாகப் பேசுவது கடினம்!

கடற்கரைக்குப் போய், வெகு நேரம் சும்மா உட்கார்ந்திருந்துவிட்டு, இரவு பத்து மணிக்குமேல், எழுந்து வீட்டுக்குப் போனான்!

இப்படித் தாமதமாக வீடு திரும்பும் நாட்களில், அவர்களுக்குள் ஒரு சின்ன விளையாட்டு உண்டு! அவன் கண்ணில் படாமல், தமயந்தி எங்காவது ஒளிந்து கொள்வாள். அவன் அவ்வளவு நேரமாக அவள் கண்ணில் படாமல் இருந்தானாம்!

ஆனால், ஒளிவதெல்லாம் அவன் சுலபமாகக் கண்டுபிடிக்கக் கூடிய இடங்களில்தான்! அவனும் “ தேடி “க் கண்டுபிடித்து விளையாட்டில் “ வெல்லு “வான்!

இன்று அந்த விளையாட்டில்  ஈடுபட மனமின்றி, நேரே அறைக்குச் சென்று, உடையை மாற்றிக்கொண்டு, சுகந்தன் படுக்கையில் விழுந்தான்!

கண்களை இறுக மூடிக்கொண்டு கிடந்த போதும், தமயந்தி வந்த அரவம் தெரிந்தது!

அவளும் அரவம்தானோ?

கட்டிலின் அருகே சற்று நேரம் நின்று பார்த்துவிட்டு, தமயந்தி மெல்ல அவன் நெற்றியைத் தொட்டுப் பார்த்தாள்! பறவை இறகால் வருடி விட்ட மாதிரி, மென்மையான தொடல்!

“தலை வலிக்கிறதா? உடம்பு ஏதும் சரில்லையா, சுகன்?” என்று, பரிவுடன் வினவினாள்.

சுள்ளென்று கோபம் வந்தது, சுகந்தனுக்கு.

அவளது விருப்பம்போல ஆடாவிட்டால், அவனுக்கு உடம்பு சரியில்லாமல் இருந்துதான் ஆக வேண்டுமா? மற்றபடி,  அவனுக்கு என்று ஒரு கருத்தும் கிடையாதா?

அந்த அளவுக்கு, கணவனை அடிமையாக்கிவிட்டதாக எண்ணமா? அது கூடாதே!

“ஷ். எனக்குக் கொஞ்சம் தனிமை வேண்டும்!” என்றான் இறுகிய குரலில் அவன்.

திகைத்து நிமிர்ந்தபோதும், உடனேயே தமயந்தி, “தொழில் விஷயமாக யோசிக்க வேண்டுமா . . .சாரி. இதோ போய்விடுகிறேன். “ என்று உரைத்தவாறு வெளியே செல்லத் திரும்பினாள். ஒரு கணம் தயங்கி நின்று, “ஆனால், சாப்பாடு . . .” என்று முடிக்காமல் நிறுத்தினாள்.

உடனே இவள் பணிந்த விதத்தில் இளகத் தொடங்கிய உள்ளத்தை அடக்கி, “வேண்டாம்!” என்றான் சுருக்கமாக.

அதற்கு மேல் தமயந்தி நிற்கவில்லை. “பலகாரம்தான். எதற்கும் “

செல்லோ “வில் எடுத்து வைக்கிறேன். பிறகு பசித்தால் சாப்பிடலாம்!” என்று மென்குரலில் கூறியபடியே சென்று, ஏசிக் குளிரைக் கொஞ்சம் கம்மி பண்ணி ஓடவிட்டுவிட்டு, கதவைச் சாத்திக்கொண்டு வெளியேறினாள்.

என்ன, என்ன என்று மிகையான ஆர்ப்பாட்டமோ, வெளியே சாப்பிட்டாயா என்ற தூண்டித் துருவலோ, ஏதாவது சாப்பிட்டுத்தான் ஆக வேண்டும் என்ற வற்புறுத்தலோ எதுவும் இல்லாமல், தமயந்தி இதமாகப் பேசிவிட்டுப் போனது, அவனுக்கு நன்றாகத்தான் இருந்தது!

ஆனால், அவனுக்குப் பிடித்த மாதிரி நடந்தே, அவனை முழுதாக வளைப்பது, அவளது திட்டமாக இருந்தால்?

திருமணமாகு முன்பே, அவனுக்குப் பிடித்த நிறம், அவனுக்குப் பிடித்த உணவு என்று பார்த்தவள்தானே?

அப்போது பெருமையாக இருந்தது, இப்போது வேறு விதமாய், ஏமாற்றினாளா என்று உறுத்தியது!

கல்லூரிக் காதலைக்கூட, அவன் அதிகம் பொருட்படுத்தாமல் விட்டுவிடத் தயார்தான்!

ஆனால், பணக்காரனைப் பிடிக்க வேண்டும் என்று திட்டமிட்டு ஏமாற்றியிருந்தால்?

ஏமாற்று வேலையேதானோ? அன்று, கல்லூரிப் பேச்சு வந்தபோது, ஐஸ்கிரீம் சாப்பிட வந்த தோழிகளை விரட்டினாளே! அவனோடு தனித்திருக்கும் ஆவலில் என்று எண்ணிப் பூரித்ததை எண்ணி, இப்போது உள்ளே காந்தியது! ரத்தினவேல் விஷயம் அம்பலம் ஆகிவிடுமோ என்ற அச்சத்தில் விரட்டினாள் என்று, இப்போதல்லவா தெரிகிறது!

ஊகூம்! இதுவும் கூட இரண்டு மாதிரியும் இருக்கக் கூடியதுதான்! இதைவிடத் தெளிவான ஆதாரம் அவனுக்கு வேணடும்!

தமயந்தி மீண்டும் வந்து எட்டிப் பார்த்தபோது, சுகந்தன் தூங்குவது போலப் பாசாங்கு செய்தான்.

சற்று நேரம் நின்று பார்த்துவிட்டு, அவனிடம் அசைவில்லை என்று கண்டதும், அவனது தூக்கத்தைக் கலைக்க விரும்பாதவள் போன்று, ஹாலில் கிடந்த சோஃபாவில் சென்று படுத்தாள் அவள்!

மறுநாள் காலையில் சுகந்தன் எழுந்து பார்க்கும்போது, தமயந்தி கண்ணில் படவில்லை!

குளிக்கப் போயிருப்பாள்!

அதிலெல்லாம் " பாரத நாரி "தான் காலையில் எழுந்து குளித்து, அவனுக்குக் காஃபி கொணர்ந்து, வேலையாள் செய்து வைத்திருந்தாலும், கணவன் பசியறிந்து, தானே பரிமாறி . . .

சுகந்தன் யோசித்துக் கொண்டிருந்தபோதே, தமயந்தி காஃபியுடன் வந்துவிட்டாள்!

சூடான பானத்தோடு, மூடிய தட்டு ஒன்று!

"இரவும் சாப்பிவில்லையே! பசிக்குமோ என்று, இரண்டு ஸ்லைஸ் ரொட்டியை அனலில் வாட்டிக் கொணர்ந்தேன்! சாப்பிடுகிறீர்களா?" என்று கேட்டபடி, டீபாயில் தட்டை வைத்தாள்.

இளங்காலைப் புது மலரைப் போல, தமயந்தியின் எழில் தோற்றம், அவளைத் தொடத் தூண்டியது! ஆனால் . .

சுகந்தன் யோசிக்கும்போதே, டெலிஃபோன் மணியடித்தது!

அவன் ஃபோனுக்குப் போக, அவள் ஒரு பத்திரிகையை எடுத்துக்கொண்டு உட்கார்ந்தாள்.

தொழில் ரீதியாக, இரும்புத் தகடு சம்பந்தப் பட்ட ஒரு தகவல்தான்.

ஆனால், சட்டென ஓர் ஐடியா தோன்ற, "பாவம்!" என்றபடி திரும்பி வந்தான் சுகந்தன்.

மனைவி நிமிர்ந்து நோக்கவும், "இளைஞன் ஒருவன்! உங்கள் தேவபுரிக் கல்லூரியில்தான் படித்திருப்பான் போல! காதல் தோல்வியில், எழுதி வைத்துவிட்டு

உயிரை விட்டிருக்கிறான்! நீ அங்கேதானே படித்தாய்., அவனைப் பற்றி, உனக்கு ஏதேனும் விவரம் தெரியுமா என்று கேட்டார்கள். என் மனைவி ரொம்பவும் சுத்தமான தங்கம்! அடுத்த ஆண்களை நிமிர்ந்துகூடப் பார்க்க மாட்டாள்! அவனைப் பற்றித் தெரிந்திருக்க வாய்ப்பே இராது, என்றுவிட்டேன்! அவன் பெயர் . . என்னவோ ர . .ர ரத்தினவேலாம்!" என்று ஓரக் கண்ணால் அவளைக் கவனித்தபடியே கூறினான் அவன்!

அவன் எதிர்பார்த்தபடியே, தமயந்தியின் முகம் வெளுத்தது! "ஆஆ . .மாம். பாவம்தான். . . " என்று தடுமாறியபடியே, பத்திரிகையை மடித்து வைப்பதில் கவனம் காட்டினாள் அவள்.

"நீங்கள் குளித்துவிட்டு வாருங்கள். சிற்றுண்டி எடுத்து வைக்கிறேன். . ." என்று எழுந்தாள்.

அவள் காண அறைக்குள் சென்றவன், கதவைச் சாத்தி குளியலறைக் கதவையும்

ஓசையோடு திறந்து மூடினான்.

ஆனால், குளியலறைக்குள் செல்லாமல், அறைக் கதவின் ஓரமாக வந்து நின்று கவனித்தான்.

சுகந்தனின் ஊகம் சரியே என்பதுபோலத் தமயந்தியும் சமையலறைப் பக்கம் போகாமல், டெலிஃபோனை எடுத்து பட்டனைத் தட்டிக் கொண்டிருந்தாள்.

எதிர்முனையில் தொடர்பு கிடைத்ததும், “நளின், ரத்தினவேல் தற்கொலை செய்துகொண்டாராம்! உனக்குத் தெரியுமா? .. இப்போதுதான், தகவல் கிடைத்தது! என்னப்பா இந்த ஆள் இப்படிச் செய்துவிட்டார்! இப்போது, பெரிய தப்பு செய்தாற்போல, எனக்கு உள்ளே உறுத்துகிறதுப்பா!” என்று கலங்கினாள், அவள் !

சுகந்தனுக்குத் தெளிவான ஆதாரம் கிடைத்துவிட்டது!

# அத்தியாயம் -9

ஏழெட்டு நாட்களாகக் கணவனிடம் ஏதோ ஒரு மாற்றத்தைத் தமயந்தி உணர்ந்தாள்!

வாய்விட்டுக் கடுமையாக ஒரு வார்த்தை அவன் சொன்னான் என்று இல்லை! ஆனால், ஒரு மாதிரி ஒதுங்கிப் போனான்! அவனுக்குக் கோபமோ, எரிச்சலோ, ஏதோ ஒன்று தன் மீது இருப்பதாக, அவளுக்கு நிச்சயமாகத் தோன்றியது! அதை அவளால் தாங்கிக்கொள்ள முடியவில்லை!

புதிதாகக் கல்யாணம் ஆன பெண் என்பதால், என்ன தப்பு செய்தோமோ என்று, தமயந்தி உள்ளூர மிகவும் கலங்கிப் போனாள்.

ஆனால், இதை யாரிடம் கேட்பது?

ஒருவேளை " ஆசை அறுபது நாள் " என்பது நிஜம்தானோ என்று யோசனை ஓடியது! திருமணமாகி, இரண்டாவது திருமண நாளை, இப்போதுதானே கொண்டாடி மகிழ்ந்தார்கள்!

ஆனால், இந்தக் கூற்றை அவளால் நம்பவும் முடியவில்லை! அந்த அறுபதாம் நாளன்றுகூட, எவ்வளவு ஆசையாக அணைத்தான்! ஸ்விட்ச் தட்டின மாதிரியா, ஆசை அப்படி டக்கென நின்றுவிடும்?

நிற்கவில்லை. . . இப்போதும், அதெல்லாம் நன்றாகத்தான் இருக்கிறது! ஆனால், ஏதோ ஒரு குறை! முன்போல, அவளை அவன் ராஜகுமாரியாக நடத்தவில்லை!

இளவரசியாக எண்ணாதது மட்டுமல்ல., இகழ்ச்சிக்கு உரியவளாகவும் எண்ணுகிறானோ என்ற சந்தேகமும் எழுந்து, அவளைக் குழப்பியது!

ஆனால், அப்படி உறுதியாக நினைக்கவும் தமயந்தியால் முடியவில்லை!

இரவில், சுகந்தனின் அணைப்பில், அப்படி ஒன்றும் வேறுபாடு இல்லை! சிறு அலட்சியப் போக்கு தவிர!

கூடவே, அவ்வப்போது சிரிப்பும் விளையாட்டுமாகப் பேசிய பேச்சை, இப்போது அடியோடு காணவில்லை!

அப்புறம், கனிவான சில செயல்களையும்!

சும்மா நடக்கும்போதே, அருகில் வர நேர்ந்தால், கன்னத்தை

வருடிவிட்டுப் போவான்! தோளோடு சேர்த்து ஓர் அணைப்பு! பூவால் ஒற்றுவது போல, ஒரு சின்ன “ இச் “ கூட!

அத்தோடு, அவர்களுக்கென்றே தனியான சில ரகசிய விளையாட்டுகள்!

ஒன்றையுமே காணோமே!

ஒரு வேளை, இதைத்தான் “ ஆசை அறுபது நாள் ! “ என்று கூறுவதோ? எல்லாமே திடுமென நின்று விடுமா? எல்லோருமே, இப்படித்தான் இருப்பார்களா?

வெறும் இரவு உறவு தவிர, மற்றது மறந்துவிடுமோ?

ஒத்துக்கொள்ள மனமின்றிக் கணவனிடமே மெல்லக் கேட்டுப் பார்த்தாள். அதையும் ஆத்திரமாகக் கேட்டுச் சண்டையாக்கிவிடப் பிடிக்காமல், “நான் ஏதாவது தப்பு செய்திருந்தால், அதை மன்னித்து விடுகிறீர்களா?” என்று தணிவாகவே கேட்டாள்!

“ “ தப்பு செய்திருந்தாலா” ? தப்பு செய்தாயா இல்லையா என்றே புரியாமல், மன்னிப்புக் கேட்பார்களா? என்ன பைத்தியக்காரத்தனம்? “

கையில் இருந்த பத்திரிகையிலிருந்து கண்ணை உயர்த்திப் பாராமலே, குரலில் ஏளனம் தொனிக்க அவன் கேட்டது, அவளை உறுத்தியது!

அடிக்கொரு தடவை, “ உன்னைப் பார்த்துக்கொண்டே இருக்க வேண்டும்போல இருக்கிறது! “ என்று சொல்லுகிறவன்! அவ்வப்போது, அப்படி ஆவலாகப் பார்த்துக் கொண்டு இருப்பவனும்கூட! இப்போது, பேசினால்கூட நிமிர்ந்து பார்க்கவில்லை என்றால்?

“இல்லை . . உங்களுக்கு என்மேல் ஏதேனும் கோபமோ என்று தோன்றியது. . . .”

“ஏன்? நான் உன்னை அடித்தேனா, திட்டினேனா? முறைத்துக்கூடப் பார்த்தது இல்லையே!”

இன்னமும் அவனது விழி உயரவில்லை., உயர்ந்து அவளைப் பார்க்கவும் இல்லை!

ஏதோ கலக்கத்தில்தானே வந்து கேட்கிறாள், என்ற அக்கறை கூட இல்லையா?

மனதுள் வலித்தபோதும், அதை வெளிக் காட்டிக் கொள்ளாமல், “முறைத்துப் பார்ப்பதா? சும்மா கூட, நீங்கள் என்னைப் பார்க்கக் காணோமே!” என்று விளையாட்டுப் போலவே, தன் குறையைத்

தெரிவித்தாள் தமயந்தி!

அப்போதும் நிமிராமல், "பத்திரிகை படிக்கும்போது, இடையில் பேச்சுக் கொடுப்பதே தப்பு. அதைப் பொறுத்துப் பதில் சொல்கிறேனே என்று நினை!" என்று

முடித்துவிட்டுப் பத்திரிகையை இன்னமும் ஊன்றிப் படிக்கலானான் சுகந்தன்!

படித்தானா, படிப்பது போல நடித்தானா?

ஒன்றும் சொல்ல முடியாமல் அயர்ந்து நின்றாள் தமயந்தி!

வெளிப் பார்வைக்கு ஒன்றும் இல்லைதான்! ஆனால், தமயந்தி உள்ளூரக் கலங்கிப் போனாள்.

இது பற்றிப் பெற்றவளிடம் சொல்லி ஆலோசனை கேட்கவும் அவளுக்குப் பிடிக்கவில்லை!

மகள் சொர்க்க போகம் அனுபவித்துக்கொண்டு இருக்கிறாள் என்று பிறந்த

வீட்டில் சந்தோஷப்பட்டுக் கொண்டிருப்பதைக் கெடுக்கத் தமயந்திக்கு மனமில்லை என்பதோடு, இதை என்னவென்று  சொல்வது?

பெரிதாகக் குறையென்று சொல்வதற்கும் எதுவும் இல்லையே!

மெய்யாகவே, அவன் முக்கியமான எதையோ படித்துக்கொண்டு இருந்தபோது அவள் குறுக்கிட்டுத் தொல்லை செய்திருப்பாள் என்றுதானே எண்ணத் தோன்றும்?

சுகந்தன் மட்டும், அந்த " நினை! " யை அப்படி முடிக்காமல், " நினை கண்மணி, நினை தமாச் செல்லம்! " என்று ஓர் அன்புச் சொல்லைச் சேர்த்துக் குழைவான குரலில் அவன் சொல்லியிருந்தால், தமயந்தியுமே அப்படித்தான் எண்ணியிருப்பாள்!

ஆனால், அவன் வெட்டினாற்போலல்லவா முடித்தான்!

பிரியமான மாமியார்தான் என்றாலும், மா . .மியார்! அத்தோடு, அவனுடைய தாயார்! மருமகள் என்பவள், மகனோடு அனுசரித்துப் போக வேண்டும் என்பதுதானே, எந்த ஒரு மாமியாரின் எதிர்பார்ப்பாகவும் இருக்க முடியும்?

கடைசியாக, " ஆசை அறுபது நாள்., மோகம் முப்பது நாள்! " பழமொழிக்கு  மனதைச் சரிப்படுத்திக்கொள்ள தமயந்தி முயற்சித்தாள்.

ஆனால், அதுவே கடினமாக இருக்கையில், நிலைமை மேலும்

சீர்கேடுறுவதாக, அவளுக்குத் தோன்றியது! கொஞ்சம் கொஞ்சமாய்!

அடுத்ததும் ரொம்பப் பெரிய விஷயம் அல்லவென்றாலும், ஒன்றுமில்லை என்று அலட்சியப் படுத்தக் கூடியதும் அல்ல!

திருமணத்தன்றே தொடங்கிய சந்தோஷம் ஒன்று!

திருமணம் நடந்தேறி, அது தொடர்பான சடங்குகள் அனைத்தையும் செய்து முடித்த பின்தான் மணமக்கள் இருவரும் உணவருந்தச் சென்றனர்.

ஊட்டி விடும்படி வழக்கமான தோழர் தோழியரின் கேலிகளுக்குப் பணிந்து, சுகந்தன் தமயந்திக்கு இனிப்பை ஊட்டிவிட்டான்.

ஆனால், மற்றவர் அறியாமல் இன்னொன்றும் செய்தான்.

தன் இலையிலிருந்து, சேப்பங்கிழங்கு வறுவல் ஒரு துண்டை எடுத்து ஒதுக்கி வைத்துவிட்டு, யாரும் பார்க்காதபோது அதை அவள் இலையில் வைத்துவிட்டு அவன் கண்ணைக் காட்ட, அவளும் மற்றவர் அறியாமலே, அதை எடுத்து வாயில் போட்டுக் கொண்டாள்!

என்னவோ, ரகசியமாய் உலகை வென்றுவிட்ட மகிழ்ச்சி அவர்கள் இருவருக்கும்!

சேப்பங்கிழங்கு வறுவல் அவனுக்கு மிகவும் பிடித்தமானதாம்! அதை, அவளோடு அவன் பகிர்ந்து கொண்டானாம்!

அன்றைய மெனுவே, சுகந்தனுக்குப் பிடித்தமாவை எதெல்லாம் என்று அவன் தாயிடம் விசாரித்து, அதன்படி அமைக்கப் பட்டது என்பது வேறு விஷயம்!

ஆனால், அன்றிலிருந்தே, அவ்வப்போது, உணவருந்துகையில் தனக்கோ, அவளுக்கோ பிடித்தமான எதாவது  பதார்த்தத்தைத் தாலத்தில் தனியாக எடுத்து வைத்திருந்து அவளுக்குக் கொடுப்பான் அவன். அதில் ஓர் ஆசை அவனுக்கு!

அப்படி அவன் தருவதை உண்ண, அவளுக்கும் ரொம்பப் பிடிக்கும்!

சேர்ந்து சாப்பிடுவதால், எல்லாம் அவள் தட்டிலும் இருக்கும்தான்! ஆனால், அவன் தனக்குத் தருவதில், அப்படி அவன் தருவதை உண்ணுகையில் தனிச்சுகம் அவளுக்கு! தனிப் பெருமை!

சொல்லவே அவசியமற்று, இந்த மாதிரி அன்புச் செய்கைகள் அவனது தரப்பில் இப்போது நின்று போயிருந்தன. அவளது முயற்சிகளை அவன் கண்டுகொள்வதும் இல்லை!

இதையும், அந்த “ ஆசை அறுபது நா “ளில் ஒதுக்கி விட்டுவிட்டு நிம்மதியை இழுத்துப் பிடித்து வைத்துக்கொள்ளத் தமயந்தி தயாராகத்தான் இருந்தாள்!

ஆனால், அவளை நிம்மதியாக இருக்கவிட, அவன் தயாராக இல்லை போலும்!

அன்று அவனுக்குப் பிடித்தமாதிரி மசாலா முட்டையும் முருங்கைக்காய்க் காரக் குழம்பும்! இதுபோல இரண்டுமாகச் சேர்த்துச் செய்திருந்தால், காரக் குழம்பு, நெய் கலந்து பிசைந்து, நடுவில் முட்டை வைத்து ஒரு பிடி எடுத்து வைத்து, மனைவிக்குக் கொடுப்பான், சுகந்தன்.

அன்றும் அதைப்போலப் பிசைந்து, அவன் ஒரு பிடி உருட்டவும் தமயந்தியின் மனம் துள்ளிவிட்டது!

இல்லை! அவளுடைய கணவன் எல்லாவற்றையும் மறக்கவில்லை! இதோ! அவளுக்கென்று அவனது பிரத்தியேகமான அன்புச் செய்கை! இதை ரசித்து உண்ணும்போது, இடைப்பட்ட ஏக்கம் முழுவதும் மந்திரம் போட்டாற்போல மறைந்து போய்விடாதா?

இதழ்களில் இளம் புன்னகை நெளிய, தமயந்தியின் பார்வை அவ்வப்போது, அவன் தட்டுக்குப் பாய்ந்து பாய்ந்து திரும்பியது!

அவன் குழம்பு சாதம் சாப்பிட்டு முடிக்கிறவரை, சாத உருண்டையை அவள் தட்டில் வைக்கவில்லை!

மறந்துவிட்டானா?

இராது! எப்படியும் தயிருக்கு சாதம் வைக்குமுன் தந்துவிடுவான்!

ஆவலாக அவள் பார்த்துக் கொண்டிருக்கும்போதே, உண்ணும்போது கழித்த கறிவேப்பிலை, முருங்கைக்காய்த் தோல் போன்றவற்றோடு, இந்தச் சாத உருண்டையையும்

சேர்த்துக் கூட்டி, அதன் மீதே கையைக் கழுவிவிட்டுச் சென்றுவிட்டான் சுகந்தன்!

விக்கித்துப் போய் அமர்ந்திருந்தாள் அவன் மனைவி!

என்ன இது? இதற்கு என்ன அர்த்தம்?

என் அன்புச் செய்கைகள் எதுவும் உனக்கு இனிமேல் கிடையாது என்று அழுத்தம் திருத்தமாகச் சொல்வது போலல்லவா செய்துவிட்டான்!

ஏன்? ஏனிப்படி? அவள் அப்படி என்ன தப்பு செய்துவிட்டாள்?

எவ்வளவோ யோசித்தும், அவளால் எதையும் கண்டு பிடிக்க முடியவில்லை!

ஆனால், தன் தவறு, தனக்குத் தெரிவது அரிதுதான் அல்லவா? ஒருவேளை, அவன் கண்ணில் பட்டிருக்கலாம்!

அறியாமல் செய்த தவறாக இருந்தாலும், அதன் விளைவு பெரு மரமாக வளருமுன் முளையிலேயே கிள்ளி எறிய எண்ணி, மீண்டும் கணவனிடம் போய் நின்றாள் தமயந்தி!

“உங்களுக்கு என்மேல் என்ன கோபம்?”

அவளை நிமிர்ந்து பார்த்துவிட்டு, “கோபம் என்று யார் சொன்னது?” என்றான் சுகந்தன். “நான் சொன்னதில்லையே!”

உயிரோடு ஒன்றிவிட்டதாக எண்ணிய கணவன் யாரோ போல் அன்னியமாகத் தோற்ற, அவனிடம் பிச்சை கேட்பது போலத் தமயந்தி அவமானமாக உணர்ந்தாள்! ஆனால், அத்தோடு விட்டுப் பிரச்சினையை வளர விடவும் மனமற்று, “வாயால் சொன்னால்தானா? செயலால் சுட்டிக் காட்டவும் முடியுமே!” என்றாள் அவள்.

“அப்படி என்ன மாதிரி உன்னிடம் கோபம் காட்டிவிட்டேன்?”

நிஜமாக அவனுக்கு உறுத்தவில்லையா? செய்தது நினைவே இல்லையா? எப்படி முடியும்? ஒரு வேளை . .ஒரு வேளை கவனப் பிசகுதானோ? வெளி வேலை யோசனை மிகுதியினால், இதெல்லாம் மறந்து போகிறதோ, என்னவோ? நினைவுபடுத்தினால், எல்லாம் சரியாகிவிடலாம்!

“இன்றைக்கு . . இன்றைக்கு . .” என்றவளுக்கு அவசரத்தில் வார்த்தை திக்கியது! கட்டுப் படுத்திக்கொண்டு, “சாதம் பிசைந்தது, எனக்கு . .எனக்கு . .அதை உங்கள் தட்டிலேயே வைத்து வீணாக்கி விட்டீர்களே! ஏ . .ஏன்?” என்று ஒருவாறு கேட்டு முடித்தாள்!

கேட்பது என்பதைவிட நினைவுபடுத்தினாள் எனலாம்!

“என்ன சாதம்?” என்றான் அவனும் மறந்தவன் போலவே!

“காரக் குழம்பு கலந்து, முட்டை வைத்து, உருட்டி வைத்தீர்களே . .” என்று அவள் எடுத்துக் கொடுக்கவும், “ஓ, அதுவா? வாயில் வைக்க உருட்டினேன்! பெரிய பிடியாக உருட்டி விட்டதால், வைத்தேன்! அப்புறம் , வயிறு நிரம்பிவிட்டதால், கை கழுவி விட்டேன்! அதிகப்படியாக உண்டு, வயிற்றைக் கெடுத்துக் கொள்வதை விட, கை கழுவி விடுவது மேல் அல்லவா? ஆமாம், இதற்குப் போய், இப்படியொரு

குறுக்கு விசாரணையா? விட்டால், பட்டி மன்றமே நடத்துவாய் போல இருக்கிறதே! சே!

இதற்காகத்தான், திருமணமே வேண்டாம் என்றிருந்தேன்! எல்லாம், இந்த அம்மா பண்ணிய வேலை! இப்போது, ஒரு பிடி சாதத்தை மிச்சம் வைக்க உரிமை இல்லை!

கஷ்டம்!” என்று அலுத்துக் கொண்டான் சுகந்தன்.

அவனுக்கே உரியதான அன்புச் செய்கை! பிரியத்தைக் காட்டும் அந்தச் செயலை, மெய்யாக அவன் மறந்தேவிட்டானா? எப்படி சாத்தியம்?

நம்ப மாட்டாமல் அவள் திகைத்து நிற்கையிலேயே, சற்றுக் கடுமையான குரலில், அவன் பேசினான். “இதோ பார் தமயந்தி, ஒரு பணக்காரனுடைய மனைவியாகும்போது, வைர வைடுரியங்கள், பட்டுப் பட்டாடைகள், ஏசி, கார் என்று பல வசதிகளை அனுபவிக்கலாம்தான்! உனக்கும், அதற்கெல்லாம், நான் எந்தக் குறையும் வைக்கவில்லை! ஆனால், அத்தோடு நிறுத்திக் கொள்ள வேண்டும்! இப்படி, உப்புப் பெறாத விஷயத்துக்கெல்லாம் வந்து, விதண்டாவாதம் செய்யக் கூடாது! விஷயம் இருந்தால்கூட, அதை, நீ உனக்குள்ளேயே வைத்துக் கொள்ள வேண்டுமே தவிர, இப்படி என்னிடம் வந்து தகராறு பண்ணி, எனக்கு எரிச்சல் மூட்டக் கூடாது! வீட்டுத் தகராறில் என் கவனம் கலைந்தால், அப்புறம், தொழில் எப்படி நடக்கும்? பணம் எப்படிப் பெருகும்? உன்னுடைய இந்த வசதிகள் எப்படி நிலைக்கும்? யோசித்து, வாயை மூடிக் கொண்டிருக்கப் பழகிக் கொள்!” என்று முடித்தான் சுகந்தன்.

திகைப்போடு, தமயந்தியின் மனம் குழம்பியும் போயிற்று!

பணத்துக்காக அவனை மணந்ததாக, சுகந்தன் அவளைக் குற்றம் சாட்டுகிறானா?

ஆனால், அப்படியில்லையே! திருமணத்துக்கு முன்பாகவே, அவன் பணக்காரன் என்பது தமயந்தி குடும்பத்துக்குத் தெரியும் என்றாலும், அதற்காக மட்டுமாக, அவனை, அவள் மணக்கவில்லையே!

அவனுடைய தோற்றம், ஒழுக்கம், பழகும் முறை, குடும்பம் எல்லாமே பிடித்துப் போனதால்தானே, திருமணம் நடந்தது!

அதைச் சொல்லிவிட வேண்டும் என்று எண்ணி, “நான் ஒன்றும் . . “ என்று தொடங்கிவிட்டுப் பேச்சை நிறுத்தினாள் அவள்.

இன்னோரன்ன வார்த்தைகளால், அவனது பணத்தை விரும்பி, அவள், அவனை மணந்ததாகச் சுகந்தனும் சொல்லவில்லையே! ஒரு

பணக்காரனுடைய மனைவி வசதிகளை அனுபவித்தாலும், எப்படிச் சில விஷயங்களைப் பொறுத்து வாழ வேண்டும் என்று எடுத்துச் சொன்னதாகவும் வைத்துக் கொள்ளலாமே!

அந்த மாதிரி எண்ணி அவன் சொல்லியிருந்தால், இப்போது தமயந்தி சொல்ல நினைத்தது விதண்டாவாதம் போலத்தான் தோன்றும்!

பிசைந்த சாதம் கூடத் தொழில் நினைவில் அவனுக்கு மறந்திருக்கலாம்! அப்படியேதானோ? ஆனால், அதிக வேலை என்று ஓடும்போது தவிரத் தட்டில் கை கழுவுவது கூட, அவனுக்குப் பழக்கம் இல்லையே!

ஒருவேளை, தொழில் பற்றி ஏதாவது புதிய ஐடியா வந்து, அதைப் பற்றி யோசிப்பதற்காக, அவசரமாக வந்தானோ?

பலவாறு யோசித்து, வாயை மூடிக்கொண்டு ஒதுங்கிப் போன தமயந்திக்குத் தன்னை நினைத்தே ஆச்சரியமாக இருந்தது!

பொதுவாக அவள் கலகலப்பாகப் பழகுகிறவள். ஆனால், பணிந்து போகிற ரகம் கிடையாது! ஜாடை மாடையான பேச்சைக்கூட விடாமல், " அதெப்படி? " என்று, அடிவரை போய் அலசி வாதாடுகிறவள்தான்!

ஆனால், அதெல்லாம் மாறிவிட்டதே!

அவனுக்காக யோசித்து, அவனுக்காக வாதாடி, தன்னையே அமைதிப் படுத்திக் கொண்டாளே!

எப்படியோ! இந்த அமைதியேனும் நிலைத்தால் சரி என்று எண்ணினாள் தமயந்தி!

இப்போதைக்கு இந்த அமைதி நிலைத்து, விரைவிலேயே ஒரு குட்டி சுகந்தனோ, அல்லது ஒரு குட்டித் தமயந்தியோ பிறந்துவிட்டால், அப்புறம் எல்லாம் நன்றாகி விடும்!

# அத்தியாயம் - 10

கணவன் மனைவிக்கிடையே ஒரு முடிவெடுக்க ஒருவர் போதும்! ஆனால், அதை நிறைவேற்றுவதற்கு, இரண்டுபேர் வேண்டும்!

வீடு அமைதியாக இருக்க வேண்டும் என்று தமயந்தி முடிவெடுத்திருந்தாள். அதற்காகவே, ஒரு சாதாரணப் பெண் தனது உரிமையாக எண்ணக்கூடிய பல விஷயங்களை, விட்டுக் கொடுத்து, கணவனுக்கு இதமாக நடக்க முயற்சித்தாள் .

ஆனால், சுகந்தனின் நடப்பு வேறு விதமாக இருந்தது!

வீட்டில் மனைவி ஒருத்தி காத்திருக்கிறாள் என்ற எண்ணமே இல்லாமல்,

வெளியே சாப்பிட்டு விட்டு வரலானான். சொல்வதும் இல்லை!

சொல்லியிருக்கக் கூடாதா என்று கேட்டால், ஒவ்வோர் அசைவையும் உன்னிடம் ஒப்பித்துக் கொண்டிருக்க முடியாது என்றான் அலட்சியமாக.

பட்டினியாய்க் காத்திருந்ததைச் சொன்னால், நான் உன்னைக் காத்திருக்கச் சொல்லவில்லையே என்று அசிரத்தையாகப் பதில் சொன்னான்!

திடுமென வெளியூர் போனான்! சொல்லாமல் கொள்ளாமல் திரும்பி வந்தான்.

அவளை, அவன் ஒரு மனிதப் பிறவியாக நினைப்பது போலவே, தெரியவில்லை! வீட்டில் இருக்கும் கட்டில், மேஜை, சோஃபா போல அவளையும் நடத்தினான்!

இதுவே தினசரிப் பழக்கமும் ஆயிற்று!

ஒரு முறை, அவன் வெளியூர் சென்றபோது, மாமியாரிடம் சொல்லிவிட்டு, தமயந்தி தாய்வீட்டுக்குச் சென்றாள்.

அது சமயம் திரும்பி வந்த சுகந்தன், வந்துவிட்ட தகவலை அவளுக்குச் சொல்லவே இல்லை!

இரண்டு நாட்கள் கழித்துத் தானாகத் திரும்பி வந்தவள் விஷயம் அறிந்து வெகுவாக அதிர்ந்து போனாள்!

தன்னை மீறி, “ சொல்லியிருக்கலாமே! உடனே வந்திருப்பேனே!” என்று அவள் தவிப்புடன் கூறியபோது, “ எதற்கு?” என்றான் அவன்

விட்டேற்றியாக.

“உனக்குப் பிறந்த வீட்டில் இருக்க ஆசையானால், எனக்காக அதை மாற்றுவானேன்?”

நீ இங்கே இருந்தாலும், இல்லாவிட்டாலும் எனக்கு ஒன்றும் இல்லை என்பது போன்ற அவனது பேச்சு, அவளை மிகவும் பாதித்தது!

ஆனால், அப்படித்தான் சொல்கிறான் என்று சுகந்தனைக் குற்றம் சாட்டவும், அவனது வார்த்தைகள் இடம் தரவில்லை!

எனக்காக, உன் ஆசைகளை அடக்க வேண்டாம் என்று, உனக்காகச் சொன்னேன் என்று அவன் கூறிவிட்டால், அவள்தான் சண்டைக்காரி என்று பேர் வாங்க நேரும்!

வாய் திறவாமல் வலியைப் பொறுத்துக் கொண்டவள், அதன்பிறகு வீட்டை விட்டு எங்கும் செல்வதே இல்லை!

அதற்காக, அவளை அவன் பாராட்டவும் இல்லை!

சரசமும் இல்லை., சண்டைக்கும் வழியில்லை! ஆனால், குறிப்பிட்டுக் குற்றம் சாட்ட முடியாத அளவில், தினந்தோறும் பல குண்டூசிக் குத்தல்கள்!

என்ன இது வாழ்க்கை என்று, தமயந்தியின் உள்ளம் சலிப்படையலாயிற்று. முதல் இரண்டு மாதகாலத்துச் சொர்க்க போகத்தை எண்ணிப் பாராமல், அதற்காக ஏங்காமல், அவளால் இருக்க முடியவில்லை!

இன்றைய நிலையை ஒப்பிட்டால், மலைக்கும் மடுவுக்கும் உள்ள வேறுபாடு.

என்னதான் “ ஆசை அறுபது நாள் “ பழமொழியை உருப் போட்டாலும், வேறு ஏதோ இருக்கிறது என்ற உறுத்தல் அவளுக்கு மறைவதாக இல்லை!

அதற்கேற்றபடி, நாளுக்கு நாள் சுகந்தன் அவளை ஒதுக்கி விலக்குவதையும் அவளால் நன்றாகவே உணர முடிந்தது!

இப்போதெல்லாம், அவளிடம் அவன் நின்று பேசுவதே இல்லை! அவளாகப் பேசினாலும், அவள் பேசிக்கொண்டிருக்கும்போதே, நடந்து சென்றுவிடுவான்! அதைக் குறிப்பிட்டுக் கேட்டால், “உருப்படியாக நீ ஏதாவது சொன்னால்தானே?” என்று மட்டம் தட்டினான்.
“ஒன்றுமில்லாததையெல்லாம் கேட்டுக் கொண்டு நிற்க, எனக்கு ஏது நேரம்?”

இரவில்கூட, ஏதாவது ஃபைலைக் கொண்டு வந்து, “வேலை இருக்கிறது. நீ வேறு அறையில் படுத்துக்கொள்!” என்பது வழக்கமாகிக் கொண்டு இருந்தது!

விஷயம் ஏதோ இருக்கிறது., அவனுக்குப் பிடிக்காத எதையோ அவள் செய்திருக்கிறாள் என்பது, இப்போது அவளுக்கு நிச்சயப்பட்டு விட்டது! இரவு பகல் அதைப் பற்றியே யோசித்து, என்னதான்அவள் மண்டையை உடைத்த போதும், அது என்ன என்பது அவளுக்குப் புரியவே இல்லை.

ஒருகால், அவள் செய்யாத தவறு எதையோ அவள் செய்திருப்பதாக, சுகந்தன் தவறாகவும் கருதியிருக்கலாம்!

ஆனால், அது என்ன என்று, அவனாகச் சொன்னால்தான் உண்டு என்பது மட்டும்  அவளுக்கு நிச்சயம்! ஏனெனில் அவளாகக் கேட்ட இருமுறையும், அவன், அவளைத்தான் முட்டாளடித்தானே தவிர, வேறொன்றும் சொல்லவே இல்லை!  இன்னொருதரம் கேட்டால், அப்போதும், அதுதான் நடக்கும்!

இத்தோடு நிற்குமா? அன்றி, இதற்கு மேலும் ஏதாவது நடக்குமா என்று அது வேறு நடுக்கமாக இருந்தது!

எரிமலை உச்சியில் உட்கார்ந்து, எப்போது வெடிக்கும், என்ன மாதிரி வெடிக்கும் என்று ஒன்றும் புரியாமல் வெறுமனே என்று காத்திருக்கிற நிலைமை! காத்துக் கொண்டிருக்கிற வேதனைக்கு, சீக்கிரமே எரிமலை வெடித்து, அதன் தீக் குழம்பில் அழிவதுகூட மேல் என்று தோன்றியது தமயந்திக்கு!

இந்த நிலையில், கல்விக் கூடங்களுக்கு விடுமுறைக் காலம் வந்தது!

அந்தச் சமயத்தில், தானும் மொத்தமாய் லீவு எடுத்துக்கொண்டு, குடும்பத்தோடு சொந்த ஊருக்குப் போய்த் தங்கிவிட்டு வருவது, தேவநாதனின் வழக்கம்! ஊரில், வயல் வரப்பெல்லாம் சுற்றி, இளநீர், பதனீர் குடித்துப் பிள்ளைகள் மூவரும் துள்ளாட்டம் போடுவார்கள்!

இந்த முறை, தமயந்திக்குத் திருமணம் ஆகிவிட்டதால், மற்ற இரு பிள்ளைகளை மட்டும் அழைத்துச் செல்வதாகத் திட்டம்!

கிளம்புவதற்கு முன் ஒரு நாள், தேவநாதன் தம்பதி, மூத்த மகளையும் மருமகனையும் விருந்துக்கு அழைத்தார்கள்.

வீட்டுக்கு வந்து அழைத்தார்கள்!

வருந்தி அழைத்தவர்களிடம், வெகு இணக்கமாக வருவதாகச்

சொல்லியிருந்தான் சுகந்தன்!

அதை நம்பி, தமயந்தியும், பத்தரை மணிக்கே தயாராக இருந்தாள். பயணத் தூரமே ஒரு மணி நேரத்துக்கு மேல் ஆகிவிடும் ! போக்கு வரத்து நெரிசல் மிகுந்த வழி. மாட்டிக்கொண்டால், குறைந்தது மேலும் ஒரு மணி நேரம்!

ஆனால், அவள் தயாராகி உட்கார்ந்திருக்க, சுகந்தன் வீட்டுக்கே வரக் காணோம்!

தன்னை எப்படி நடத்தினாலும், பெற்றோரிடம் ஒழுங்காக நடந்து கொள்வான் என்று எதிர்பார்த்தவளுக்கு, நேரம் ஆக, ஆக ஒரே தவிப்பாக இருந்தது!

அலுவலகத்துக்கு ஃபோன் செய்தால், சுகந்தனுக்குப் பிடிக்காது!

“போர்ட் வழியாக வரும்! எல்லோருக்கும் தெரியும்! அப்படி என்ன அவசரம்? முடிந்தவரை ஃபோன் பண்ணாதே. “ என்று ஏற்கனவே சொல்லியிருக்கிறான்.

சும்மாவே, ஒரு நூலில் தொங்குவது போல வாழ்க்கை இருக்கும் இன்றைய நிலையில், கணவன் சொல்லை மீறி எரிச்சலூட்ட, தமயந்திக்குத் தைரியம் இல்லை!

மணி பன்னிரண்டைத் தாண்டியதும், சுகந்தனின் செல் எண்ணைப் போட்டுப் பார்த்தாள். அவன் எடுப்பதாகவே இல்லை!

வீட்டு எண்ணைப் பார்த்ததுமே, செல்லை அணைத்துவிட்டான் போலும்!

மூசுமூசென்று வந்த அழுகையை அடக்கிக்கொண்டு, தமயந்தி மேலும் ஒரு மணி நேரத்தை ஓட்டினாள்.

ஹால் கடிகாரம் ஒன்றடிக்கவும், தமயந்தி இரண்டுவிதமாகக் கலங்கினாள்!

சுகந்தன் சரியான நேரத்தில் கிளம்பி வந்து, வழியில் அவனுக்கு என்னமும் ஆகிவிட்டதோ என்ற நடுக்கம்!

அப்படி இராது., சுகந்தன் கவனமாகக் கார் ஓட்டுகிறவன் என்று தன்னைத் தானே தேற்றிக் கொண்டு யோசித்தால், கணவன் தன் குடும்பத்தையே அவமதிக்கிறானே என்ற வேதனை!

அதிலும், அவளுடைய தந்தை அல்சர் நோயாளி! வேளைக்குச் சாப்பிடா விட்டால், வயிற்று வலி வந்துவிடும்!

மருமகனை விருந்துக்கு வரச் சொல்லிவிட்டு, அவர் எப்படி முன்னதாகச் சாப்பிடுவார்?

வீட்டில், இந்தத் தாமதத்துக்கு என்ன காரணம் சொல்வது?

ஒன்றரை வரை தவியாய்த் தவித்துவிட்டு, மீண்டும் ஒரு தரம் செல்லுக்குப் போட்டுப் பார்த்தாள்.

அப்போதும், அவன் எடுக்கவில்லை என்றானதும், சுள்ளெனச் சினம் பொங்கியது! தப்பும் செய்துவிட்டு, அதென்ன அழுத்தம்?

ஆத்திரத்துடன் அலுவலகத்து எண்ணை த் தட்டினாள்! செல்லில் தொடர்பு கொள்ள முடிந்தால், அவள் ஏன் அலுவலகத்துக்கு ஃபோன் செய்யப் போகிறாள்?

எதிர்பார்த்தது போல எடுத்தது டெலிஃபோன் ஆபரேடர்தான்!

பேசுவது யார் என்று தெரிந்ததும், "சார் இருக்கிறாரா என்று தெரியாது, மேடம்! செயலாளருக்குக் கொடுக்கிறேன்!" என்று இணைப்புக் கொடுத்தாள்!

தன்னுடன் பேசப் பிரியமின்றி, இப்படிச் சொல்லி வைத்திருக்கிறானா என்று

குன்றலும் கோபமுமாகத் தவித்தாள் தமயந்தி! அந்த அலுவலகத்தில், அவளைப் பற்றி என்ன எண்ணுவார்கள்?

"பாஸ் அப்போதே, மதிய உணவுக்காக வெளியே போய்விட்டாரே, மேடம்!" என்றாள் அந்தச் செயலாளர் பெண்.

ஐயோ! அவன் கிளம்பி வந்துவிட்டான்! அது தெரியாமல், அனாவசியமாக அவன் மீது கோபப் பட்டுவிட்டோமே என்று தமயந்தி கழிவிரக்கம் கொள்ளும்போதே, "வெள்ளிக் கிழமை போக வேண்டியது! இரண்டு நாள் முன்னதாக வர முடியுமா என்று, அவரே கேட்டு, இன்றைக்கு ஏற்பாடு செய்த பிசினஸ் லஞ்ச்! பன்னிரண்டு மணிக்கே போய்விட்டாரே. இரண்டு, இரண்டரைக்குத் திரும்பி வந்து விடுவார் என்று நினைக்கிறேன்! வந்ததும், ஃபோன் பண்ணச் சொல்லட்டுமா?" என்று, அவளுக்கு நெஞ்சு காந்தச் செய்தாள் செகரட்டரி!

இரண்டு நாள் அவனே முன்னதாக்கிய தொழில் ரீதி " லஞ்ச்! "

வேண்டும் என்றே, அவளை மட்டுமன்றி, அவளுடைய மொத்தக் குடும்பத்தையும் திட்டமிட்டு அவமதித்திருக்கிறான்! இவனுக்காக, ஒரு கணம் என்னமாய் இளகிக் கலங்கி விட்டாள்!

"மேடம் . . ?"

அவளது பதிலுக்காகச் செயலாளர் பெண் காத்திருப்பதை உணர்ந்து, " இல்லை. வேண்டாம்! நான் செல்லில் பேசிக் கொள்கிறேன்!" என்று சமாளித்து, ரிசீவரைக் கீழே வைத்தாள் தமயந்தி!

பெற்றோரிடம் என்ன சொல்வது என்று மனம் கலங்கியது!

ஆனால், தந்தை பட்டினி கிடக்கக் கூடாதே என்று, பிறந்த வீட்டுடன் தொடர்பு கொண்டாள்.

தந்தையே எடுக்கவும், "அப்பா, ஏதாவது சாப்பிட்டீர்களாப்பா?" என்று வருத்தத்துடன் கேட்டாள்.

அவள் எதிர்பார்த்ததற்கு மாறாகத் தேவநாதன் உற்சாகத்துடன் பேசினார்! "ஓ! ஒரு மணிக்கே முடித்து விட்டோமேம்மா! திடீரென்று வேலை வந்துவிட்டதாக மாப்பிள்ளை ஃபோன் பண்ணியதுமே, அம்மா இலையைப் போட்டுவிட்டாள்! உனக்குப் பிடித்த சாப்பாடு! நீ சாப்பிடவில்லையே என்பதுதான் குறை! ஆனால், உனக்கு ஹோட்டலில் அனுப்ப ஏற்பாடு செய்திருப்பதாகச் சொன்னாரா? நிம்மதியாக, ஒரு வெட்டு வெட்டி விட்டோம்!"

மேலுக்கு ஓரிரு வார்த்தைகள் பேசி சமாளித்தாள் மகள்.

அந்த மட்டும், அவளுடைய பெற்றோர் தப்பினார்கள்!

ஆனால், அவனது இலக்கு தமயந்தி மட்டுமே!

ஆனால் ஏன்?

அவளை ஏன் இப்படி வருத்தினான்? தாமதம் ஆகிறதே என்று அவள் தவிப்பாள் என்று நன்றாகத் தெரியும்! தவிக்கட்டும் என்று, வேண்டும் என்றே அவளிடம் சொல்லாமல் இருந்திருக்கிறான்! தொழில் ரீதிச் சாப்பாட்டை இரண்டு நாள் முன்னே கொண்டு வந்ததே, அவளைத் துன்புறுத்தானோ?

அப்படியானால், விருந்துக்கு வருவதாகச் சொன்னதே, அவளை வருத்தும் நோக்கத்தோடுதானா?

அப்படி மட்டும் இருந்தால், இருந்தால் என்ன? அப்படித்தான் என்று தெளிவாகத் தெரிகிறதே! இதைச் சும்மா விடக் கூடாது! இன்று வரை, ஒவ்வொரு முறையும், குற்றம் சாட்ட முடியாதமாதிரி நளுக்கிப் பேசினானே! அதுபோலப் பேச விடக் கூடாது!

உள்ளூரப் பிடிவாதத்துடன் தமயந்தி காத்திருக்க, சுகந்தன் பயண ஏற்பாட்டோடு மாலையில் திரும்பி வந்தான்.

ஹாலில் அவள் காத்திருப்பதைக் கவனியாதவன் போல, சுகந்தன்

உள்ளே செல்ல, அவள் பின்னோடு போனாள்.

அவன் தன் போக்கில் பெட்டியை எடுத்துத் துணியடுக்கவும், தமயந்தி பட்டெனப் பெட்டியை மூடிவிட்டு, “ஏன் இப்படிச் செய்தீர்கள்?” என்று ஆத்திரத்துடன் கேட்டாள்.

ஒரு கணம் வியந்து நோக்கியவனின் முகம் உடனேயே மாறியது.

தோளைக் குலுக்கி, “ எதைப் பற்றிக் கேட்கிறாய் என்று தெரியவில்லை! ஆனால், என் செயல்களுக்கு, நான் யாரிடமும் விளக்கம் கூறத் தேவையில்லை!” என்றான் அலட்சியமாக அவன்.

“இல்லை! சொல்ல வேண்டும்! நான் காத்திருப்பேன் என்று உங்களுக்குத் தெரியும்! அப்பாவுக்குச் சாப்பாட்டு நேரம் தாண்டுவதை நினைத்துக் கவலைப் படுவேன் என்றும் தெரியும்! வர வேண்டிய நேரம் தாண்டி, இவ்வளவு தாமதமாகியும் வரவில்லையே என்று, உங்களை நினைத்துக்கூட, நான் கவலைப் படுவேன் என்பதும், உங்களுக்குத் தெரியும்! ஒருவார்த்தை . .ஒரே ஒரு வார்த்தை சொல்லியிருந்தால், நிம்மதியாக இருந்திருப்பேனே! சொல்லுங்கள்! என்னை ஏன் தவிக்க விட்டீர்கள்? அதுவும் வேண்டுமென்றே!” என்று தமயந்தி சீறினாள்.

ஏற இறங்க அவளைப் பார்த்தான் சுகந்தன். “ தவிப்பானேன்? உனக்கு வேண்டிய பணம் , வசதி எல்லாம் இருக்கிறதுதானே? பிறகென்ன?” என்று , அவளை நகர்த்தி நிறுத்திவிட்டு, மீண்டும் துணிகளைப் பெட்டியினுள் வைக்கலானான்.

வெறித்து நோக்கி, “புரியவில்லை.” என்றாள் தமயந்தி.

உதட்டைப் பிதுக்கினான் சுகந்தன். “நான் என்ன, சீன மொழியிலா பேசினேன், உனக்குப் புரியாமல் போவதற்கு? தமிழில்தானே சொன்னேன்?” என்றான் ஏளனமாக.

“நான் பணத்துக்காக உங்களை மணந்ததாகச் சொல்லுகிறீர்களா?” என்று சினத்துடன் வினவினாள் தமயந்தி.

“பரவாயில்லையே! புரிந்துவிட்டதே! “ என்று எகத்தாளம் செய்தான் அவன்! “அதுவும் எப்பேர்ப்பட்ட தேர்வு! மற்றவர்களை எல்லாம் ஒதுக்கித் தள்ளி, இருப்பதில் சிறப்பு என்று . . ஆகா! புளகாங்கிதம் அடைய வைத்துவிட்டாயே!”

ஆத்திரத்துடன் நிமிர்ந்து “என் பெயர் என்ன தெரியுமா? தமயந்தி! நிலையில் உயர்ந்த தேவர்களை ஒதுக்கி, மனிதனான நளனை மணந்தவள் அவள்! நினைவிருக்கட்டும்!” என்றாள் அவள்.

“ என்னை, அவளுடைய நளன் என்பார்கள். . . “

“நளனா?” என்று கேட்ட சுகந்தனின் முகம் கனன்றது. “கண்ணகி என்று பெயர் வைத்துக் கொள்வதால் மட்டுமே, மதுரையை எரிக்கும் வல்லமை வந்துவிடுமா, என்ன?” என்று எகத்தாளமாகக் கேட்டவன் பெட்டியை எடுத்துக்கொண்டு, வெளியேறிவிட்டான்!

# அத்தியாயம் -11

வெகு நேரம் தமயந்திக்கு ஒன்றுமே ஓடவில்லை!

சுகந்தனின் பேச்சுக்கு என்ன அர்த்தம்?

அவனைப் பணத்துக்காக மணந்தவள் என்று குற்றம் சாட்டிய ஒரு பகுதி அவளுக்கு எளிதாகப் புரிந்தது!

கொஞ்சம் பணம் வந்து விட்டாலே வருகிற வியாதி அது! அவர்களது பணத்துக்காகவே, மற்றவர்கள் அவர்களைச் சுற்றுவதாக எண்ணுவது! ஆனால், விரும்பி மணந்த மனைவியையுமா அப்படி நினைப்பது?

என்ன பைத்தியக்காரத்தனம்?!

அவளுக்கு மட்டுமின்றி, அவளுடைய வீட்டாருக்கே, அந்த எண்ணம் சிறிதும் இல்லையே! அவன் தாயார் திருமணப் பேச்சை எடுத்தபோது, எல்லோருக்குமே வியப்பு கலந்த மகிழ்ச்சியாகத்தானே இருந்தது!

அதிலும் அவள்!

சுகந்தன் பணக்காரன், அவனுக்குப் பெரிய இடம் பார்ப்பார்கள்., அவனிடம் மனதைப் பறி கொடுத்துவிடக் கூடாது என்று எவ்வளவு கட்டுப்பாடாக இருந்தாள்! அப்புறமாக, அவன் வீட்டிலிருந்தே திருமணப் பேச்சு எழும்பவும், எவ்வளவு ஆனந்தப் பட்டாள்!

இதையெல்லாம், திருமணமான புதிதில் பேச்சுவாக்கில் அவனிடம், அவளே சொல்லியிருக்கிறாளே!

அப்படியிருந்தும், இந்த எண்ணம் எப்படி வந்தது?

அவள் சொன்னதை, நம்பவில்லையா? ஏன்? அந்த அளவுக்கா, " பணம் " அவனைப் பாதித்திருக்கிறது? வேடிக்கைதான்!

பணமே இல்லாவிட்டால்கூட, அவனது தோற்றமே, அவனுக்கு மற்றவரின் மதிப்பையும் பிரியத்தையும் ஈட்டித் தந்துவிடும் என்று, அவனுக்கு ஏன் புரியவில்லை?

எப்படியாவது புரியவைக்க வேண்டும்!

அடுத்து, " மற்றவர்களை ஒதுக்கி, இருப்பதில் சிறப்பு என்று . ." என்று சுகந்தன் சொன்னது, அவளுக்கு அடியோடு புரியவில்லை!

அப்படி அவள் யாரை ஒதுக்கினாள்? இருப்பதில் சிறப்பு என்று, யாரோடு ஒத்து நோக்கினாள்? அப்புறமாகப் பணத்துக்காக இவனைத் தேர்ந்தெடுத்தாள்?

சும்மா வாய்க்கு வந்தபடிக் குற்றம் சாட்டிவிட்டு, ஓடிப் போய்விடுவதா? காரணமே சொல்லாமல் வதைத்தது வேறு!

வரட்டும்! அவளுடைய ஆருயிர்க் கணவன், அன்பையே மறந்த அருமை நாயகன், நிறையவே விளக்கம் சொல்லியாக வேண்டும்!

“ விளக்கம் சொல்லத் தேவையில்லை” யாமா? அதையும் பார்த்துவிடலாம்!

எவ்வளவு மன உளைச்சல்! எவ்வளவு வேதனை? எல்லாவற்றுக்கும் பதில் சொல்லாமல், அவனை எப்படிச் சும்மா விடுவது? வரட்டும்! வரட்டும்! வந்து சேரட்டும்!

உள்ளூரக் கறுவியவாறு தமயந்தி காத்திருக்க, சுகந்தன் முழுக்க முழுக்க மாறுபட்டவனாகத் திரும்பி வந்தான்!

உள்ளூர வெற்றி உணர்வுடன்தான், சுகந்தன் சென்னையை விட்டுக் கிளம்பியது!

வாழ்க்கை என்பது பணம் மட்டுமல்ல என்று, மனைவிக்கு உணர்த்திவிட்ட திருப்தி!

இந்த ஒரு மாதமாக அவள் பட்ட துன்பம், தமயந்திக்கு நல்ல பாடமாக அமைந்திருக்கும்!

எவ்வளவுதான் பணம் இருந்தாலும், சந்தோஷமாக வாழ்வதற்கு, அந்தப் பணமும் நகையும் போதாது என்று புரிந்திருக்கும்! எல்லாவற்றுக்கும் மேலாக, இன்பமாக வாழ, அன்புதான் தேவை என்பதை, உச்சந்தலையில் ஆணி அறைந்தாற்போல, நன்றாகவே தெரிந்துகொண்டிருப்பாள்!

பாவம் அந்த ரத்தினவேல்! மனம் எவ்வளவு நொந்து போயிருந்தால், இந்தச் சின்ன வயதில் உயிரை விடுவான்!

நொந்து நொந்து, தவித்துத் தவித்து. . . .

அந்தத் தவிப்பில் கொஞ்சமேனும் தமயந்தியும் அனுபவிக்க வேண்டாமா?

இதுவரை, காரணம் புரியாமல் தவித்தாள்! இனிமேல், காரணம் புரிந்து வேதனைப் படட்டும்!

ஓர் இளைஞனின் உயிரும் நேசமும், அவ்வளவு அலட்சியமாகத் தோன்றுகிறதா?

ஐயோ! அவனை மணந்திருந்தால், உள்ளங்கையில் வைத்துத் தாங்கியிருப்பானே என்று, எண்ணி எண்ணி மறுகட்டும்!

மனதில் எண்ணங்கள் ஓடும்போதே, சுகந்தனுக்கு உள்ளூர வேதனையாகவும் இருந்தது!

இப்படியெல்லாம் நினைக்கையில், சுகந்தனின் நிலை என்ன? அவனை அல்லவா, தமயந்தி வெறுக்கத் தொடங்குவாள்?

இப்போதே, உள்ளூர  வெறுத்துக்கொண்டுதான் இருக்கிறாளோ, என்னவோ?

எவ்வளவு ஆவலோடு, அவளை மணந்தான்!

இந்தக் காலத்துப் பெண்களில்கூட, ஒரு சீதையைக் கண்டுவிட்டதாக, எவ்வளவு ஆனந்தப்பட்டான்! கடைசியில், அவளும் கண்ணாடிக் கல்லாகி விட்டாளே!

இந்தக் கண்ணாடிக் கல்லைக்கூட, அணைக்க ஆசைப்படும் தன்னை நினைக்கையில், அவனுக்கு அவமானமாக இருந்தது!

அதைத் தவிர்க்கவே, இப்போது அடிக்கடி வெளியூர்ப் பயணங்கள் என்று ஊரை விட்டு வெளியேறிவிடுவது!

அவசியமற்ற பயணங்கள்! அங்கங்கே நியமிக்கப் பட்டிருக்கும் “ டீலர்கள் “ பார்த்தாலே, போதுமானது!

தமயந்தியிடமிருந்து விலகி இருப்பதற்காக, இந்த அனாவசியப் பயணங்கள், அவனுக்கு அவசியமாகிப் போயின!

தமயந்திக்குத்தான் எவ்வளவு காந்த சக்தி!

மன உறுதி உடையவனான தானே இந்தப் பாடு படும்போது, பாவம்,

பலவீனனாகத் தோன்றிய ரத்தினவேல் உயிரை விட்டது ஒன்றும் அதிசயம் அல்ல!

பூ மாதிரி இருக்கும் தமயந்திக்குள், இரும்பு மனம் இருந்ததுதான் அநியாயம்!

அவசியமற்ற பயணம்தானே? பார்க்க வேண்டிய வேலை வெகு விரைவில் முடிந்துவிட, சுகந்தனைத் தனிமை உளப்பியது!

தமயந்தி, தமயந்தி என்று அவளைப் பற்றிய எண்ணங்கள் நெஞ்சில்

குழும, அவற்றை உதறி விடுகிறவன் போல, எழுந்து நடக்கலானான்!

பங்களூர் “ கார்டன் சிட்டி. “ ! தங்கியிருந்த ஹோட்டலின் தோட்டமும் பெரியதே!

புதர்கள், பூஞ்செடிகளுக்கிடையே நடப்பதற்காக, ஓரமாகப் பாதையும் இருந்தது!

சஞ்சலங்களை மறக்க விரும்பி வேகமாக நடந்த சுகந்தனுக்கு, புதர்களுக்கு மறு புறமாக யாரோ பதுங்குவது போலத் தோன்றியது!

யார்? எதற்காகப் பதுங்குகிறார்கள்? யாருக்கு மறைவாக?

வேகமாகவும், மெதுவாகவும், பூக்களை ரசிப்பது போலப் பக்க வாட்டிலும் நடந்து, வில்லன் தன்னிடம்தான் ஒளிகிறான் என்பதைக் கண்டு கொண்டான்.

தொழில் அதிபர்களைக் கடத்திப்போய், மிரட்டிப் பணம் பறிக்கும் இன்றைய புதிய கலாச்சாரம், சட்டென நினைவு வர, சோர்ந்திருந்த நாடி நரம்புகள் அத்தனையும் தட்டி எழுப்பினாற்போலப் புத்துணர்ச்சி பெற, எச்சரிக்கையுடன் செயல் படலானான்.

சுகந்தனைக் கடத்துவது, அப்படி ஒன்றும் எளிதல்லவே!

புதர்களுக்கு அந்தப் பக்கமாய் நடப்பவனின் கையில், பரிசாரகர்களின் பெரிய ட்ரே இருப்பது, இலைகளினூடே தெரிந்தது!

கடத்தல்காரன், பரிசாரகன் வேஷத்தில் வந்திருக்கிறானா?

ஒரு கோணத்தில் வைக்கப் பட்டிருந்த ஹோட்டல் தொப்பியாலும், புதரின் இலைகளாலும் முகச் சாயலைக் கண்டுபிடிக்க முடியாவிட்டாலும், மறுபுறம் இருந்தவனின் கைகளில் ஆயுதம் ஏதும் இருக்க வாய்ப்பில்லை என்று தெரிந்தது!

ஒண்டிக்கு ஒண்டி . .இருவர் என்றாலும் சுகந்தனுக்குப் பயமில்லை! ஒரு கை பார்த்து விடுவான்! அவன் கற்றிருந்த போர்க் கலைகள் மூலம் இரண்டு மூன்று பேரைக்கூட எளிதாகச் சமாளித்துவிடலாம்!

ஆயினும், இவன் யார்? அறிமுகமற்ற தன் கண்ணில் படாமல் எதற்காக ஒளிய வேண்டும்? ஒரு வேளை . . .

சட்டென, இன்னொரு சந்தேகம் தோன்றி, அவனை உடல் சிலிர்க்க வைத்தது. நிச்சயமாக இவனை அறிந்தே ஆக வேண்டும்! சர்வ நிச்சயமாக!

குறுக்கே பாய்ந்து ஓடினாலும் அவனைப் பிடிப்பது கடினம். அத்தோடு, அயல் இடத்தில் அடாவடி செய்வதும் சரியல்ல!

எனவே, தோட்டத்தை ரசிப்பவன் போலவே, மெல்ல நடந்து, வண்ணக் குடைகளின் கீழே கிடந்த நாற்காலியில் அமர்ந்து, அங்கே சுற்றிக் கொண்டிருந்த பரிசாரகன் ஒருவனை, சுகந்தன் அழைத்தான்.

ஓடோடி வந்தவனிடம், ஒரு காஃபி கொண்டு வரச் சொல்லி அனுப்பிவிட்டு, இலகுவாகச் சாய்ந்து, மெனு கார்டை எடுத்துப் பார்க்கலானான்.

அவ்வளவு நேரமும், சுகந்தனின் பார்வை வட்டம், அந்தக் கண்ணாமூச்சிக் காரனை, நழுவ விடவே இல்லை!

அங்கிருந்து, அவன் செல்வதானால், ஒன்று ஹோட்டலுக்குள் செல்ல வேண்டும்! அப்போது, அவனது முகத்தைச் சுகந்தனுக்கு மறைக்க இயலாது!

அடுத்தது, ஹோட்டலில் இருந்து, வெளியே போவது! வெளியே போனால், அவனது சீருடையைப் பின்பற்றுவது எளிது!

கண்ணாமூச்சி வெளியே போவதைத்தான் தேர்ந்தெடுத்தான்!

அதாவது, தன் முகத்தைச் சுகந்தனுக்குக் காட்ட, அவன் விரும்பவில்லை!

சுகந்தனின் சந்தேகம் சரியானதாக இருந்தால், அவனிடம் முகத்தைக் காட்ட, வில்லன் விரும்ப மாட்டான்தான்!

ஆனால், அது எப்படி முடியும்? அதற்குரிய சாத்தியக்கூறு கொஞ்சம்தான்!

அந்தச் சந்தேகமே, ஆசை கொண்ட அவனது உள் மனதின் கூற்றாகக் கூட இருக்கலாம்! ஆனாலும் . . .

காஃபி வந்துவிட, முறுவல் காட்டி, காஃபிக்குரிய பணத்தைத் தாராளமான டிப்சுடன் சேர்த்துக் கொடுத்துவிட்டு, காஃபியை எடுத்து அருந்தத் தொடங்கினான் .

ட்ரேயைப் புதர் மறைவில் வைத்துவிட்டு, கண்ணாமூச்சி நைசாக வெளிப்புறம் நழுவுவது சுகந்தனின் ஓரக்கண்ணில் தெரிந்தது.

அவன் கண் மறைந்ததும், அவசரமாக எழுந்து, அவன் பின்னே விரைந்தான்.

முன்னவன் யாரேனும் தொடருகிறார்களா என்று பார்ப்பதற்காகப்

பின்புறம் திரும்பவும், சுகந்தன் சட்டெனக் காலை உள்ளிழுத்து, ஹோட்டலுக்குள்ளேயே நின்று கொண்டான்.

ஓரிரு வினாடிகள் கழித்து, அவன் மீண்டும் வெளியே சென்றபோது, முன்னே சென்றவன் காணாமல் போயிருந்தான்.

சற்று நேரம் திகைத்து, யோசித்தான் சுகந்தன்.

தெரு முனைவரை, நீண்டு பரந்திருந்தது ஹோட்டலின் சுற்று மதில்! அதனுள் புகுவதற்கு, இடையில் எங்கேயும் வழியில்லை!

எதிர்ப்புறம் வெட்ட வெளி! ஹோட்டலின் விரிவாக்கத்துக்காக, நிலத்தைச் சமன் படுத்திக் கொண்டிருந்தார்கள்.

எனவே, தெரு முனை திரும்பித்தான் எங்கோ போயிருக்க வேண்டும்!

தெருமுனை நோக்கி எச்சரிக்கையோடு நடக்கும்போதும், சுகந்தன் அவனைத் தப்ப விட்டுவிட்டதாக நம்பிக்கையிழந்து விடவில்லை!

பங்களூரிலும், அவனுக்குத் தெரிந்த பெரிய புள்ளிகள் இருந்தனர். அவர்களைக் கொண்டு, ஹோட்டல் தொழிலாளர்களை ஓர் அடையாள அணிவகுப்பு நடத்தினால், எளிதாகக் கண்டு பிடித்து விடலாம்!

எனவே, மாலை மங்கி வரும் இந்த வேளையில், அசட்டுத்தனமாக எங்கும் சென்று அவன் மாட்டிக்கொள்ளத் தேவையில்லை!

ஆனால், சுகந்தனுள் இருந்த வேகம், அவனை நிற்கவும் விடவில்லை!

எச்சரிக்கையோடு மெல்லத் தெருமுனை திரும்பிப் பார்த்தால், சாலையில் பல சிறு கடைகள் இருந்தன! அருகில் இருந்த நட்சத்திர ஹோட்டலுக்குப் பொருந்தும் வகையில் பெரிதாக்கப் பட்டுக் கொண்டிருந்தவையும் கூட.

அவற்றிடையே ஒரு எஸ்டிடி பூத்தும் இருந்தது. அதன் உள்ளிருந்து யாரோ வெளியே வர, ஒளிந்தோடிய ஹோட்டல் பணியாள் உள்ளே சென்று கொண்டிருந்தான்.

வேகமாகச் சென்று, அடுத்துப் பேசக் காத்திருப்பவன் போல, ஒரு பத்திரிகையை எடுத்துக்கொண்டு சுகந்தன் அமர்ந்தான்.

முதலில் பேசிவிட்டு வந்தவனிடம் இருந்து, உரிய கட்டணத்தை வாங்கிக்கொண்ட பூத் சிப்பந்தி, உள்ளே கதவைத் திறந்து, “இந்தா வேலு, இப்பவே சொல்லிட்டேன். கையிலே பணமிருந்தாப் பேசு! இல்லாட்டிப் பண்ணாதே! நீ கடன் சொல்லிட்டுப் போய் விடுகிறே!

முதலாளி என்னைப் பிடிச்சுக் காய்ச்சுகிறாரு! என்ன, வேணப்பட்ட பணம் வச்சிருக்கிறியா?" என்று அதட்டிக் கேட்டான்!

"எல்லாம் இருக்குப்பா! டிப்சே நிறைய வந்தது! அங்கே, அப்பா வந்திட்டார். என்னைப் பேசவிடு!"

கதவிடுக்கின் வழியே, உள்ளிருந்தவனின் பாதி முகம் தெளிவாகத் தெரிந்தது!

அவன் ரத்தினவேலுவேதான்!

# அத்தியாயம் -12

ஏற்கனவே, சுகந்தனுக்கு சந்தேகம் இருந்தது! முழுவதாக ஏற்றுக் கொள்ள முடியாத

சிறு சந்தேகம்!

அப்போதும், ரத்தினவேலுவை உயிரோடு பார்த்தது, அவனுக்கு அதிர்ச்சிதான்!

மகன் செத்துவிட்டதாக, அவனுடைய தந்தை எப்படி அழுதார்?

உயிரோடு இருக்கும் பிள்ளையைச் செத்துப் போனதாகச் சொல்ல, அவருக்கு எப்படி மனம் வந்தது?

அந்த விவரமும், உடனேயே தெரிய வந்தது!

ரத்தினவேல், அந்த எஸ்டிடி பூத்துக்கு அடிக்கடி பாக்கி வைப்பான் போலும்! எரிச்சலில் முணுமுணுத்துக்கொண்டே வெளியே வந்த பூத் சிப்பந்தி, கதவை அழுத்தி மூடவில்லை! இடைவெளி வழியே, ரத்தினவேலுவின் பேச்சு, சுகந்தனுக்கு நன்றாகவே கேட்டது!

“ . . யப்பா, உன் கஷ்டத்தையெல்லாம் அப்பறமாகச் சொல்லு! இப்போ, நான் சொல்கிறதைக் கொஞ்சம் கவனமாகக் கேளு! அப்பா, அந்த ஆள் . . .அதானப்பா, நான் செத்துவிட்டதாகப் போய் அழுதியே, அந்த ஆள் என்னை லேசாகப் பார்த்துவிட்டான்!

. . .என்னது? போலீசா? அதெல்லாம் ஒண்ணும் வராது! அவனே, என்னை முழுசாகப் பார்க்கிறதுக்கு முன்னாடியே, நான் நைசா, அங்கிருந்து நழுவி விட்டேன்! ச்சு! அந்தத் தறுதலை, நான் வேலை செய்கிற ஹோட்டலிலேயே வந்து தங்கித் தொலைச்சிருக்கிறான்! . . . ஊகூம். அதெல்லாம் பார்க்க மாட்டான். இரண்டு நாள் லீவு போட்டு, கண் காணாமல் போய் விடுவேன்! ஆனால், இப்போ, விஷயம் அது இல்லை! நான் சொல்கிறதைக் குறுக்கே பேசாமல் கேளுப்பா!

“ ஒரு வேளை, ஏதாச்சும் சந்தேகப் பட்டு, உன்கிட்டே வந்து விசாரிச்சானானால்,

நான் செத்துவிட்டதாகவே சொல்லிவிடு! சாதிச்சிடு! கூடவே, கொஞ்சம் அழுகை, திட்டு எல்லாம் சேர்த்துப் பின்னிடு! அதைச் சொல்லத்தான் கூப்பிட்டேன்! . ஆங், என்னது? பணமா? அடப்பாவி! பெத்த மகனுக்கு, ஒரு சின்ன உதவி செய்கிறதுக்கு, இப்படிப் பணம் பிடுங்குகிறியே! சரிசரி. ஆயிரம் ரூபாய் . . .”

அதற்குமேல், சுகந்தன் அங்கே நின்று கேட்டுக் கொண்டிருக்கவில்லை!

அவனுக்குத் தேவைப் பட்ட விவரம்தான் முழுவதும் கிடைத்தாயிற்றே!

ஆனால், எப்பேர்ப்பட்ட விவரம்!

மரண வாக்குமூலம் என்று அவன் நம்பிய ஒவ்வொரு வார்த்தையையும் பொய்யாக்கிய விவரம்!

பாவம்! இந்த ஒரு மாதமாக, தமயந்தியை அவன் என்ன பாடு படுத்திவிட்டான்!

ஐயோ! என் கண்மணி எவ்வளவு வேதனைப் பட்டிருப்பாள்? காரணமே புரியாமல், அடி வாங்கிய பச்சைக் குழந்தை மாதிரி . . .கடவுளே! அநியாயமாய் அவள் அனுபவித்த இந்தத் துன்பத்தை எப்படி ஈடு செய்வது?

எல்லாம், பணத்தாசை பிடித்த ஒரு தகப்பனின் நாடகத்தை நம்பி!

தொழிலைப் பிரமாதமாக நடத்துகிறவன் என்று பெத்த பெயர் வாங்கி என்ன பயன்? மனிதர்களை எடை போடத் தெரியவில்லையே!

ஒரு வைக்கோல் போர் நாயின் கட்டுக் கதையை நம்பி, பெரிய தப்பு செய்துவிட்டானே!

மனம் கசிந்து மறுகும்போதே, இல்லையே, அதை மட்டுமாக நம்பி மனைவியைத் தண்டிக்கவில்லையே என்று, மூளை குரல் கொடுத்தது!

ரத்தினவேலுடைய தகப்பன், அந்தக் காசி அழுது புலம்பிய பிறகும், இன்னும் ஆதாரம் வேண்டும் என்று தேடினானே! அந்த ஆதாரத்தை அளித்தது, அவனுடைய மனைவியேதானே!

பெரிய தப்பு செய்து விட்டாற்போல, உள்ளே உறுத்துவதாகச் சொல்லித் தன் தலையிலே, தானே மண்ணை அள்ளிப் போட்டுக்கொண்டாள்!

ஆனால், அவளது உறுத்தலின் காரணம் என்று, அன்று அவன் நினைத்ததை, இன்று அவன் மனமே ஒப்ப மறுத்தது!

தமயந்தியின் உறுத்தலுககு எத்தனையோ காரணங்கள் இருக்கக் கூடும்! அதில் ஒன்றுகூட, அடுத்தவனோடு காதல் நாடகம் ஆடியதாக இருக்க முடியாது!

ஏனெனில், அவள் “ தமயந்தி “!

ஏதோ தோன்றவும், சுகந்தனின் முகம் கடுத்தது!

உடனே, அறையைக் காலி பண்ணிக்கொண்டு பங்களூரில் இருந்து கிளம்பியவன், நேரே தேவபுரிக் கல்லூரியை அடைந்தான்.

அங்கே, அவனது வேலை விரைவிலேயே முடிய, காசியின் முகவரியை வாங்கிக் கொண்டு, உடனேயே கிளம்பிவிட்டான்!

மகன் எச்சரித்திருந்ததால், காசியும் சுகந்தனை எதிர்பார்த்தே இருந்தான்.

விட்டால், எங்காவது ஓடியிருப்பான்! ஆனால், மகனின் ஆயிரம் ரூபாய் அவனைப் பிடித்து வைத்திருந்தது!

"வாய்யா பெரிய மனுசா, வா! என் மகனை எரிச்ச இடத்தைப் பார்க்க வந்தியா?" என்று அவன் கண்ணைக் கசக்கத் தொடங்கியதுமே, சுகந்தன் ஓர் ஐயாயிரம் ரூபாய்க் கட்டை எடுத்துக் காட்டினான்.

"எஎன்னதிது. . ?" என்று, கண்களில் ஆசை மின்னக் காசி தடுமாற, "உனக்குத்தான்!" என்றான் சுகந்தன்.

"ஆனால், இது வேண்டுமானால், உண்மை சொல்ல வேண்டும்! "

மகனை எப்படிக் காட்டிக் கொடுப்பது என்று, காசி சற்றுத் தயங்கவும், "நிறைய விஷயம் எனக்கே தெரியும்! ரத்தினவேல் உயிரோடு இருப்பதிலிருந்து, அவன் உனக்கு ஆயிரம் ரூபாய் அனுப்புவதாகச் சொன்னது வரை! அதற்கு முன்னே, என்னிடம் வந்த கதைதான் தெரிய வேண்டும்! உண்மை சொன்னால், இது கிடைக்கும்! அல்லது, இரும்புக் காப்பு! என்ன? எப்படி வசதி?" என்று, பணக்கட்டைத தூக்கிப் போட்டுப் பிடித்து ஆசை காட்டி, கூடவே மிரட்டினான் சுகந்தன்.

காசி உடனே படிந்து விட்டான். "உனக்குத்தான் அல்லாமே தெரியுதேப்பா! அப்பறம் சொல்றதுக்கென்ன? பாருப்பா, நான் முன்னாடியே சொன்னேன், அந்தப் பொண்ணெல்லாம், உன்னை ஒரு நாளும் திரும்பிக்கூடப் பார்க்காதின்னு! ஆனால், அவன் கேட்காம, அவள் பின்னாடியே அலைஞ்சு பார்த்தான்! ம் . .கூம்! இங்கே படிக்கிறப்பவே, ஒண்ணும் முடியலை! பிறகு, அவளை யாரும் கட்ட விடாமக் கல்யாணத்தைக் கலைச்சு விடுவேன்னான்! அதுவும் நடக்கலை! அப்பறம், நிம்மதியா வாழ விடப் படாதுன்னு, அந்தக் கதை சொல்லச் சொன்னான் . . . அவ்வளவுதாம்ப்பா! பணத்தைக் கொடுக்கிறியா?" என்று கையை ஏந்தினான் அவன்.

"ஆனால், அதற்காக இரண்டு மாதம் காத்திருப்பானேன்?"

"அப்பத்தானேப்பா, வெளியூரிலே வேலை கிடைச்சுது? இங்கியே

இருந்துக்கிட்டு,

எப்படிப்பா, செத்துட்டதாப் பொய் சொல்றது? எப்பவாச்சும் கண்ணிலே பட்டுவிட்டா? அதான் ! ஆனால், நீ அங்கேயும் பார்த்துவிட்டியே! அல்லாம், அந்த முட்டாள்ப் பையன் தலைவிதி!" என்று காசியின் வாய் வேதாந்தம் பேசியபோதும், அவனது கை ஏந்தியவாறே இருந்தது!

அடப் பாவிகளா! என்று சுகந்தனின் நெஞ்சு கொதிக்கத்தான் செய்தது!

ஆயினும் அடக்கிக்கொண்டு, "பரவாயில்லை! எல்லாம் சொல்லி விட்டாய்! பணத்தைத் தந்து விடுகிறேன்! ஆனால், ஒரு நிபந்தனை! இனிமேல், தமயந்தி விஷயத்தில் வாலாட்டக் கூடாது என்று, உன் மகனிடம் நீ எச்சரிக்க வேண்டும்!

மீறித் தொல்லை கொடுத்தால், கைகால், ஏன், உயிரே கூடப் போனாலும் போய்விடும்! நினைவிருக்கட்டும்!" என்று கடுமையான குரலில் கூறிப் பணக் கட்டைக் காசியின் கையில் போட்டான் சுகந்தன்.

ஆசையோடு அவன் அதை எண்ணிப் பார்த்துக் கொண்டிருக்கும்போதே, அருவருப்புடன் பார்த்துவிட்டு, அங்கிருந்து கிளம்பிவிட்டான் !

வீடு நெருங்குகையில், சுகந்தனின் கார், தானாக வேகம் குறைந்து போயிற்று!

தன்னைப் பெரிய நீதிபதியாய் எண்ணிக்கொண்டு, தப்பு செய்யாத தமயந்தியைத் தவறாகத் தண்டித்திருக்கிறானே! அதிலும், கடைசி நாளன்று, வாயை வேறு நன்றாக விட்டாயிற்று!

இப்போது , அவளை எப்படிச் சமாதானப் படுத்துவது?

காரை நிறுத்திவிட்டு, இறங்கி உள்ளே போனபோது, செண்பகப் பூச்சரப் பொட்டலம் ஒன்று சுகந்தன் கையில் இருந்தது!

"இந்தாம்மா!" என்று, தமயந்தியின் கையில் அதைக் கொடுத்து, " இந்த வாசம் உனக்குப் பிடிக்குமே என்று வாங்கி வந்தேன்! போய் உடை மாற்றி, இந்தப் பூவையும் வைத்துக்கொண்டு வருகிறாயா? அப்படியே, ஹோட்டலுக்குப் போய்ச் சாப்பிட்டுவிட்டு வரலாம்!" என்று அழைத்தான்.

கணவனை வெறித்துப் பார்த்தாள் தமயந்தி!

கவனிக்காத மாதிரி உள்ளே போய் முகம் கழுவிவிட்டு, சுகந்தன் திரும்பி வந்தால், அப்போதும், அவள் அதே நிலையில் நின்றாள். பூ

மட்டும் காணாமல் போயிருந்தது! ஆனால், தலையிலும் வைக்கப் பட்டிருக்கவில்லை!

“பூ வைக்கவில்லை?”

“வாசனை அதிகம் உள்ள பூ. தலையில் வைத்தால், தலைவலி வந்துவிடும்! லேசாக வாசனை பரப்பிக் கொண்டிருக்கும்படியாகப் பூக்குவளையில் வைத்திருக்கிறேன்!”

பதில் வந்தது! ஆனால், உணர்ச்சியற்ற குரலில்!

கடந்த ஒரு மாதமாக, அவன் பயன் படுத்திய அதே விதமான, யாரிடமோ பேசுவது போன்ற பதில்!

தப்பு செய்யாதவளின் கோபம்! அவன் பொறுத்துத்தான் ஆக வேண்டும்!

“சரி . .இதே உடைகூட நன்றாகத்தான் இருக்கிறது! கிளம்புவோமா?”

“சமையற்காரம்மா இட்டிலி செய்து ஹாட் பேக்கில் வைத்திருக்கிறார்கள். எனக்கு அது போதும்! நீங்கள் வேண்டுமானால், வெளியே போய்ச் சாப்பிட்டுவிட்டு வாருங்கள். நான் காத்திருக்கிறேன்! “என்றாள் அவள்.

அவனுடன் வெளியே வர மறுப்பு! ஆனால், காத்திருக்கிறேன் என்கிறாளே!

என்ன என்பதுபோலக் கேள்வியாய் அவன் பார்க்கவும், “உங்களுடன் பேச வேண்டும். போய்ச் சாப்பிட்டுவிட்டு வாருங்கள்! அதன் பிறகு பேசலாம்.” என்றாள் அவள் மெல்லிய குரலில், ஆனால் தெளிவாக!

இது பேசாமல் தீராதோ? என்னதான் அன்பு காட்டினாலும், போகிறது என்று விடத் தோன்றாதோ?

நேர்மையாக இருப்பவர்களுக்கு, அது முடியாதுதான்!

அல்லது . . . ஒரு வேளை, மனம் திறந்து பேசிவிட்டால், அவனைப் புரிந்து கொள்ளக் கூடுமோ? அவனும் ஒன்றும் சந்தோஷமாக இருந்துவிடவில்லையே! கணவனுக்கும் வேதனைதான் என்று தெரியும்போது . . ..

சொல்லிவிட எண்ணிய போதும், தொடங்குவதே அவனுக்குக் கடினமாக இருந்தது! தப்பு செய்தவனின் தயக்கம்!

“ஒரு . .ஒரு தவறான கருத்து, தமயந்தி! சந்தர்ப்ப சூழ்நிலையால், ஒரு சூழ்ச்சியால் அப்படி நினைக்கும்படி ஆகிவிட்டது! இப்போது உண்மை தெரிந்து கொண்டேன் . . . இத்தோடு, இதை ஒதுக்கி விடுவோமே! ப்ளீஸ்டா! இனிமேல், இந்த மாதிரி நடக்கவே, நடக்காது! நிச்சயம்! சரிதானே?” என்று, கெஞ்சுதலாகக் கேட்டுப் பார்த்தான்!

ஏனெனில், விஷயம் வேறு மாதிரிப் பாயுமோ என்றொரு கவலையும் அவனுக்குத் தோன்றியிருந்தது!

# அத்தியாயம் - 13

அடுத்தவன் பேச்சை மதித்து, தமயந்தியைத் தவறாக எடை போட்டது பற்றிய விவரங்களைத் தெரிவியாமலே சமாளித்துவிடவே சுகந்தன் வெகுவாக முயன்றான்.

ஏனெனில், “ சாது மிரண்டால் காடு கொள்ளாது “ என்கிற மாதிரி, மிகவும் பொறுத்துப் போன தமயந்தி, அந்த ஒன்றில் ஆத்திரமடைந்து விபரீத முடிவு எடுத்துவிடுவாளோ என்று, அஞ்சத் தொடங்கியிருந்தான் அவன்.

அதற்குச் சரியாக, நேர்ப் பார்வையோடு, மறுப்பாய்த் தலையசைத்தாள் தமயந்தி. “கண்டபடி குற்றம் சாட்டினால், அதற்கு விளக்கம் சொல்லித்தான் ஆக வேண்டும்! சுகன். சொல்லாமல், சும்மா விட்டுவிட முடியாது.” என்றாள் பிடிவாதக் குரலில் .

தொடர்ந்து, “அன்று, என்னைத் “தமயந்தி” அல்ல என்றீர்கள்! பணத்துக்காக உங்களை மணந்ததாகச் சொன்னீர்கள்! அதுவும் சும்மா அல்ல! பல பேருடன் . .ஒரு மாதிரிப் பழகிவிட்டு, அத்தனைபேரில் நீங்கள்தான் பணக்காரர் என்பதால், உங்களைத் தேர்ந்தெடுத்ததாக, வெறுப்போடு கூறினீர்கள்! இவ்வளவு சொல்லிவிட்டு, “ விட்டுவிடு” என்றால், எப்படி முடியும்? அதுவும், அறியாத, தெரியாதபோது சொல்லவில்லை. இரண்டு மாதங்கள், ஒருயிராகப் பழகிவிட்டு, அதன் பிறகல்லவா குற்றவாளி என்றீர்கள்! அது ஏன் என்று, எனக்குத் தெரிந்தே ஆக வேண்டும்! சொல்லுங்கள்!” என்றாள் கண்டிப்பான குரலில்.

இனித் தவிர்ப்பதற்கில்லை என்று உணர்ந்து, சுகந்தன் சொல்லத் தொடங்கினான்.

“ரத்தினவேலை உனக்கு நினைவிருக்கிறதா?”

விழி அகலத் தலையாட்டினாள் தமயந்தி. ஆனால், உடனே இமையிடுக்கிக் கூர்மையுடன் அவனைப் பார்த்தாள். “அவருக்கும், இதற்கும் என்ன தொடர்பு?”

“எல்லாமே!” எனறான் சுகந்தன் சலித்த குரலில். “நம் திருமணம் நிச்சயமானதில் இருந்து, அவன் தொல்லை தொடங்கியது . . “ என்று தொடர்ந்து, திருமணத்தை நிறுத்த ரத்தினவேல் செய்த முயற்சிகளைப் பற்றிக் கூறினான்.

ரத்தினவேலின் அத்தனை முயற்சிகளையும், அவைகளைத் தான் சமாளித்த விதங்களையும் பற்றிச் சுகந்தன் எடுத்துச் சொன்ன காரணமே, அப்படி ஒன்றும் அவசரப்பட்டு, தமயந்தியை அவன் தவறாக எண்ணி விடவில்லை என்பதை அடிக் கோடிட்டுக் காட்டத்தான்.

அவளும், அதை உணர்ந்தவளாய், "அதெல்லாம் சரியாகத்தான் தெரிகிறது! பிறகு அபிப்பிராயம் எப்படி மாறிற்று?" என்று வினவினாள்.

அன்றைய நினைவில், சுகந்தனின் மனம் குன்றியது! ஒரு கீழ்த்தரக் கிழவனின் நடிப்பில், எப்படி ஏமாந்து போனான்?!

இரண்டாவது மாதத் திருமணநாளுக்கு மறுநாள்!

அந்த நாளின் மகிழ்ச்சியில் இருக்கும்போது, ரத்தினவேலுடைய தந்தை காசி வந்தது பற்றி, வந்து மகனின் தற்கொலை பற்றி அழுது புலம்பியது பற்றித் தெரிவித்தான்.

"அவன் மகனை இழந்து தவிக்கும்போது, நாம் மகிழ்ந்து கொண்டாடியது, மனதில் உறுத்தியது . ."

"புரியவில்லை!" என்றாள் தமயந்தி. "இரக்கமற்றுப் பேசுவதாக நினைக்க வேண்டாம்! ஆனால், யாரோ ஒருவர், ஏதோ எண்ணி உயிரை விட்டதற்கும், நம் மகிழ்ச்சிக்கும் என்ன சம்பந்தம்? அத்தோடு, அவன் சாவுக்கு நான் எப்படிப் பொறுப்பாளியாவேன்? அதற்காக, நீங்கள் என்னைத் தண்டித்தது என்ன நியாயம்? அதிலும், முதலில் எல்லாம் சரியாகத்தானே யோசித்திருக்கிறீர்கள்? இப்போதென்ன? ரத்தினவேலுடைய தந்தை சொன்னது எல்லாமே, சத்தியவாக்கானது எப்படி? எவனோ ஒருத்தன் ஏதோ சொன்னால், மனைவி மோசமானவள் ஆகிவிடுவாளா? "

அவனைப் போலவேதான் பேசுகிறாள்! சிறு ஏளனம், மட்டம் தட்டல்!

இதே போலத்தான் நெருஞ்சியாய் உறுத்தியிருக்கும்! இவள் ஆத்திரப்படுவது நியாயம்தான்!

தணிந்த குரலிலேயே, சுகந்தன் பதில் சொன்னான். "சாகிற நிலையில் சொன்னான் என்பது ஒன்று. . . அத்தோடு, அதை நான் நம்பியதற்கு, ஒரு வகையில் காரணம் நீயும்தான், தமயந்தி. "

"என்னது? நான் ஒரு நாளும் அவனை நெருங்க விட்டதுமில்லை., அவனை ஒரு பொருட்டாக நினைத்ததும் இல்லை! "

"இல்லையில்லை! அந்த மாதிரியில்லை. பொறும்மா! எப்படி என்று நானே சொல்லி விடுகிறேன். ஒரு நாள் . .சரியாகச் சொல்வதானால்,

ரத்தினவேலுடைய தந்தை காசி என்னிடம் வந்து அழுததற்கு மறுநாள் காலையில், ரத்தினவேலின் தற்கொலை பற்றி, உன்னிடம் சொன்னேனே, நினைவிருக்கிறதா? அப்போது நீ என்ன செய்தாய்? நான் உள்ளே சென்றதும், உன் தோழிக்கு டெலிஃபோன் செய்து, “ பெரிய தப்பு செய்து விட்டாற்போல உறுத்துகிறது “ என்று சொல்லவில்லை?”

“கடவுளே! ஒருவன் என்ன மறுத்தும், பின்னோடேயே அலைகிறான்., அவனை, உன் தலையெழுத்து, போய்த்தொலை என்று விட்டது தப்போ? கொஞ்சம் நல்ல புத்தி சொல்லித் தெளிய வைத்திருந்தால், செத்திருக்க மாட்டானோ என்று தோன்றாதா? அப்படித் தோன்றும்போது உறுத்தாதா? இந்த ஒரு வார்த்தையில், சந்தோஷமாக, என்னைக் கெட்டவளாக்கி விடுவதா? “ என்று ஆத்திரத்துடன் கேட்டாள் தமயந்தி!

“சந்தோஷமாக இல்லை, தமா. ரொம்ப வேதனைதான். . .”

“ஆனால், ஒரே வாக்கியத்தில் என்னைத் தப்பாக எண்ணிவிட்டீர்கள்தானே?”

“அப்படியும் இல்லை! திருமண இரவில் பழைய காதல் பற்றிப் பேசினோமே, அப்போதும், சற்றுத் தயங்கி விட்டுத்தானே இல்லை என்றாய்? ஆனால், மறை . .மறைத்தாயோ என்று, சந்தேகம் வந்தது இந்தச் சாவினால்தான்! “

சற்று யோசித்து நினைவுபடுத்திக்கொண்டு, “நான் காதலித்தேனா என்றுதானே அன்றைக்குக் கேட்டீர்கள்? எவனோ என் பின்னே அலைந்ததைச் சொல்ல வேண்டுமா என்று யோசித்துவிட்டு, என் மனம் அவனிடம் ஈடுபடாதபோது அவசியம் இல்லை என்று முடிவு செய்தேன்! இதெல்லாம் கூடவா, தப்பு என்கிறீர்கள்?” என்று சினத்துடனேயே கேட்டாள் தமயந்தி.

“இல்லைம்மா! தப்பு என்று நினைத்திருந்தால், அன்றிலிருந்தே உன்னை ஒதுக்கியிருக்க மாட்டேனா? ஆனால், வாழ வேண்டிய வயதில், வயதான தந்தைக்கு ஊன்றுகோலாக இருக்க வேண்டிய ஒருவன் வாழ்வை முடித்துக் கொண்டான் என்று அந்தத் தந்தை வந்து கண்ணீர் விட்டுக் கதறியபோது, எல்லாம் தப்பாகத் தோன்றிவிட்டது! ரத்தினவேல் சொன்னது எல்லாமே நிஜமோ என்று . .கொஞ்சமேனும் தூண்டுதல் இல்லாமலா, ஒருவன் உயிரையே விடுவான் என்று . . . அப்படி யோசித்தபோது, உன் தயக்கமும் பேச்சும், அதை உறுதிப்படுத்துவது போல ஆகிவிட்டது! முதலில் வேறு விதமாகத் தோன்றிய பலதுமே,

பிறகு இந்த முடிவுக்குச் சாதகமாகத் தோன்றிவிட்டன! “

“அப்படி இருவிதமாகத் தோன்றினால், அப்போதேனும் என்னிடம் விவரம் கேட்டிருக்கலாமே! விசாரிக்கவே இல்லாமல், என்ன மாதிரித் தண்டித்து விட்டீர்கள்? காரணம் புரியாமல் தவித்து, யாரிடம் சொல்லவும் கூசி . . கடைசியில், இனிமேல் இதுதான் வாழ்க்கையோ என்று சலித்து. . .சே! இந்த ஒரு முழு மாதமும் எனக்கு நரகமாக இருந்ததே! உடனேயே என்னிடம் ஏன் கேட்கவில்லை? ஒருவேளை, பொய்தான் பதிலாக வரும் என்று நினைத்தீர்களோ?”

“ சந்தேகம் வந்தால்தானே தமா, கேட்பதற்கு? சாகப் போகிறவன் பொய்யா சொல்வான் என்று . . .”

“ அதாவது, எவனோ ஒருத்தன் வார்த்தையை நம்பிக் கட்டிய மனைவியைக் குற்றவாளி என்று தீர்மானித்திருக்கிறீர்கள்! உங்கள் பேச்சின் சாராம்சம் இதுதான், இல்லையா?” என்றாள் அவள் கொதிப்புடன். “அந்த நளன் காட்டில் மனைவியைக் கைவிட்டுப் போனான். இந்தச் சென்னையில் காட்டுக்கு எங்கே போவது? அதனால்

வீட்டையே காடாக்கி, என்னைக் கைவிட்டிருக்கிறீர்கள்! பிரமாதம்!” என்றாள் எகத்தாளமாக.

ஏதோ பேச வாயெடுத்தவனுக்கு இடம் கொடாமல் தொடர்ந்து, “ஆனால் . . .முதலில் ஏதோ தவறான கருத்து , அது இது என்று என்னவோ ஒரு தினுசான விளக்கம் கொடுத்தீர்களே! திடீரென்று எப்படிச் சாகப் போகிறவன் வார்த்தை பொய்யாகிப் போயிற்று? ஒருவேளை, செத்தவன் உயிரோடு திரும்ப வந்துவிட்டானா?” என்று எகத்தாளமாகக் கேட்டவள், அவன் “ஆமாம்!” என்று சொல்லவும், தூக்கிவாரிப் போட்டுக்கொண்டு துள்ளிக் குதித்தாள்!

“எஎன்னது?!” என்றாள் திகைப்புடன்!

“கேட்பதற்கே, உனக்கு இப்படி இருக்கிறதே! அவனை நேரில் பார்த்த எனக்கு எப்படி இருந்திருக்கும்?”

ஒரு பெருமூச்சுடன் தமயந்தி சோஃபாவில் அமர்ந்தாள்.

சற்று நேரம் அப்படியே உட்கார்ந்திருந்தவளிடம், ஒரு டம்ளரில் தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தான் சுகந்தன்.

“தாங்க்ஸ்!” என்று, அதை வாங்கி மடமடவென்று குடித்துவிட்டுக் காலி டம்ளரை டீபாய் மேல் வைத்தாள் அவள். கணவனை ஏறிட்டு, “நீங்கள் சொல்வது எல்லாம் எனக்குக் குழப்பமாக இருக்கிறது! பங்களூரில் ரத்தினவேலைப் பார்க்கிருக்கறீர்கள் என்கிறவரை புரிகிறது! என்ன

நடந்தது? “என்று கேட்டாள்.

எந்தவித உணர்ச்சியையும் காட்டாத குரல்!

கண்டபடிக் குற்றம் சாட்டிவிட்டு வெளியூருக்கு வேறு போய்விட்டதும் பிழைதான்! இரண்டு நாட்களாகத் தனிமையில் கிடந்து புழுங்கியிருக்கிறாள் என்பது அவனுக்குப் புரிந்தது! புழுங்கி, குமுறி, அது கோபமாக மாறியிருக்கிறது!

இன்னொருத்தி யானால், யாரிடமாவது சொல்லி, பாரத்தை இறக்கியிருப்பாள்! தமயந்தியின் சுய கௌரவம், அதற்கும் இடம் தரவில்லை! இந்த நாலு சுவர்களுக்குள் நடந்தது எதுவும் வெளியே போகவில்லை!

அதனாலேயே, வேறு யாரிடமும் விளக்கம் கொடுக்க வேண்டிய கேவலத்திலிருந்து, சுகந்தன் தப்பியிருக்கிறான்!

ஆனால், அந்த சுயகௌரவம்தான், இப்போது அவனுக்குக் கலக்கமூட்டியதும். அவனது விளக்கத்தை, அவளது கௌரவம் ஏற்குமா?

அவனுக்கு நிச்சயமில்லை!

உண்மையைச் சொல்வோம்., அதற்குமேல், அவள் விருப்பம் என்று எண்ணியவனாய், ரத்தினவேலைப் பார்த்ததில் இருந்து, நடந்தவை அனைத்தையும் சுகந்தன் தமயந்தியிடம் சொன்னான்!

“எட்டு ஆண்டுகளாக, ஒரு தொழிலைத் தொடங்கி, அதை லாபகரமாக நடத்தி வருகிறவன் நான். நான் ஒருவனது நடிப்பில் ஏமாந்து போனேன் என்று எண்ணுகையில், மிகவும் அவமானமாக இருக்கிறது! அதைவிடக் கேவலம், அதற்காக, உனக்குத் தண்டனை கொடுத்தது! தண்டனைதான். அப்படித்தான் நினைத்தேன். அந்த ரத்தினவேல், உன்னை நினைத்து, வருந்தி வருந்தி உயிரை விட்டதற்குக் கொஞ்சமேனும் நீ ஈடு கட்ட வேண்டும் என்றுதான் உன்னை அப்படி நடத்தினேன்! ஆனால், அதன் பலனாக, இப்போது நான்தான் உன்முன் குற்றவாளியாக நிற்கிறேன். என் பிழைக்கு என்ன பிராயசித்தம்? எனக்குப் புரியவில்லை! ஆனால், உணர்ந்து மறுகுகிறேன்! கூசிக் குறுகுகிறேன். . . . தயவு செய்து என்னை மன்னித்து விடுகிறாயா, கண்மணி?” என்று கெஞ்சுதலாகக் கேட்டு முடித்தான் .

மன்னிப்பு!

இந்த ஒரு வார்த்தையில் மறைந்து விடக் கூடிய வேதனையா, இந்த ஒரு மாத அனுபவம்?

கணவன் கேட்கிறான் என்பதால், இந்த ஒரு வார்த்தையில், எல்லாவற்றையும் மறந்து, அவனோடு ஒட்டிக்கொள்ள வேண்டுமா?

அவனை வெறித்துப் பார்த்தாள் தமயந்தி.

“அப்படிப் பார்க்காதே, கண்ணம்மா! இந்த ஒரு மாதமும், உனக்கு மட்டும் தண்டனையல்ல, தமயந்தி. எனக்கும் பெரும் வேதனையாகத்தான் இருந்தது, தெரியுமா? நீ கஷ்டப் படுகிறாயே என்பதும், வேதனை. அத்தோடு, எப்படி இருந்த வாழ்வு என்று ஏக்கம் வேறு! போனதெல்லாம் போகட்டும்! இனியேனும் நல்லபடியாக வாழலாம்!”

ஏக்கமா? ஏக்கம் அவனுக்கு மட்டும்தானா? ஏன், ஏன் என்று எதுவும் புரியாமல்,

பசித்தவன் பழங்கணக்குப் பார்ப்பது போல, இரண்டு மாத இன்பத்தை எண்ணி எண்ணி, எவ்வளவு துன்பம்!

அவளிடம் ஒரு வார்த்தை கேட்டிருந்தால்?

ஆங்கிலேயர்கள், ஒரு நாயைக் கொல்வது என்றாலும், விசாரணை நடத்தித்தான் கொல்வார்கள் என்பார்கள்!

ஒரு நாய்க்கு உள்ள மதிப்புக்கூட, சுகந்தன் அவளுக்குக் கொடுக்கவில்லையே! எதையும், கேட்கவே இல்லையே!

கேட்கத் தேவையும் அவனுக்கு இருக்கவில்லை! எவன் சொன்னதையோ நம்பி, அவன் ஏற்கனவே, அவளைக் குற்றவாளியாக்கி முடித்துவிட்டான்!

ஆனால், இவனைப் பற்றி, இப்படி ஒரு குற்றச்சாட்டு வந்திருந்தால், அவள் அதை நம்புவாளா? சொன்னவனை அடித்துத் துரத்தியிருக்க மாட்டாளா?

கணவன் அவளை மோசமாக நடத்தியபோதுகூட, என்ன தப்பு செய்தோமோ என்றுதான் யோசித்தாளே தவிர, பழைய காதலோ, புதிய மோகமோ என்று ஒரு தரமேனும் நினைத்தது இல்லையே!

இவனானால், எவன் பேச்சையோ நம்பி அவளைக் குற்றவாளியாகவே கருதிவிட்டானே! எப்படி முடிந்தது?

முடிந்திருக்கிறதே!

அவ்வளவுதான் மனைவி மீது உள்ள நம்பிக்கை!

இத்தனை நாள் இவனோடு வாழ்ந்த வாழ்வுக்கு என்ன அர்த்தம்

இருக்கிறது?

அர்த்தமே இல்லாதபோது, இந்த வாழ்வை, இன்னமும் எப்படி வாழ்வது?

“அவ்வளவு எளிதாக, அதை முடிவு செய்ய முடியுமா?” என்றாள் உரக்க.

“தமயந்தி . . “

“மனைவிக்கு உரிய மதிப்புத் தரவில்லை! எவனோ ஒருவன் சொன்னதை நம்பி, அவளைக் குற்றவாளியாக்கித் தண்டனையும் கொடுத்து விட்டீர்கள்! அவளிடம், ஒரு வார்த்தை விளக்கம்கூடக் கேட்கவில்லை! கேட்கத் தோன்றவும் இல்லை! இந்த அவமதிப்பை மன்னிப்பது எளிதல்லவே!”

“தமயந்தி ! பெற்ற தந்தை வந்து அவன் செத்துவிட்டதாக அழுததை எப்படி நம்பாதிருப்பது? மரணத்தின் வாசலில் நின்று, மகன் சொன்னான் எனும்போது . . .”

பொறுமையிழந்து குறுக்கிட்டாள் அவள். “ஒருவன் செத்துவிட்டால், அவன் சொன்னதெல்லாம் மெய்யாகி விடுமா? அதற்காக மனைவியைத் தவறாக நினைப்பதா? என்னால் ஒப்ப முடியாது! அப்போது, அவன் செத்தே போயிருந்தால், நான் கெட்டவள் என்பது, உறுதியாகி விடுமா? இந்தப் பேச்சை விட்டுவிடுங்கள், சுகன்! இப்போது நான் யோசிக்க வேண்டும். ரொம்ப! அதன் பிறகுதான் எந்த முடிவும் எடுக்க இயலும்! அது வரையில் . . அதவரையில், நான் வேறு அறையில் இருந்து கொள்கிறேன்!” என்றாள் தமயந்தி!

# அத்தியாயம் -14

இந்த “ வேறு அறை “ விவகாரமும், சுகந்தன் தொடங்கி வைத்ததுதான்!

தமயந்தியைத் தண்டிப்பதாக எண்ணி, வேண்டுமென்றே ஃபைல்களைக் கொண்டு வந்து வைத்துக்கொண்டு, “ வேலை இருக்கிறது. வேறு அறையில் படுத்துக் கொள்! “ என்று முதலில் விரட்டியவன் அவன்தான்!

விரட்டிவிட்டு, அவனும் விழித்துக் கிடந்தான்!

ஆனால் இப்போது, அவளாக விலகியது, அவனுக்கு உள்ளே வலித்தது!

விலகிப் போனது மட்டுமன்று.

கணவனுக்காகச் செய்துவந்த பல பணிகளையும், தமயந்தி விட்டுவிட்டாள்.

அவன் குளித்துவிட்டு வரும் நேரம் பார்த்து, உணவைப் பரிமாறி வைப்பது, தேவையறிந்து பானங்கள் கொண்டுவந்து கொடுப்பது, அவன் அலுவலுக்குச் சென்ற பின், அவனது பொருட்களை ஒதுக்கி வைப்பது . . .

எல்லாம் நின்று போயிற்று!

நெஞ்சு நிறைந்த காதலில், “ என் கணவனுக்கு” என்று ஆசையில் செய்தவை! இப்போது, ஒன்றும் பிடிக்கவில்லை!

எவனோ ஒருத்தன் சொன்னதைக் கேட்டு, என்னைத் தவறாக எண்ணினானே என்று, அதேதான் அவளது மனதைக் குடைந்துகொண்டே இருந்தது!

அன்று ஒரு முக்கியமான ஒப்பந்தம் கிடைத்தது பற்றிப் பெருமையாகச் சுகந்தன் சொல்லிக் கொண்டிருந்தபோதே, தமயந்தி எழுந்து போய்விட்டாள்!

இவன் தொழிலில் என்ன ஜெயித்து என்ன? வாழ்க்கையில் எது முக்கியம் என்று தெரியவில்லையே! என்னை விட, ஒரு பொறுக்கியின் பேச்சைப் பெரிதாக நினைத்தவனின் இந்த வெற்றி பற்றி எனக்கென்ன என்று அவள் நினைத்தாள்.

ஒரு கணம் சுகந்தனின் கண்கள் ஆத்திரத்தில் சிவந்துவிட்டன.

ஆனால், இதுவும் அவன் செய்ததுதானே? ஒன்றா, இரண்டா? எத்தனை முறை! இப்போது, படுவது அவன் முறை!

என்ன செய்வது? உப்பைத் தின்றால், தண்ணீர் குடித்துத்தானே தீர வேண்டும்?

நியாயம் அறிந்தவன் என்பதால், புருஷன் நான்., என்னோடு போட்டியா என்று பொங்காமல், பொறுத்துக் கொண்டான்!

முதலில் சில நாட்கள், கணவன் மனைவியிடையே உரையாடல் என்பதே இல்லாமல் இருந்தது! அவனாகப் பேசினால்கூட, அவளிடம் இருந்து எதிரொலியே இராது!

பிறகு, சீம்பால் கிடைத்தது என்று அதை இட்டிலிப்பானையில் வேக வைத்து எடுத்துக்கொண்டு சரசா ஒருநாள் இங்கு வந்து, சற்று நேரம் தங்கிவிட்டுப் போகவும், அவளுக்காகத் தொடங்கிய பேச்சு, ஓரிரு வார்த்தைகளாகத் தொடர்ந்தது!

தமயந்தி ஓரிரு வார்த்தைகளுடனேயே நிறுத்திக்கொள்ள, சுகந்தன் தன்னிலை விளக்கமாகச் சிலது சொன்னான்.

“முதல் நாள் நீ யோசிப்பது போலச் சற்றுத் தயங்கிவிட்டுப் பதில் சொன்னாயல்லவா? அப்போதே, அதை நான் இன்னொரு விதமாகவும் நினைத்தேன், தமயந்தி. திருமணத்துக்கு முன்னர் நடந்ததைப் பற்றி, இப்போது பேச வேண்டிய அவசியம் இல்லை என்று எண்ணிச் சொல்லவில்லை என்பதாக நினைத்தேன்! என் முதல் காதல் பற்றிக் கூறிய போதுகூட, நீ “ கஞ்சப் பிசுநாரி “ என்று கேலி செய்தாயே தவிரப் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லையே! உன் விஷயத்தையும் அப்படியே . .அதாவது, முக்கியம் இல்லாதது என்று சொல்லவில்லையோ என்று கூட எண்ணியிருக்கிறேன்! முக்கியம் இல்லாததுதான் என்று ஒதுக்கவும் செய்தேன்! ஆனால், ரத்தினவேல் செத்துவிட்டான் எனவும்தான், எல்லாம் தப்பாகத் தோன்றிவிட்டது! “ என்றான் ஒரு தரம்!

“ நீ பொறுத்துப் போனதைக்கூடத் தவறாகவே நினைத்தேன், தமா! இந்த வசதியான வாழ்க்கைக்குக் குந்தகம் வந்துவிடக் கூடாது என்று என் அவமதிப்புகளைச் சகித்ததாக எண்ணிக்கொண்டேன்! . .”

“என்னது? இந்த வசதிகளுக்காகவா? என் அப்பா வீட்டில்கூட, ஏசி , கார் எல்லாம் இருக்கிறது, தெரியுமா?” என்றாள் தமயந்தி வெடுக்கென.

அவள் அத்தனை வார்த்தைகள் பேசியதையே, நிம்மதியாக உணர்ந்து, “வீட்டில் ஒரே ஓர் அறையில் ஏசி, ஒரு மாருதிக் கார் . . அப்படித்தானே,

தமா? பெருமையடிப்பதாகக் கருதாதே! ஆனால், இந்த அளவுக்குக் கிடையாதல்லவா? அதனால் அப்படி நினைத்துக் கொண்டேன்! கொஞ்சம் கொஞ்சமாக த் துன்புறுத்தலை நான் அதிகப் படுத்தியதும் அதனால்தான்! அந்தத் தப்புக்காகத்தான், இப்படி ஓங்கி ஒன்று வாங்கிக் கொண்டேன் போல!" என்று வருத்தத்துடன் கூறினான் சுகந்தன்!

உதட்டைக் கடித்துக்கொண்டு பேசாதிருந்தாள் தமயந்தி!

உண்மையாகவே வருத்தப் படுகிறான்! பாவமாகத்தான் தோன்றுகிறது! ஆனால்,

அவளை நம்பாமல், மற்றவர் பேச்சை நம்பியது தப்புதானே? இதைப்போல இன்னொரு பிரச்சினை வந்தால், அப்போதும், இவன் இப்படியே நடக்க மாட்டான் என்று என்ன நிச்சயம்?

இன்னொரு தடவைக்குப் போவானேன்? இந்த ஒருமுறை அவன் நடந்து கொண்டதற்கே மன்னிப்புக் கிடையாதே! கணவன் மனைவி என்கிற பந்தத்தையே கேவலப்படுத்திவிட்டானே! இதையாவது, மன்னிப்பதாவது? ஒரு நாளுமில்லை!

தமயந்தியின் கண்கள் கனன்றுகொண்டேதான் இருந்தன.

ஆனால், இதற்கு அப்புறம் என்ன என்று யோசிக்க, அவளுக்குப் பயமாக இருந்தது!

இப்படியே வாழ்வதும் முடியாத காரியம்! அதே சமயம், இதை மறந்து, சுகந்தனோடு இணைந்து வாழ்வதும் முடியாது போலத்தான் அப்போது அவளுக்குத் தோன்றியது!

சுகந்தனை ஒரேயடியாகப் பிரிந்து போய்த் தனியாக வாழ்வது பற்றியோ, எண்ணவே முடியாமல் நெஞ்சு படபடத்தது!

அப்படியே பிரிவது என்றாலும், பெற்றவர்கள், மாமனால், மாமியார் . . .இவர்களிடம் என்ன சொல்வது? சொன்னாலும் ஒப்புவார்களா? அதுதான் மன்னிப்புக் கேட்கிறாரே, விட்டுவிடு என்றுதான் சொல்லுவார்கள்!

ஆனால், நம்பிக்கை இல்லாதவனோடு எப்படி வாழ்வது?

இதற்கு முடிவுதான் என்ன?

காலம் இந்தப் புண்ணை ஆற்றக் கூடுமோ என்று அவள் யோசித்தபோது, பழைய உணர்வுகளைத் தட்டி எழுப்புவதாக எண்ணிக்கொண்டு, சுகந்தன் ஒரு தப்பு செய்தான்!

அன்றையச் சமையலில் சமையல்காரம்மா சேப்பங்கிழங்கு வறுவல்

செய்து வைத்திருந்தாள். சுகந்தனுக்குப் பிடிக்கும் என்பதால், அவ்வப்போது அந்தப் பதார்த்தம் செய்வதுதான்! அந்த வழக்கம்போல, அன்றும் செய்யப்பட்டிருந்தது!

எல்லா வகையிலும் மனைவிக்காக ஏங்கிக் கொண்டிருந்த சுகந்தனுக்கு, இது ஒரு சிறந்த வாய்ப்பாகத் தோன்றிவிட, நன்கு முறுமுறுப்பாக வறுக்கப் பட்டிருந்த இரண்டு வறுவல் துண்டுகளைத் தன் தட்டிலிருந்து எடுத்து, அவள் தட்டில் வைத்தாள்!

ஆங்கிலத்தில் ஆலிவ் பிராஞ்ச் என்பார்கள்! சமாதான நடவடிக்கை!

இதைத் தமயந்தி அப்போதே ஏற்காவிட்டாலும், மெல்ல மெல்ல அவள் மனதை இளக்கும் என்று சுகந்தன் எண்ணினான்.

ஆனால், அன்றைய நினைவில், தமயந்தி கொதித்துவிட்டாள்.

சுகந்தன் காரக் குழம்புசாதம் பிசைந்தது கண்டு மகிழ்ந்ததும், தருவான் தருவான் என்று ஆவலாகக் காத்திருந்ததும், அவன் வேண்டாததோடு சேர்த்து, அதன் மீதே கையைக் கழுவியதும், அப்படியே படமாக மனதில் ஓடியது!

அதற்குப் பிறகும், அவளாகப் போய் வெட்கத்தை விட்டுக் கேட்ட போதும், அந்தச் செயலின் உள்ளர்த்தமே நினைவில்லாதது போல நடித்து, அவளை அவமதித்தானே!

செய்வதை எல்லாம் செய்துவிட்டு, இப்போது நாய்க்கு எலும்புத் துண்டு போடுவது போல, இந்த ஒரு சின்னச் செய்கையில் எல்லாவற்றையும் மறந்து, இவன் காலடியில் அவள் விழுந்துவிட வேண்டுமா?

பொங்கிய கோபத்தில், எழுந்து, தட்டிலேயே கையைக் கழுவிவிட்டுப் போய்விட்டாள் அவள்.

வெகு நேரம், சுகந்தன் அசையவே இல்லை!

வளம் படைத்த பெற்றோருக்கு ஒரே மகன் அவன். நினைவு தெரிந்ததில் இருந்து,

யாரும் அவனை அவமதித்து, அவனுக்குப் பழக்கம் இல்லை! ஓர் அறை விட்டால், எட்டுக் குட்டிக்கரணம் போடுவாள்! இவள் என்னவெல்லாம் செய்கிறாள்!

ஆத்திரத்துடன் எண்ணமிட்டபோதே, செல்ல நாய்க்குட்டி போலத் தமயந்தி அவனைச் சுற்றிச் சுற்றி வந்து விளையாடியதும் நினைவு

வந்தது!

என்ன ஆனந்தமான வாழ்வு!

எல்லாவற்றையும் வீணாக்கிக் கொண்டது அவனேதானே!

ஆனால், பெற்ற தகப்பன் சொந்தப் பிள்ளை செத்ததாகச் சொல்லுவான் என்று எப்படி எதிர்பார்ப்பது? கடைசி நேரத்தில் சொன்னதாகத் தெரிவித்த வார்த்தைகளைத்தான் எப்படிச் சந்தேகிப்பது?

இதைத் தமயந்திக்குப் புரிய வைக்க, அவனால் முடியவில்லையே!

ரத்தினவேல்! பாவி! அவனது திட்டம் ஜெயிப்பதா?

யோசனையோடு, மெல்ல எழுந்து தமயந்தியிடம் சென்றான்.

கன்றிய முகத்துடன் கண்களை இறுக மூடிப் பெரிய மூச்சுகளை எடுத்துவிட்டபடி நாணாய் நின்றுகொண்டிருந்தவளைக் காணவும், கழிவிரக்கம் மேலோங்கியது!

அருகில் சென்று, “அன்றைக்கு உனக்கு எப்படி வலித்திருக்கும் என்று புரிகிறது, கண்ணம்மா! அந்த வலியை உனக்கு ஏற்படுத்தியதற்காக எவ்வளவு வருந்துகிறேன், தெரியுமா? “ என்று, அவளை மெல்ல அணைத்து, முதுகை வருடி விட்டான்.

தமயந்தியின் இறுக்கம் தளரவில்லை! ஆனால், விலகவும் இல்லை. அவள் முகம் பதிந்த இடத்தில் ஈரத்தை உணர்ந்ததும் தன்னை மறந்து அவளை இறுக அணைத்தான்.

“தமயந்தி, கண்மணி, வேண்டாமடா! விட்டுவிடு! நான் செய்த தப்புக்கு எனக்கு என்ன தண்டனை வேண்டுமானாலும் கொடும்மா! ஆனால், உன்னைப் போட்டு வருத்திக் கொள்ளாதே! அவன் சாகிறபோது சொன்னான் என்றதும் நம்பத் தோன்றிவிட்டது! மற்றபடி, உலகமே சொன்னாலும், உன்னை நான் தப்பாக நினைப்பேனா? . . .அழாதே, கண்ணம்மா! . .”

கணவனின் அணைப்பில் நெகிழத் தொடங்கியிருந்த தமயந்திக்கு, முதலில் அவனது ஆதரவான குரல் மட்டுமே கேட்டது!

பிறகு, அவனது வார்த்தைகள் மெல்ல ஊடுருவவும், மீண்டும் மனம் சலித்துப் போயிற்று!

மீண்டும், சுகந்தன் அதையேதானே சொல்லுகிறான்!

கடைசி நேரத்தில் சொன்னதால் நம்பிவிட்டானாம்!

செத்தானோ, பிழைத்தானோ, அவன் என்னவாகப் போனாலும்,

அவளைப் பற்றித் தவறாக ஒருவர் சொன்னால், அதை இவன் எப்படி நம்பலாம்?

கண்ட குப்பையையும் நம்பிக் கண்டபடி நடந்துகொண்டுவிட்டு, அதைப் பொருட்படுத்தாமல் விட்டு விடு என்றால், எப்படி விட முடியும்?

ஆனால், விட்டுவிடலாமோ?

பாவம்! அவனும் வருத்தப் படுகிறான்! கன்னத்தில், அவன் கண்ணீரும் படுகிறது! திருமணம் ஆனதில் இருந்து, அவன் கண் கலங்கி, அவள் பார்த்ததே இல்லை! இப்போது அழுகிறான் என்றால், அதையும் அவளால் தாங்க முடியவில்லை!

அருகில் கிடந்த துப்பட்டாவைக் கை நீட்டி எடுத்து, சுகந்தனின் கண்களைத் துடைத்து விட்டாள்!

அவன் பதிலுக்கு, அவள் முகத்தைத் துடைத்தான்!

திடுமென இரவில் விழித்துக்கொண்ட தமயந்திக்குத் தாகத்தில் நா வறட்டியது!

எழுந்து தண்ணீர் குடிக்கலாம் என்று பார்த்தால், அசையக்கூட முடியவில்லை! அப்படி, அவளை இறுக அணைத்திருந்தான் அவளுடைய கணவன்!

பாதி இரவில் அவள் எங்கேயும் போய் விடுவாளோ என்று அஞ்சியவனைப் போல , அவளைக் கை வளையத்துக்குள் சிறை வைத்திருந்தான்!

அவனை விட்டு அவள் போவாளாக்கும்?

புன்னகையோடு, அவனது கரத்தை விலக்க முயற்சித்தபோது, சட்டென நினைவு வந்தது!

இருவரின் கண்ணீரும், ஒருவருக்கொருவர் துடைத்து விட்டதும் . . பிறகு . . .

ஆனால், இது தீர்வல்லவே!

ஹால் சோஃபாவில் தனியே முட்டைக் கட்டிக்கொண்டு, என்ன என்ன என்று நேஞ்சுக்குள் பிசைய உட்கார்ந்திருந்தது எல்லாம், சொடக்குப் போட்டாற்போல, மனதை விட்டு மறந்துவிடுமா?

அதன் அடிப்படையான அவனது நம்பிக்கையின்மை எப்படி மறக்கும்?

அல்லது, அதுகூட, முக்கியம் இல்லைதானா?

அதெப்படி?

கணவன் மனைவிக்கிடையே உள்ள பரஸ்பர நம்பிக்கை முக்கியம் இல்லை என்றால், அது எப்படிச் சரியாகும்?

என்னவோ தப்பு செய்த மாதிரித் தோன்றியது தமயந்திக்கு!

தூக்கத்திலேயே தோளை வருடிய விரல்களை ஒதுக்கி, ஒன்றும் தெளிவாக யோசிக்கவும் முடியவில்லை!

இல்லை. இது சரியில்லை! இவன் அருகாமையில் இருந்துகொண்டு, யோசிப்பது கடினம்!

தமயந்தியின் அசைவில் விழித்துக் கவனித்துவிட்டு, "என்னடா?" என்று வினவினான் சுகந்தன்.

"தாகம்." என்று எழுந்தாள் அவள்.

தண்ணீரைக் குடித்துவிட்டு, ஹால் சோஃபாவிலேயே உட்கார்ந்தாள்.

அவனும் எழுந்து வந்து அமர்ந்தான். "என்ன விஷயம், தமயந்தி?"

சிறு மௌனத்தின் பின், தன் மனதை அவள் சொன்னாள். "எனக்கு யோசிக்க வேண்டும், சுகன்! என்னவோ, எதையும் மனதார ஒத்துக் கொள்ள முடியவில்லை! இங்கே . . இங்கே இருந்து யோசிக்க முடியவில்லை! அதனால் . . "

"ஓ!" என்றான் அவன் சிறு ஏமாற்றத்துடன்.

சிறு அமைதியின் பின் அவனாகவே, "உன் அப்பாவிடம் கிராமத்துக்குப் போகிறாயா? கோவில் விழா, தம்பி தங்கை என்று பொழுது போகும்!"

"அங்கே யோசிக்க முடியாது! . . .அம்மா கேட்டால் மறைப்பதும் கடினம். அதனால் நளினி வீட்டுக்குப் போகலாம் என்று நினைக்கிறேன்! அவளுடைய பெற்றோரும், நல்ல விதம். நளினும் தூண்டித் துருவ மாட்டாள்! கொடைக்கானலில் அவர்களுக்கு எஸ்டேட் இருக்கிறது. அவளுடைய அப்பாவுக்கு ஓய்வு வேண்டும் என்று, விடுமுறைக் காலத்தில், அங்கேதான் இருப்பார்கள்! அமைதியான இடம்! "

"போவதாக முடிவு செய்துவிட்டாய்.?"

"யோசிக்க வேண்டும், சுகன்! தூசு தும்புகளைத் தரை விரிப்புக்கு அடியில் தள்ளி மறைத்து வாழ என்னால் முடியாது! எனக்குத் தெளிவு

வேண்டும்!”

மீண்டும் ஒரு சிறு அமைதி நிலவியது!

பிறகு, “உன் விருப்பம், தமா. யோசிக்க வேண்டாம் என்று நானும் சொல்லவில்லை! நன்றாக யோசி. ஆனால், யோசிக்கும்போது, என்னைப் புரிந்து கொள்ள முயற்சி செய். எப்படியும் திரும்பி வந்துவிடவேண்டும் என்கிற அடிப்படையில் யோசி! ஏனென்றால், நீ இல்லாமல், என்னால் வாழ முடியாது! இது உண்மை!” என்றான் சுகந்தன்.

அவளைத் தொட்டு, அணைத்து, அந்த விதமாக அவளைத் தன் வசப் படுத்த அவன் முயலாதது, தமயந்திக்கு ஆறுதலாக இருந்தது!

அதுவும் முன்னிரவில், அவனிடம் நெகிழ்ந்த பிறகும்!

நல்லவன்தான்! ஆனால் அவளிடம் நம்பிக்கை இருந்திருக்க வேண்டாமா? அதைவிட, ஒரு பொறுக்கியின் பேச்சைப் பெரிதாக நினைத்தானே! அந்த விஷயத்தில், புதிதாகப் புரிந்துகொள்ள ஒன்றுமே இல்லையே!

ஒரு பெரு மூச்சுடன் “முயற்சிக்கிறேன்.” என்றாள் மெதுவாக.

# அத்தியாயம் -15

நளினிக்குத் தமயந்தியைக் கண்டதும் ஒரே சந்தோஷம்!

காரோடு அவளே ரயில் நிலையத்துக்கு வந்திருந்தாள்.

ரயிலில்  இருந்து இறங்கியதும், அவசரமாக ரயில் பெட்டிக்குள் எட்டிப் பார்த்தாள்.

“என்ன நளினி?”

“ஒரு சந்தேகம்தான்! “ என்று சிரித்தாள் நளினி. “மிஸ்டர் சுகந்தன் திடீரென்று தலையை நீட்டி, வாடி கண்மணி என்று உன்னைத் திருப்பிக் கூட்டிப் போய்விடுவாரோ என்ற பயம்.!”

விடிகாலைச் சிலுசிலுப்பில், கைகளை ஒன்றோடொன்று தேய்த்தபடி , சுற்றிலும் போர்த்திருந்த பனிப் படலத்தைப் பார்த்தாள் தமயந்தி! “மாட்டார். “ என்றாள் சுருக்கமாக.

ஒரு பார்வையின் பின், “சரி சரி வா, வீட்டுக்குப் போகலாம்! இப்போது கிளம்பினாலே, எஸ்டேட் போய்ச்சேர ஒன்பது மணி தாண்டிவிடும்! அப்புறம் அம்மா பயந்துவிடுவார்கள்! வா! இவ்வளவுதானே, சாமான் பெட்டிகள்?” என்று கலகலத்தபடியே ஒரு பையை நளினி தூக்கிக்கொள்ள, அடுத்ததோடு தமயந்தி அவளைப் பின்தொடர்ந்தாள்.

நகரின் தூசு கலவாத சுத்தமான மலைக் காற்று முகத்தில் மோதி, தமயந்திக்கு மிகவும் தேவைப்பட்ட புத்துணர்ச்சியை ஊட்டியது!

“தன் “னிலிருந்து மீண்டு, மற்ற தோழியரைப் பற்றிப் பேச்சு நடந்தது!

வீட்டை அடைந்தபோது, நளினியுடைய பெற்றோர் வாசல் வராண்டாவிலேயே காத்திருந்தனர்.

“சொல்லவில்லை?” என்று தமயந்தியிடம் கண்ணடித்துவிட்டு, “உங்கள் காரைப் பத்திரமாகக் கொண்டுவந்து சேர்த்துவிட்டேன், அப்பா! எங்கே பள்ளத்தில் உருண்டு கிடக்கிறதோ, ரிப்பேர்ச் செலவு என்ன ஆகுமோ என்று அனாவசியமாகக் கவலைப் படாதீர்கள்! “ என்று சிரித்தாள் நளினி.

தொடர்ந்து, “தமாவுடைய கணவர் ஏதோ பிசினஸ் சுற்றுப் பயணம் போகிறாராம்! அவரை நினைத்து ஏங்கிக்கொண்டு அங்கே தனியே

கிடக்க வேண்டாம் என்று, இங்கே அனுப்பியிருக்கிறார்! இனிமேல், நாங்கள் இருவரும் மலைத் தோட்டம் எங்கும் சுற்றப் போகிறோம். எங்களைத் தேடவே, தேடாதீர்கள்!" என்று முடித்தாள்.

"அப்ப்பா! இனியாவது, கொஞ்சம் மூச்சை எடுத்துக்கொண்டு பேசு! அந்த இடைவெளியில், நானும் இரண்டு வார்த்தை சொல்லி விடுகிறேன். தமயந்தி, வாம்மா! உன் கணவர் வரும்வரை, உன் வீடு போல நினைத்துக் கொண்டு இரு! ஆனால், திரும்பிப்  போவதற்குள், இந்தப் பெண்ணுக்குக் கொஞ்சம் நல்லபடியாகப் பேசக் கற்றுக் கொடுத்துவிடு!  சொல்வதைப் பாரேன், கார் என்னமும் ஆகிவிடுமோ என்றா, எங்களுக்குக் கவலை? டிரைவருக்குப் போக்குக் காட்டிவிட்டுக் காரை எடுத்துக்கொண்டு கிளம்பிவிட்டாள்! மலைப் பாதை! பழகியவர்களுக்கே கஷ்டம்! இவள் எப்படி ஓட்டுகிறாளோ என்று, எங்களுக்கு எப்படி இருக்கும்?" என்று, மகளைக் குறை கூறினாள் நளினியுடைய தாயார் கோதை.

"நன்றாகத்தான் ஓட்டினாள் ஆன்ட்டி!" என்றாள் தமயந்தி.

" அப்படிச் சொல்லம்மா! ஒருத்தி வந்ததும் வராததுமாக, பிள்ளை மேல் குற்றப் பத்திரிகை படிக்கிறாயே! நீ கார்ச்சாவியை ஒளித்து வைத்திருந்தால், அவளால் காரை எடுக்க முடியுமா? சொல்லு!" என்றார், நளினியுடைய தந்தை ஞானலிங்கம்!

"பாரம்மா! நான் குற்றப் பத்திரிகை படித்தேனாம். அப்படிச் சொல்லி, அவளுக்கு வக்காலத்து வாங்கி, வக்கீல் என்று காட்டிக் கொள்கிறார் பார்! என்ன செய்வது? மற்றபடி, இவர் வக்கீல் என்று, யாருக்கு நினைவிருக்கிறது, பாவம்! " என்று கணவரின் காலைக் கோதை வார, எல்லோருக்கும் சிரிப்பு வந்தது!

ஞானலிங்கம் அந்தப் பகுதியில் புகழ் பெற்ற வக்கீல் என்பதால், முகம் சுளிக்காமல், அவரும் சேர்ந்து சிரிக்க, அந்தச் சூழ்நிலையில் தமயந்தியின் மனமும் லேசாயிற்று!

கல்லூரி நாட்களைப் போல, இரு தோழியரும் ஜீன்ஸ் போட்டுக்கொண்டு சுற்றினர்.

வரிசை வரிசையாகப் பழ மரங்கள்., பழம் பறிக்க வரும் கூலியாட்கள்., அவர்களது வித்தியாசமான ஆடை, அணிமணிகள் . . . எல்லாமே, தமயந்தியின் மனதை வேறுபுறம் திருப்பின.

ஆயினும் உள் அந்தரங்கத்தில் சுகந்தன்தான் கோலோச்சினான்!

ஒழுங்காகச் சாப்பிட்டிருப்பானா? தூங்கினானா என்று, அவனைப்

பற்றியே எண்ணங்கள்!

கடைசியாக, இன்னொருவன் சொல்லுக்காக, சுகந்தன் எப்படி அவளை நம்பாமல் இருக்கலாம் என்ற கேள்வியோடு முடியும்!

எல்லாவற்றையும் மனதிற்குள் மறைத்து வைத்திருக்கிறோம் என்று, அவள் நினைத்திருக்க, "இத்தனை முறை புரை ஏறினால், மனிதர் தாங்க மாட்டாரடி. பேசாமல், அங்கேயே போய், அவர் சிண்டைப் பிடித்து உலுக்குவதுதானே? அல்லது, பிரச்சினை என்னவென்று சொல்லு! நானே போய், அவருக்கு ஒரு குட்டு வைத்து இழுத்துக்கொண்டு வருகிறேன்! செய்யட்டுமா? " என்று நளினி ஒரு நாள் அவளிடம் நேரே கேட்டுவிட்டாள்.

கணவன் மனைவிக்கிடையில் ஏதோ ஊடல் என்று நனிளி நினைப்பது புரிந்தது!

ஆனால், இது அப்படியில்லையே!

தமயந்தி உதட்டைக் கடித்துக்கொண்டு நிற்கவும், "பிரச்சினை என்ன என்று கேட்கவில்லைப்பா! ஆனால், நீ எதையெதையோ நினைத்துக்கொண்டு பாதையில் கவனம் இல்லாமல் நடக்கிறாய்! இங்கெல்லாம் பாம்புகள் உண்டு! நாம் ஒதுங்கிப் போனால், அதுவும் ஒன்றும் பண்ணாது! ஆனால், எங்கோ கவனமாய், நீ அதைப் போய் மிதித்து வைத்தால்? நீ சென்னையில் இருக்கும் புருஷனை நினைத்துக்கொண்டு தெரியாமல் மிதித்தாய் என்று, அதற்குத் தெரியுமா? பட்டென்று போட்டுவிடும்! அப்புறம், சிவ லோகம்தான்! அன்றைக்கு, வெறும் பதினைந்து சென்டிமீட்டர் தூரத்தில் தப்பினாய்! அப்படியே நடுங்கிப் போய்விட்டேன், போ! நீயானால், பார்க்கவே இல்லை!" என்று நளினி கூறியபோது, மற்றவளுக்கும் உள்ளே நடுங்கியது!

அப்படி அந்தப் பாம்பு கடித்திருந்தால், சுகந்தனைப் பாராமலே அல்லவா, செத்திருப்பாள்!

வெறும் பிரிவுக்கே, " நீ இல்லாமல் வாழ முடியாது. " என்றானே! ஒரேயடியாகப் போய்விட்டால், என்ன ஆவான்? தாங்கவே மாட்டானே, பாவம்!

அப்படியானால், திரும்பிப் போய்விடலாமா?

ஆனால், இந்த நம்பிக்கைப் பிரச்சினை?

அதை மறந்து, அவனோடு எப்படி வாழ்வது?

கல்யாணம் ஆனால்தான் பைத்தியம் தெளியும்., பைத்தியம்

தெளிந்தால்தான் கல்யாணம் நடக்கும் என்கிற மாதிரி நிலை!

சுகந்தனை விட்டுப் பிரியவும் இயலாது! ஆனால், அவனது நம்பிக்கையின்மையை மறந்து, அவனோடு வாழவும் முடியாது!

இதற்குத் தீர்வு ஏது?

தமயந்தி பெருமூச்சு விடவும், அவள் கையைப் பற்றித் தட்டி, " இனிமேல் எச்சரிக்கையோடு இருந்து கொள். பயப்படாதே! " என்றாள் சினேகிதி.

தனிமையில் எவ்வளவு யோசித்தும், தமயந்தியின் பிரச்சினை அப்படியே இருந்தது! தன்னால், இதற்குத் தீர்வு காண முடியும் என்ற நம்பிக்கை, தமயந்திக்கு மறைந்துகொண்டு இருந்தது!

வீட்டுப் பெரியவர்கள், பிள்ளைகள் நல்லபடியாக வாழட்டும் என்று மட்டுமே எண்ணிப் பேசுவார்கள்! விருப்பு, வெறுப்பற்றுக் கருத்துக் கூறும்படி, நளினியுடைய தந்தையிடம் கேட்கலாமா என்று ஓர் எண்ணம் தமயந்திக்குத் தோன்றியது!

அதையே யோசித்தபடி, வீட்டைச் சுற்றிலும் வண்ண வண்ணமாய்ப் பூத்துக் குலுங்கிய தோட்டத்திலேயே சுற்றிக் கொண்டிருந்துவிட்டு தமயந்தி வீட்டுக்குள் வந்தபோது, ஞானலிங்கத்தின் குரல் உரத்துக் கேட்டது.

"அது மரண வாக்குமூலம்ப்பா! சாகிற நேரத்தில் சொன்னது! அதை எப்படி உடைக்க முடியும்? " என்று, அவரது ஓய்விடத்திலும் துரத்திக்கொண்டு வந்து நின்ற ஒரு கட்சிக்காரனிடம் கத்திக்கொண்டிருந்தார் ஞானலிங்கம்!

" சாகிற நேரத்தில் சொன்னது! "

இதையேதானே, சுகந்தனும் சொன்னான்!

திருவிளையாடலில், பெண்களின் கூந்தலின் நறுமணம் பற்றிய பாண்டியனின் ஐயம் தீர்ப்பதற்காக, சிவ பெருமான் பாட்டெழுதிய மாதிரி, என்னவோ, தனக்காகவே, ஞானலிங்கம் இந்த வார்த்தைகளைப் பயன்படுத்தியது போலத் தோன்றிவிட, தமயந்தி நின்று கவனித்தாள்.

# அத்தியாயம் -16

வந்தவரின் பிரச்சினையும் பெரிது போலும்!

ஞானலிங்கத்தின் அதட்டலுக்குப் பயந்து ஓடிவிடாமல், தன் பிரச்சினையை எடுத்துச் சொன்னார்.

“அப்படியில்லை, சார். அந்த நேரத்திலே, ஆத்திரத்திலே ஏதோ நடந்து போயிற்று! இப்போ, ஜெயில் அது இது என்றால், பச்சைப் பிள்ளைகள் கதி என்ன ஆகும்  என்று, குடும்பத்தில் எல்லோரும் ரொம்பக் கவலைப் படுகிறார்கள்! எப்படியோ, சார் வாதாடினால், ஜெயித்து விடலாம் என்ற நம்பிக்கை! அதனால்தான் . . “

“ஆனால், வாதாடவே வழியில்லையே! செத்தவன்,  சாகிற தருணத்திலே சொன்னது! அதனாலே, எதிர்க் கட்சியிடம் இருப்பது, மரண வாக்குமூலம்! அதைப் பொய் என்று எந்த நீதிபதியும் ஒத்துக்கொள்ள மாட்டார்! இந்தக் கோர்ட் மட்டுமில்லை! எந்தக் கோர்ட்டிலும், அதுதான் நடக்கும்! உங்களுக்குக் காரியம் ஆக வேண்டுமானால், கோர்ட்டுக்கு வெளியே எதையாவது கொடுத்து, சமாதானம் செய்யப் பாரும்! அதற்கு வேண்டுமானால், நான் உதவுகிறேன்! மற்றபடி, வழக்கு கோர்ட்டுக்குப் போய்விட்டால், உம்முடைய தம்பி, கம்பி எண்ணுவது நிச்சயம்!” என்று, மிக உறுதியாகக் கூறினார் ஞானலிங்கம்.

“என்ன செய்வது? நீங்கள் சொல்லுகிறதுபோலப் பார்க்க வேண்டியதுதான்! அவன் மகள் திருமணத்துக்காகச் சேர்த்து வைத்த பணம்! இப்போது, அவனே மாட்டிக் கொண்டால் என்ன ஆகும்? ஏதோ, கொஞ்சம் குறைத்துப் பேசி முடியுங்கள், சார்! நான் போய்ப் பணத்துக்கு ஏற்பாடு பண்ணச் சொல்லுகிறேன்!” என்றுவிட்டுக் கிளம்பினார், வக்கீலைப் பார்க்க வந்தவர்!

சாகிற தருணத்திலே சொன்னால், அதைப் பொய் என்று  கோர்ட்டில் ஏற்க மாட்டார்களா?

கட்சிக்காரரை வழியனுப்ப வாயிலுக்கு வந்த ஞானலிங்கம, அங்கே தமயந்தி நிற்பதைப் பார்த்ததும், “என்னம்மா? ஏன் உள்ளே வராமல் இங்கேயே நிற்கிறாய்?” என்று வினவினார்.

“சும்மாதான் அங்கிள்! உள்ளே ஏதோ முக்கியமாகப் பேசிக்கொண்டிருந்த மாதிரித் தோன்றியது! அதனால்தான் . . “

“அதற்கென்னம்மா, நீ, சும்மா உள்ளே வந்திருக்க வேண்டியதுதானே! “ என்று அவளிடம் கூறியவர், கட்சிக்காரரிடம் திரும்பி, “எதிராளி எந்த

வக்கீலிடம் போகிறான் என்று கேட்டுச் சொல்லும். அந்த வக்கீலிடமே பேசி, ஏற்பாடு பண்ணலாம்! போய் வாரும்!” என்று  வழியனுப்பி வைத்தார்.

தமயந்தி அப்போதும் நிற்பதைப் பார்த்ததும், “ என்னம்மா, ஏதாவது கேட்க வேண்டுமா? வா, உட்கார்! “ என்று அழைத்தார்.

“முக்கியமாக ஒன்றும் இல்லை  . . “ என்ற போதும், அவர் காட்டிய கூடை நாற்காலியில் அமர்ந்துகொண்டு, “நீங்கள், உங்கள் கட்சிக்காரரிடம் பேசிக் கொண்டிருந்தது, என் காதிலும் விழுந்தது, அங்கிள்!  எஎன்னவோ, சாகிற தறுவாயில் சொன்னதை உடைக்க முடியாது. , அதைத்தான் கோர்ட் நம்பும் என்று சொன்னீர்களே, அதெப்படி அங்கிள்? அதை, என்னால் ஒப்ப முடியவில்லையே! அந்த நேரத்தில் மட்டும் யாரும் பொய் சொல்ல மாட்டார்களா? யாருக்காவது கெடுதல் செய்ய, யாரையாவது பழி வாங்க . . இப்படி எதற்காவது பொய் சொல்லாம் இல்லையா?” என்று கேட்டாள்.

“அம்மா, சாகும் தறுவாய் என்பது, கடவுள் சன்னிதானத்தில் நிற்பது போன்றது! இனி வாழப் போவது இல்லை என்று நிச்சயமாகத் தெரிகிறபோது, அடுத்தவருக்குக் கெடுதல் செய்வது போன்ற சின்னத்தனமான எண்ணங்கள் தோன்றுவது இல்லை! செத்த பிறகு என்ன ஆவோம் என்று யாருக்கும் தெரியாது! நரகமோ, அடுத்த பிறவியில் கஷ்டமோ  என்றெல்லாம் பயம் வரலாம்! மரண பயம்! உயிர் போகிறபோது, உடம்பும் படாத பாடு பட்டுக்கொண்டிருக்கும்! அதை மீறிக் கெட்ட எண்ணம் வராது! அப்படி வந்து, இதுவரை கண்டது இல்லை., இனிமேல் காணப் போவதும் இல்லை என்பதே கணிப்பு!” என்றார் ஞானலிங்கம் விளக்கமாக!

தமயந்திக்கு, இன்னும் தெளிவு தேவைப்பட்டது!  எனவே, “அப்படியானால், சாகப் போகிறவர், பொய்யே சொல்ல மாட்டார் என்கிறீர்களா, அங்கிள்?” என்று, புரியாதவள் போல, மேலும் கேட்டாள்.

“ஒரேயடியாக, அப்படிச் சொல்லிவிட முடியாது! யாரையேனும் காப்பாற்றுகிற வேகம் வரலாம்! அந்த வேகத்தில் சொல்லலாம். ஆனால், அது போன்ற பொய்களை அதிகம் சொல்லுகிறவர்கள் பெண்கள்!”

“வாட்?! என்ன அங்கிள், இப்படிச் சொல்லுகிறீர்கள்? பெண்களுக்கு மட்டும், பொய் சொல்லுவது பாவம் என்று தெரியாதா? அடுத்த பிறவிப் பயம்தான் இராதா?”

“இருக்கும்! ஆனால், இப்படிக் காப்பாற்றுவது, அவரவர் கணவனையாகத்தான் இருக்கும்!  கணவனுக்காகத்தான் என்ன

செய்தாலும் புண்ணியம்தானே! அதனால், என்னென்னவோ சக்திகள் கிடைக்குமே! சூரியனை உதிக்க விடாமல் நிறுத்தலாம்., மதுரையை எரிக்கலாம்! ஒருத்தி கணவனைக் கும்பிட்டுக் கொண்டிருந்தால் போதும்., , அவள் "பெய் " என்று சொன்னால், மழையே பெய்யும் என்று, நம் திருவள்ளுவரே சொல்லியிருக்கிறாரே! அப்புறம் அவனுக்காகப் பொய் சொல்லுவது என்ன பெரிய விஷயம்?" என்றார் அவர் ரொம்பவும் நக்கலாக.

அவரது குரலில் இழையோடிய ஆத்திரத்தை உணர்ந்து, அவள் வியப்புடன் நோக்க, அவர் தொடர்ந்தார்.

" அவன் அடித்த அடியில், அவளது உயிரே போய்க் கொண்டிருக்கும்! ஆனால், அம்மணி, கீழே விழுந்து அடி பட்டதாகச் சொல்லிவிட்டுச் செத்தே போவாள்! கற்புக்கரசி!" என்றார் அவர் குத்தலும் கோபமுமாக!

"அப்புறம் என்ன ஆகும்? அந்தக் கணவன் தப்பித்துவிடுவானா?"

"பின்னே? அம்மையார்தான், வெகு பிரமாதமாய், மரண வாக்குமூலம் கொடுத்து வைத்திருப்பார்களே! அவன், அடுத்த மாதமே இன்னொருத்தியைக் கட்டிக்கொண்டு, அவளோடு சுற்றுவான்! காப்பாற்றிய கற்புக்கரசியின் பெயர்கூட அவனுக்கு நினைவிராது! "

"ரொம்பக் கோபமாகப் பேசுகிறீர்களே, அங்கிள்!"

"பின்னே என்னம்மா? ஏதோ ஒரு காலத்தில், வெளியே போய்ச் சம்பாதிப்பது மிகவும் கடினமாக இருந்த காலத்தில், அவனுக்கு வீடு இதமாக இருக்க வேண்டும் என்று எண்ணி, என்னென்னவோ எழுதி வைத்திருப்பார்கள்! இப்போது, அது பொருந்துமா என்று யோசிக்க வேண்டாம்? இப்போதும், தாலி, புருஷன் " சென்டிமென்டி "ல் பல பெண்கள் எந்த அளவுக்கு மடத்தனம் செய்கிறார்கள் என்று பார்க்கும்போது, எனக்கு ஆத்திரம்தான் வருகிறது! ரொம்பவே!" என்றார் அவர்.

"மடத்தனம்தான்!" என்று ஒத்துக்கொண்டாள் தமயந்தியும்.

கூடவே "ஆனால், மரண வாக்குமூலத்துக்கு இவ்வளவு மதிப்பா என்று, அதுதான் எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது அங்கிள்! மெய்யாகவே, அதை நம்பியேதான் ஆக வேண்டுமா?" என்று, பேச்சுப் போக்கிலேயே, தன் சந்தேகத்தை மேலும் தெளிவாகத் தீர்த்துக்கொள்ள, தமயந்தி முனைந்தாள்!

"நிச்சயம் பெரு மதிப்புத்தான், தமயந்தி! கண்ணுக்கு நேரே பார்த்த சாட்சிகள் நிறைய இருந்து, அதற்கு இந்த வாக்குமூலம் வெகுவாக முரண்

பட்டால் தவிர, மரண வாக்குமூலத்தைத்தான் நம்புவார்கள்!" என்றுரைத்து, தன்னையறியாமலே தமயந்திக்கு உதவினார் வக்கீல்!

ஆக, இதனால்தான், ரத்தினவேலுடைய தந்தை சொன்னதை, சுகந்தன் உண்மை என்று ஏற்றிருக்கிறான்!

மகனது மரண வாக்குமூலம் என்று, அவன் சொன்ன போதுகூட, அதை, அவளுடைய கணவன் உடனே நம்பி விடவில்லை!

மனைவி மேலுள்ள நம்பிக்கையால், அதை ஏற்க மாட்டாமல் குழம்பியிருக்கிறான்., ஆராய்ந்திருக்கிறான்.

கடைசியில், தன்னையறியாமல், அவளே ஓர் ஆதாரத்தை அளித்த பிறகுதான்,

அவன் அதை நம்பியிருக்கிறான்!

அவள் எண்ணியது போல, எவனோ ஒரு பொறுக்கியின் ஏதோ ஒரு பேச்சை ஏற்று, மனைவியின் மீதுள்ள நம்பிக்கையை இழந்துவிடவில்லை! சமூக நீதியை ஒத்து, சட்டப்படியே, பெரிதாக மதிக்கப்படும் மரணவாக்குமூலம் என்பதால்தான், வேறு வழியின்றி, ஒருவாறு அதை ஒப்பியிருக்கிறான்!

யோசிக்கும்போது, தன்னைப் புரிந்துகொள்ளுமாறு கேட்டானே! அது, இதுதான் போலும்! இப்போது புரிந்து போயிற்றே!

"என்னம்மா, இந்த மரணவாக்குமூலப் பிரச்சினை உனக்கு எரிச்சல் மூட்டும் என்று பார்த்தால், நேர் மாறாகச் சிரிக்கிறாயே!" என்று ஞானலிங்கத்தின் குரல் கேட்ட பிறகுதான், அவரோடு பேசிக் கொண்டிருந்ததே, தமயந்திக்கு நினைவு வந்தது!

ஆனால், அவருக்கு என்ன பதில் சொல்லுவாள்!

"அதுவா அங்கிள் . . " என்று எழுந்தவள், "அது ஒன்றுமில்லை அங்கிள்!" என்று புன்னகையோடு உள்ளே ஓடிவிட்டாள்.

மனதை வாட்டிக்கொண்டிருந்த பெரும் வேதனை, அடியோடு மறைந்து போயிற்று!

அதன் தொடர்பான பிரச்சினையும் அடையாளமே இல்லாமல் மறைந்து போயிற்று!

எப்போதடா கணவனிடம் போய்ச் சேர்வோம் என்று மனது துடிக்கத் தொடங்கியது!

நளினியும் அவளுமாகத் தனியே உலாவுகையில், சற்று தூரம்

அழைத்துக் கொண்டு போய், ஓர் இடத்தில் உட்கார வைத்து, அவளிடம் மனம் திறந்து பேசினாள்.

எப்படியும், ரத்தினவேல் உயிருடன் இருப்பது பற்றி, நளினிக்குச் சொல்ல வேண்டும் அல்லவா?

சுருக்கமாகக் கதையை முடித்துவிட்டு, உடனே கிளம்புவது பற்றியும் கூறினாள்!

“அது சரி! இனியும் இந்தத் தோழியின் குரங்கு மூஞ்சியைப் பார்த்துக்கொண்டு இங்கே இருக்க, உனக்குப் பிடிக்குமா? அங்கே உன் நள மகாராஜா கா . .த்துக்கொண்டு இருப்பார்! அவர் மடியில் விழுந்து . . . அப்புறம் . . .அதை நான் சொல்லலாமா?” என்று நளினி கேலி செய்ய, தமயந்தியின் முகம் ரோஜா நிறம் கொண்டது!

“ஏய், சும்மா இருப்பா!” என்றாள் வெட்கத்துடன்!

“ஆமாமாம்! இனிமேல், என் பேச்சு ருசிக்குமா? பேசுகிறவர் பேசினால், மணிக் கணக்காய் . . ஊகூம்! வீண் பேச்சில் காலத்தை வீணாக்குவீர்களா? அதைவிட . .”

என்று நளினி தொடர்ந்து கிண்டலடிக்க, இருவரும் மகிழ்ச்சியோடு பேசியவாறே திரும்பி வந்தனர்.

அன்றையப் பாம்பு அனுபவத்துக்குப் பிறகு, பெரும்பாலும் சாலை வழியே நடப்பது பழக்கமாகி இருந்தது! அவ்வப்போது, வண்டிகள் வரும்போது ஒதுங்கி நின்றுவிட்டு, அவை சென்றதும் மீண்டும் நடையைத் தொடர்வார்கள்.

அப்போதும், ஏதோ கார் வரும் சத்தம் கேட்டு ஒதுங்கி நின்ற போதும், பேச்சு தொடர்ந்தது!

“ஆனால், இந்த ரத்தினவேலை நினைத்தால் ஆச்சரியமாக இருக்கிறது, தமா!

காலைச் சுற்றும் வழலைப் பாம்பு என்றுதானே அவனை நினைப்போம்! அதே ரத்தினவேல் இப்படிச் செய்தார் என்றால், ஆச்சரியமாக இருக்கிறதுப்பா!” என்று நளினி சொல்லிக் கொண்டிருக்கும்போதே, சாலையில் வந்த கார் மெதுவே அவர்கள் அருகே வந்து நின்றது!

“ஏதாவது எஸ்டேட்டுக்கு வழி கேட்பார்கள் . .” என்று நளினி சொல்லிக்கொண்டு இருக்கும்போதே, காரில் இருந்து இறங்கிய மூன்று பேரில், இருவர் சட்டெனப் பெண்கள் இருவரின் வாயைப் பொத்திப் பிடித்துக்கொள்ள, மற்றவன் இருவர் மூக்கிலும் மயக்க மருந்து தெளித்த

துணியை வைத்து மூட, சிறு போராட்டத்தின்பின், இரு பெண்களுமே மயங்கிச் சாய்ந்தனர்!

அதன்பின் காரில் இருந்து இறங்கி, "ரத்தினவேல், இப்படிச் செய்ததே ஆச்சரியமாக இருக்கிறதா? இன்னும் என்னென்ன செய்யப் போகிறேன் என்று தெரிந்தால், உன் மூச்சே நின்று விடுமடி!" என்று ஆங்காரத்துடன் கூறினான் ஒருவன்.

பிறகு, "அந்த ஜீன்ஸ்காரி, வக்கீலுடைய மகள். அவளைக் கொண்டுபோனால், பிரச்சினையாகி விடும்! சாலை ஓரமாகப் போட்டுவிட்டால், யாராவது பார்த்துக் கூட்டிப் போய் வீட்டில் விட்டு விடுவார்கள்! இந்தப் பச்சைச் சுரிதாரைமட்டும் காரில் ஏற்றுங்கள்!" என்று உத்திரவிட்டான்.

அவன் ரத்தினவேல்!

அவனது கட்டளையின்படி நளினி சாலை ஓரத்தில் கிடத்தப் பட்டாள்! தமயந்தியை மட்டும் ஏற்றிக்கொண்டு, அந்தக் கார் பறந்தது!

# அத்தியாயம் -17

சுகந்தனுக்கு அன்று உடல் மிகவும் சோர்வாக இருந்தது!

மனதின் சோர்வு, உடலைப் பாதித்ததோ?

எதைச் செய்யவும் பிடிக்கவில்லை! அதே சமயம் கையில் கிடைத்ததை எல்லாம்

போட்டு உடைக்கலாம் போல ஆத்திரமும் வந்தது.

மெய்யாகவே, அந்த ரத்தினவேலோ, அவனுடைய தந்தை காசியோ, கையில் அகப்பட்டால், இந்த நாகரீகப் போர்வையைக் களைந்துவிட்டு, வந்தது வரட்டும் என்று அவர்களைப் பந்தாடியிருப்பான்!

அந்த அளவு ஆத்திரம்!

தெளிந்த நீரோடை போல, எவ்வளவு இனிமையாகச் சென்றுகொண்டிருந்த வாழ்வு!

இப்போது எல்லாம் வீணாகி விட்டதே!

நாசமாக்கி விட்டார்களே, பாவிகள்!

தமயந்தி, இனிமேல், அவனோடு இணைந்து வாழ்வாளா, மாட்டாளா என்பதே தெரியவில்லையே!

கொடைக்கானலில் அவளுடைய தோழியின் எஸ்டேட்டுக்குச் சென்றதும் எழுதிய கடிதம்தான். யோசித்துக்கொண்டிருப்பதாகவும், தேவைப் படும்போது ,அவளாகவே தொடர்பு கொள்ளுவதாகவும் எழுதியிருந்தாள்!

அதாவது, இடையில் நீ வந்து என்னைத் தொல்லை செய்யாதே என்பதன் நாகரீகமான வாசகம்! அந்த அளவுக்கேனும் மரியாதை மிச்சம் இருக்கிறதே என்று, மகிழ்ந்துகொள்ள வேண்டியதுதான்!

ஏனெனில், உயிர் விடுகிற நேரத்துப் பேச்சு என்பதைத்தான் தமயந்தி ஒத்துக் கொள்வதாகவே இல்லையே!

அதற்கேற்றாற்போல, அந்தப் பாவி உயிரை விடவும் இல்லை! அவன் தந்தை காசி சொன்ன பொய்யைப் போல, சுகந்தனின் நியாயமான காரணமும் பொய்யாகிப் போயிற்று!

அந்த நளனைப் போல, வீட்டையே காடாக்கி, சுகந்தன

கைவிட்டது மட்டும்தான் உண்மையாக இருந்து உறுத்துகிறது!

“ கைவிட்ட “தாக அவள் சொன்னதும் சரிதானே?

அந்த ஒரு மாதமும், அவளை யாரோ போல நடத்தி, எவ்வளவு வேதனைப்பட

வைத்துவிட்டான்! இந்த வீடு, காடு மாதிரிதான் தமயந்திக்குத் தோன்றியிருக்கும்!

இப்போது, என்ன செய்வது?

செய்வதற்கு ஒன்றுமில்லை என்பதுதான், சுகந்தனை மிகவும் பாதித்த விஷயம்!

மற்றபடி, என்ன வேண்டுமானாலும் செய்து, தன் அன்பை அவளுக்கு நிரூபிக்க, சுகந்தன் தயாராகத்தானே இருக்கிறான்!

ஒன்றும் செய்யமாட்டாமல், கைகால்களை முடக்கிக்கொண்டு, சும்மா இருக்கும் இந்த நிலைதானே, தாங்க முடியவில்லை!

ஒரே ஒரு சிறு நம்பிக்கை!

தமயந்திக்கு, அவன் மீது, ஆழ்ந்த காதல் உண்டு! அவனை ஒரேயடியாகப் பிரிந்துபோக, அந்த நேசம் ஒப்புக்கொள்ளாது!

அந்த நேசம், அவளது சுய கௌரவத்தை மீறி, அவளை அவனிடம் வந்து விடும் நாளை எதிர்பார்த்து, நம்பிக்கையோடு, கையைக் கட்டிக்கொண்டு காத்திருக்க வேண்டியதுதான்!

பெருமூச்சுடன் அடுத்த ஃபைலை எடுத்தபோது, “சா . .ர்!” என்றபடி, பியூன் வந்து நின்றான்.

“என்ன?” என்றான் சுகந்தன் எரிச்சலை அடக்கிக்கொண்டு.

முழுமையாக அடக்கப் படவில்லையோ, என்னனவோ, “ஒன்றுமில்லே, சார் . . “ என்றபடி, கையைக் கட்டிக்கொண்டு திரும்பி விட்டான் அவன்.

“ச்சு! பரவாயில்லை! வா. என்ன என்று சொல்லிவிட்டே போ!” என்றான் சுகந்தன்.

“அவுரு, சார்! அன்னிக்கு ஒரு நாள் அழுதுகிட்டே வரலை? அந்தப் பெரியவரு,

டிப் டாப்பா, படா ஸ்டைலா வந்திருக்கிறார், சார். “

ஒரு கணம் அசைவற்றுப் போனான் சுகந்தன்.

அதன்பின் மேஜை மேல் இருந்த பேப்பர் வெயிட்டை

உருட்டியபடியே, “யார்? யாரைச் சொல்லுகிறாய், முத்து?” என்று நிதானமாக வினவினான்.

“அந்தாளு பேரு, . . காசின்னு சொன்னருங்க!”

“ஓ! அவரா? . . .அவருக்காகத்தான் காத்துக் கொண்டே இருக்கிறேன்! பார் முத்து, அவரோடு கு. . அவருடைய குடும்ப விஷயமாகப் பேசவேண்டி இருக்கிறது! அதனால், அவர் வந்த பிறகு, நானாகக் கூப்பிடும்வரை, யாரையும் உள்ளே விடாதே!

நீ கூடக் கூப்பிடாமல் வராதே! “ என்று சொல்லி, அவனை அனுப்பி வைத்தான்!

“வாய்யா! வா! உனக்காகத்தானே, நானும் காத்துக்கொண்டு இருக்கிறேன்! உனக்காகவும், உன் மகனுக்காகவும்!” என்று சுகந்தன் உள்ளூரக் கறுவியபோது, “சார்,

அந்தாளுகூட, அப்படித்தான் சொன்னாரு, சார்! அவரு மகனைப் பத்தித்தான் முக்கியமா உங்க கிட்டே ஏதோ பேசணுமாம்!” என்று, எரிகிற தீயில் எண்ணையை ஊற்றிவிட்டுப் போனான் முத்து!

மகனைப் பற்றியா? அல்லது மகனுக்குச் சமாதி வைப்பது பற்றியா?

அவனுக்குத் தெரிந்த அளவில், காசி டிப்டாப்பாகத் தான் இருந்தான்! மயில் கண் வேஷ்டி, நல்ல மஞ்சளில் சட்டை, பூப்போட்ட கைக்குட்டை, கைக் கடிகாரம்!

செருப்புக்கூடப் புதிதுதான்!

சந்தோஷமாகத்தான் மனிதன் உள்ளே நுழைந்தான்! “பார்த்தியா, சார்! நீ கொடுத்த பணத்திலே, எப்படி அருமையாகத் துணிமணி வாங்கிருக்கேன்னு! இப்பல்லாம், ஊர்க் காவல்காரன் என்னைப் பாத்து, சலாம் அடிக்கிறான்!” என்று பெருமையாகப் பேசியவாறு சென்றவன், சுகந்தனை அவனது இடத்தில் காணாமல் திகைத்துத் திரும்பிப் பார்த்தான்!

கதவுக்குப் பக்கவாட்டில் நின்றிருந்து, காசி உள்ளே வந்ததும், கதவைத் தாளிட்டுவிட்டு, சட்டைக் கையை உள்ளே தள்ளியபடி, “ சலாம் என்ன பிரமாதம்? சீக்கிரமே, உனக்கு மலர் வளையமே வைக்கப் போகிறார்களே! அப்போது எவ்வளவு பெருமையாக இருக்கும்!” என்று கூறிய சுகந்தன், கையை முஷ்டியாக மடக்கிக்கொண்டு,

காசியை நெருங்கினான்.

காசி நடுங்கிவிட்டான்!

“அய்யோ! அய்யய்யோ! குத்தாதய்யா! நீ குத்தினா, நான் அப்படியே, தூளா உதுந்திருவேன்! அய்யா, சாமி, கெடுக்க வந்தப்போ சும்மா விட்டுட்டு, நல்லது பண்ண வர்றப்ப, உதைக்க வாரியே! என்னய்யா, நியாயம்? “ என்று அழுதான்.

“சே!” என்று அருவருப்புடன் கையை உதறிவிட்டு, “நீ என்ன, எனக்கு நல்லது செய்வது? என் முகத்திலேயே விழிக்காமல் இருப்பதுதான், உண்மையிலேயே நீ எனக்குச் செய்யக் கூடிய நன்மை!” என்றான் சுகந்தன்!

அடிக்காமல், அவன் தன்னிடத்துக்குப் போகவும், காசிக்குத் தென்பு பிறந்தது!

“ மெய்யாலும் சார்! உன் நல்லதுக்காகத்தான் ஒரு விசயம் சொல்ல வந்தேன்! என்னா, அதுக்குக் கொஞ்சம் பணமும் வாங்கிட்டுப் போகலாமின்னு வந்தேன்!”

அந்த ஐயாயிரம் கொடுத்தது தவறு போலும்!

“பணம் கிடையாது! ஒன்றும் கிடையாது! வெளியே போ! “

“இப்படிச் சொன்னால் எப்படிய்யா? அப்பறம், அந்தப் பொண்ணுக்கு ஏதாச்சும் ஆச்சுதுன்னா, உனக்குப் பரவாயில்லையா?”

“ஏ . .ய்!” என்று சுகந்தன் மீண்டும் எழவும், காசி பின்னடைந்தான்.

ஆயினும், “ஆசை இருக்குதில்லையா? பின்னே அடிக்க வராதே! பணத்தைக் கொடுத்து விசயத்தைத் தெரிஞ்சுக்கோ!” என்றும் சொன்னான்.

சுகந்தன் சற்று நிதானித்தான்.

இவன் பணத்தாசை பிடித்தவன் என்றாலும், அன்றைய மிரட்டலுக்குப் பிறகும் துணிந்து இங்கே வந்திருக்கிறான் என்றால், இவனிடம் ஏதோ விஷயம் இருக்கத்தான் வேண்டும் என்று தோன்றியது!

கூடவே, இது மகனின் அடுத்த சூழ்ச்சியாகவும் இருக்கலாம்!

ஆனால், உண்மையாகவே, தமயந்திக்கு ஆபத்து என்றால்?

இவனோ, பணத்துக்காக மகனையும் விற்கக் கூடியவன்! மகனின் திட்டம் ஏதோ தெரிந்து, அதை விற்றுப் பணம் பண்ணலாம் என்றும் வந்திருக்கலாம்!

“அப்படி என்ன விஷயம் உனக்குத் தெரிந்திருக்க முடியும்? “ என்றான் அலட்சியம் போலக் காட்டி!

“தெரியுமய்யா! ரெண்டு நாளைக்கு மின்னாடி வேலுப்பையன் வந்திருந்தான்! அப்போ . . .நீ பணம் கொடு! சொல்றேன்!”

பணத்திலேயே நின்றான் காசி.

“நீ சொல்லுகிற தகவல் பெறுமானமாக இருந்தால், தருகிறேன்! மற்றபடி, உன் மகன் வந்தான், போனான் என்பதற்றெல்லாம் எதுவும் தர முடியாது! “

சற்று யோசித்துவிட்டு, “சரிப்பா! நீ பெரிய மனுசன். ஏமாத்த மாட்டே! இந்தா, கேட்டுக்கோ! பாரு, பங்களூரிலே, அழகான பெண்ணுங்களை வச்சுப் பணம் பண்ணுகிற இடம் இருக்குதாம்! பெண்ணுங்களைக் கடத்திக்கிட்டுப்போய், அங்கே விற்கிற கூட்டமும் இருக்குதாம்! அவங்க மூலியமா, உன் பெண்டாட்டியைக் கடத்திக்கிட்டுப்போய், பலான இடத்திலே சேர்த்துவிட்டு, இவன் அங்கே போகவர, இருக்கப் போகிறானாம்! பணமும் கிடைக்கும்., அவளும் கிடைப்பா! அப்படீங்கிறான் பையன்! “ என்று தானறிந்த விவரத்தைத் தெரிவித்தான்.

சுகந்தனின்  முக மாறுதலைப் பார்த்துவிட்டு, “என்னமோப்பா!  எனக்குத் தெரிஞ்சதைச் சொல்லிவிட்டேம்பா! அவளைக் கண்ணுக்குள்ளே வைத்துக் காப்பாத்திக்கோ! என் பிள்ளை ஒரு மாதிரிப்பட்டவன்! அதனாலே, இதை நான்தான் சொன்னேன் அப்படீன்னு காட்டிக் கொடுத்திடாதே! என்னையே, அடிச்சுக் கொன்னாலும் கொன்னிடுவான்! நீயும் ஜாக்கிரதையா இரு!” என்றும் எச்சரித்தான்.

மேஜையறையைத் திறந்து, ஒரு பத்தாயிரம் ருபாய்க் கட்டை எடுத்து, மேஜை மேல் வைத்த சுகந்தன் அதிலிருந்து கையை எடுக்கவில்லை!

“காசி, இது பத்தாயிரம் ரூபாய்! இது உனக்குக் கிடைக்க வேண்டுமானால், எனக்கு இன்னும் சொஞ்சம் தகவல்கள் தேவை! சொல்கிறாயா? சொன்னால் தருவேன்!” என்று சற்று அழுத்தமான குரலில் கூறினான்.

காசியின் கண்களில் ஆசை மின்னல் அடித்தது!

மயக்க நிலையில் மகளைப் பார்த்ததும், ஞானலிங்கம் தம்பதியர் நடுங்கிப் போய்விட்டனர்!

அறிந்தவர்கள், அவள் சாலையில் கிடப்பதைப் பார்த்துவிட்டுத் தூக்கிவந்து பெற்றோரிடம் சேர்த்தனர்.

மருத்துவரிடம் அவளைக் கூட்டிக் கொண்டு போய், அவள் கண்ணைத் திறக்கிற வரையும், அவர்களுக்கு வேறு எந்த நினைவுமே இல்லை

எனலாம்!

மயக்க மருந்து என்று, டாக்டர் கூறவும் அவர்களுக்குத் திகைப்பு!

அதுவரை, நளினி எப்படியோ விழுந்து அடிபட்டு மயக்கம் வந்திருக்கிறது என்றே எண்ணி, எங்கெங்கே அடிபட்டதோ, இதன் பின் விளைவுகள் என்னவாக இருக்குமோ என்று கலங்கிக்கொண்டு இருந்தவர்களுக்கு, இது புதுக் கதையாக இருந்தது!

அங்கேயே எஸ்டேட் வைத்திருப்பவர்களின் மகளுக்குக் கூடக் கெடுதல் செய்யத் துணிந்தார்களா என்று பேசும்போதுதான், அவர்களுக்குத் தமயந்தியின் நினைவு வந்தது!

அவளைக் காணவே இல்லையே!

அதற்குள் கண்ணைத் திறந்துவிட்ட நளினி, நடந்ததைப் பெற்றோரிடம் கூற, அவளிடம் நம்பர் கேட்டு, உடனே சுகந்தனை , ஞானலிங்கம் செல்லில் பிடித்தார்!

காசியிடம் கேட்டறிந்த விவரங்களை வைத்துக்கொண்டு, தெரிந்த பெரிய போலீஸ் அதிகாரி ஒருவரின் உதவியோடு, அவனும் அதற்குள் பல ஏற்பாடுகளைச் செய்துவிட்டு,  அங்கே வரக் காரில்  கிளம்பியும் இருந்தான்.

வருகிற வழியில்தான் பேசியதும்.

அத்தோடு, இந்தப் பக்கம் ஞானலிங்கமும் தன் செல்வாக்கைப் பயன் படுத்தி ஏற்பாடுகளைத் துரிதப் படுத்த, கடத்தல் கார், திண்டுக்கல்லை அடையும்போதே, போலீஸ் சுற்றி வளைத்துவிட்டது!

அப்போதுதான் மயக்கம் ஓரளவு தெளிந்து, விரைந்து செல்லுகிற காரையும், அருகில் உட்கார்ந்து இளித்துக் கொண்டிருந்த ரத்தினவேலையும் பார்த்து, மலங்க விழித்துக் கொண்டிருந்தாள், தமயந்தி!

வெற்றி மிதப்போடு, அவளுக்கு அடுத்த டோஸ் மயக்கம் கொடுக்குமுன் சற்று மிரட்டிப் பார்த்து ரசிக்க எண்ணிய ரத்தினவேல், காரைப் போலீஸ் நிறுத்தவும், மிரண்டு குதித்து, தப்பித்து ஓட முயன்று, காலில் குண்டுக் காயம் வாங்கிக் கொண்டான்!

பெண்களைக் கடத்தும் மற்ற கூட்டமும் வகையாகச் சிக்கிக் கொண்டது!

நள்ளிரவுக்கு மேலாக எஸ்டேட்டை அடைந்த சுகந்தன், அங்கே அதிக நேரம் ஓய்வெடுக்க விரும்பவில்லை!

தமயந்திக்கு ஆபத்து என்று அறிந்ததும், போட்டது போட்டபடி விட்டுவிட்டு வந்திருப்பதாகவும், அலுவலகத்துக்குப் போயே ஆன வேண்டும் என்பதால், அதி காலையில் கிளம்புவதாகவும், வேலைகளை ஒதுக்கிக்கொண்டு, மீண்டும் வருவதாகவும்

அவன் சொன்ன விதத்தில், யாராலும் மறுத்துப் பேச முடியவில்லை!

"கிளம்பு தமயந்தி!" என்று அவன் கூற, அவளும் மறுக்கவில்லை!

ஞானலிங்கம் மட்டும் தன் டிரைவரையேனும் அழைத்துச் செல்லும்படி வற்புறுத்தினார்! "பாதி இரவு வரை ஓட்டியிருக்கிறீர்கள். போதிய ஓய்வின்றி, மீண்டும் முழுத் தூரமும் ஓட்ட வேண்டாம். தாஸ் ஓட்டட்டும்! சென்னை சென்றதும், ரயில், அல்லது பஸ்ஸில் அவனை அனுப்பி விடுங்கள். நீங்கள் காரில் கொஞ்சம் தூங்கினால், அங்கே போய் வேலையைப் பார்க்க வசதியாக இருக்கும்!" என்று அவர் கூறியதை, சுகந்தனும் ஒத்துக்கொண்டான்!

இரவோடு இரவாகத் தோட்டத்துப் பழங்கள், ஸ்ட்ராபெரி ஜாம் என்று வீட்டில் இருந்ததைத் தமயந்திக்கு எடுத்து வைத்தார்கள்!

தமயந்தியின் துணிமணிகளைப் பெட்டியில் அடுக்கியபோது, அழுக்கு, ஈரம் என்று, ஒன்றிரண்டு கிடப்பது நினைவு வந்தது!

"அவைகளை எல்லாம் அடுத்த முறை வருவீர்களே, அப்போது எடுத்துக் கொள்ளலாம்!" என்று நளினி சொன்ன விதத்தில் எல்லோரும் புன்னகை செய்தனர்.

"தமா தீர்க்கதரிசி ஆகிவிட்டாள்! சென்னைக்குக் கிளம்பப் போவதாக, அப்போதுதான் சொல்லிக் கொண்டிருந்தாள்! இடையில் என்னென்னவோ நடந்தபோதும், உடனே கிளம்பிவிட்டாளே!" என்று நளினி மேலும் கூற, சுகந்தன் சட்டெனத் திரும்பி மனைவியைப் பார்த்தான்.

லேசாக முறுவலித்துவிட்டுப் பெட்டிக்குள் எதையோ எடுத்து வைத்தாள் அவள்.

தாஸ் நல்ல காரோட்டியாக இருந்தார். வண்டியும் வசதியானது.

முந்திய நாள் மன உளைச்சலில் சோர்ந்திருந்த, இருவருமே, பயணத்தில் நன்கு உறங்கி விட்டனர்! விழித்திருந்த வேளையிலும், வேற்று மனிதனான காரோட்டியின் காது கேட்க இருவருமே எதையும் பேச விரும்பவில்லை!

சும்மா, பொதுவான ஓரிரண்டு வார்த்தைகள் பேசியதோடு சரி!

சென்னையை அடைந்ததும், தாசுக்குச் சில பொருட்களை வாங்கிக் கொடுத்து, பணமும் கொடுத்து அனுப்பிவிட்டு வீட்டை அடைந்தார்கள்!

வேலையாட்களுக்குச் சொல்ல வேண்டியதைச் சொல்லிவிட்டு, கைப்பிடியாய் மனைவியை அழைத்துக்கொண்டு அறைக்குள் சென்ற சுகந்தன் அவளை அப்படியே அணைத்துக்கொண்டான்.

அவளும் விலகவில்லைதான் என்றபோதும், “பார் தமா! நீ என்னுடன் பேசிப் பழகாவிட்டாலும் பரவாயில்லை! இந்த வீட்டிலிருந்து எங்கேயும் போகக் கூடாது! நான் போக விட மாட்டேன்! “ என்றான் பிடிவாதக் குரலில்!

அவன் தோளில் வாகாகச் சாய்ந்துகொண்டு, “நீங்களே விரட்டினாலும், நானும் போக மாட்டேன், சுகன்! ஆனால், இந்த ஒரு தரம் போனதால்தான் திரும்பி வரவும் தோன்றியது!” என்றாள் அவள்.

““உனக்காய்த் திரும்பி வரத் தோன்றுவதற்காக, இத்தனை துன்பங்கள் அனுபவிக்க வேண்டுமா? அப்பா! சமயத்தில் உன்னைக் காப்பாற்ற முடியாமல் போய் விடுமோ என்று எப்படித் தவித்துப் போனேன், தெரியுமா?” என்று உடல் சிலிர்த்தான் சுகந்தன்.

தலை தூக்கி, அவன் முகத்தைப் பார்த்தாள் தமயந்தி. “காப்பாற்ற . . ஊகூம். இல்லை சுகன், நேற்று, அதெல்லாம் நடப்பதற்கு முன்பாகவே, எனக்கு மனம் தெளிந்து போயிற்று! கிளம்பப் போவதாக நளினியிடம் சொல்லி, அதுபற்றி அவள் என்னைக் கேலி பேசிக்கொண்டிருந்தபோதுதான், இந்தக் கடத்தல் நடந்ததே!”

“அப்படியானால், சும்மா ஓர் ஆறுதலுக்காக, நளினி அப்படிச் சொல்லவில்லை?”

என்று மனைவி முகத்தைக் கூர்ந்து பார்த்தான் சுகந்தன்.

அவனை நேராகப் பார்த்து, “இல்லவே இல்லை! “என்றாள் மனைவி! “நேற்று சுமார் பத்து மணிக்கே, நீங்கள் சொன்ன மாதிரியே, நான் உங்களைப் புரிந்து கொண்டு விட்டேன். அதற்காகவே, நடந்தது போல இருந்தது, அந்தச் சம்பவம்!” என்றுரைத்து, அது பற்றிய விவரமும் சொன்னாள் .

“எவனோ ஒருவனின் சொல்லை நம்பி என்னைத் தவறாக நினைக்கலாமா என்று கொதித்துக்கொண்டே இருந்தது! ஆனால், ஒரு மரண வாக்குமூலமாக வந்ததைக் கூட,

உடனே நம்பிவிடாமல், நீங்கள் ஆதாரம் தேடிக் கொண்டல்லவா இருந்திருக்கிறீர்கள்!

அதிலிருந்தே, உங்கள் அன்பு எனக்குப் புரிந்திருக்க வேண்டும்!” என்றாள் .

“என் மீதும் தப்பு இருக்கிறது, தமயந்தி. அறிமுகமற்ற ஒருவன், தேடி வந்து சொன்ன போது, அதன் மெய்பொய் தெரிந்து கொண்டிருக்க வேண்டும்! அதை உண்மை என்று நம்பியது முட்டாள்த்தனம்! என்ன தொழில் செய்து என்ன? இன்னார், இப்படி என்று கண்டுபிடிக்கத் தெரியவில்லை என்று கூசிப் போயிற்று!” என்று வெகுவாக வருத்தப்பட்டான் அவன்!

“அதெல்லாம் ஒன்றும் இல்லை! பிள்ளை செத்துப் போனான் என்று, ஒருவன் அழுகிறபோது, சாவு சர்ட்டிஃபிகேட்டையா கேட்டுக் கொண்டிருக்க முடியும்? அதுவும், அந்தப் பாவி வேறு, செத்துவிடுவதாகப் புலம்பிவிட்டுப் போன பிறகு? பிள்ளையைப் பறிகொடுத்து நிற்கிறானே என்று பரிதாபம் உங்களுக்கு! மனிதன் என்றால், ஈவு, இரக்கம் இருக்கத்தானே வேண்டும்?” என்று தமயந்தி வாதாட, சுகந்தன் சட்டெனச் சிரித்தான்!

எதிரொலியாய் அவள் முகத்திலும் புன்னகை மலர, “என்ன சிரிப்பு?” என்று வினவினாள்.

“எனக்காக, என்னிடமே வக்காலத்து வாங்குகிறாயே!”

“பின்னே, நீங்கள் வருத்தப்பட்டால், என்னால் எப்படித் தாங்க முடியுமாம்?”

“என் வருத்தத்தைப் போக்க, வெறும் வாய்ப் பேச்சைக் காட்டிலும் அருமையான வேறு வழி இருக்கிறது. . . .”என்று குறு நகையுடன் கண் சிமிட்டினான் அவன்!

கிளுக்கிச் சிரித்தவண்ணம், அவன் மார்பில் முகத்தைப் புதைத்துக்கொண்டாள் ஆசை மனைவி!